நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 188 ஜன. 13 - 26, 2000 விலை ரூபா 10. 00



## களுத்துறைச் சிறை: வெறும் மோதலல்ல திட்டமிட்ட தாக்குதலே!



## மடு : கொலைக்களம்!

நான்கு குழந்தைகளை பறிகொடுத்த தாய்



குமார் படுகொலை:

## தொடரவிருக்கும் படுகொலைக்கான தொடக்கம்?

## தொடரும்

## பாலியல் வல்லுறவுக் கொலைகள்

ஒரு நவீன துட்டகெமுனுவின் துவம்சம்!

சாரதாம்பாள்: இன்னுமொரு பலி!

நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறி!



இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கள் இரவு தேசிய தொலைக் காட்சியில் செவ்வி வழங்கிய போது அதில் பல பத்திரிகை ஆசிரியர்களும் தாக்கப்பட்டனர். அவர்களில் சண்டே லீடர் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவும் ஒருவர்.

அவர் ஜனாதிபதி தன்னைப் பற்றி கூறியவற்றிற்கு 09.01.00 சண்டே லீடர் பத்திரிகையில் பதிலளித்த போது, பல விஷயங்களை வெளிக் கொணர்ந்திருந்தார். இங்கே அவற்றில் சிலவற்றை சுருக்கித் தருகின்றோம். (இது சம்பந்தமாக அவர் ஒரு புத்தகமே எழுதவுள்ளதாகவும் கூறியுள்ளார். இதன் பின்னணியைப் பார்க்கும் போது ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிந்த நிலைக்கே தள்ளப்பட்டுள்ளார். )

நான் கடந்த திங்கள் ஐ.ரி.என் வானொலியில் பேசியபோது அன்றிரவு சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றவிருந்த உரை பற்றி குறிப்பிடுகையில் இனிவரப் போகும் காலத்தில் நாட்டில் ஏற்படப்போகும் ஒரு தேசிய ரீதியிலான இணக்கப்பாட்டையோ அல்லது தேசிய ரீதியிலான பொருதலையோ அது காட்டுவதாய் அமையும் என்றேன். துரதிர்ஷ்டவசமாக அது இரண்டாவதையே கோடிக் காட்டுவதாக அமைந்தது.

தான் வகிக்கும் ஜனாதிபதிப் பதவி அவர் எதையும் சொல்வதற்கும் செய்வதற்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாத அளவுக்கு பாதுகாப்பு வழங்கினாலும் இவற்றை ஒலிபரப்பிய இலங்கை வானொலி, ரூபவாஹினி, ஐ.ரி.என் என்பவையும் இவற்றைப் பிரசுரித்த டெய்லிநியூஸ் ஆகியவையும் இந்த பாதுகாப்புக்குள் வர முடியாததால் நான் அவற்றிற்கு எதிராக மானநஷ்ட வழக்கு தொடரவுள்ளேன். மேலும் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் சந்திரிகா தன் பதவியை விட்டு எப்பொழுது நீங்குகிறாரோ அன்று அவருக்கு எதிராகவும் இதையே செய்யவுள்ளேன்.

இச்சந்தர்ப்பத்தில் எனக்கும் எனது சகோதரன் லால் விக்கிரமதுங்கவுக்கும் எதிராக, 1995 செப்டெம்பர் 03ம் திகதி பிரசுரிக்கப்பட்ட ஒரு கதை சம்பந்தமாக எடுத்த குற்றவியல் மான நஷ்ட வழக்குப் பற்றி விளக்குவது அவசியம். இவ் வழக்கை சந்திரிகா எமக்கெதிராக மேற்கொண்டிருந்தார்.

1995 செப்டெம்பர் மாதம் நான் சட்டமா அதிபர் செயலகத்திற்கு அழைக்கப்பட்டேன். நானும் சட்டத்தரணியாகவும் பத்திரிகையாளனாகவும் இருந்ததால் காரணம் அறிய ஆவலாய் இருந்தேன். அன்று சட்டமா அதிபரை நான் சந்தித்த போது அவர் பரிதாபமாக பின்வருவனவற்றை கூறினார். 'லசந்த நானொரு இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளேன். உண்மையில் வழக்குத் தொடர எந்தவித ஆதாரமும் இல்லை. அப்படியிருந்தும் உன்மேல் வழக்குத் தொடருமாறு கட்டளையிடப்பட்டுள்ளேன். நான் மறுத்தால் என்னால் சட்டத்துறையில் செய்யப்படவுள்ள ஏனைய செயல்களும் இல்லாமல் போய்விடும். நீ கவலைப்படாதே. நீ இதிலிருந்து விடுதலைப் பெற்றுவிடுவாய் " என்றார்.

இதன் பின்னர் நான் ஒரு முறை முன்னைய சட்டமா அதிபரும் பிரதம நீதியரசருமான சரத் நந்த சில்வாவை சந்தித்தபோது 'இலங்கை மக்கள் எவ்வாறு நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியும். ஒரு சட்டமா அதிபர் ஆதாரமில்லாமல் தான் மக்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டதாகக் கூறப்படும் போது?' என்று கேட்டேன். அவர் அதற்கு தான் அவ்வாறு பணிக்கப்பட்டிருந்தால் 'மறுத்திருப்பேன் ' என்றார்.

எவ்வாறாயினும் எமக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. இவ் வழக்கு நடைபெற்றபோது அதை விசாரித்த மேல் நீதிமன்ற நீதியரசருக்கு உத்தியோக ரீதியாக ஒரு காரும், ஜனாதிபதி நிதியிலிருந்து பணமும் வைத்திய சிகிச்சைக்காக அளிக்கப்பட்டது. இது பின்னர் பாராளுமன்ற உறுப்பினரான சரத் கொங்காகேயினால் அம்பலப்படுத்தப்படவே எமது வழக்கு மேல் குறிப்பிட்ட நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வெடுக்கும் வரை ஒத்திப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. அதன்பின்

⇨06


# மடு கொலைக்களம்!

முன்னைய ஐ.தே.க. ஆட்சியில் அரங்கேறிய படுகொலைகள் பற்றி பேசிக் கொண்டு ஆட்சி வந்த பொ.ஐ.மு. அரசு, ஐ.தே.க. விற்கு சற்றும் சளைக்காமல் இன்னும் அதன் எல்லைகளையும் தாண்டி மிகக் கொடூரமாக தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளை சமாதான முகமூடியுடன் செய்து வருகின்றது. இந்த சமாதானத்திற்கான யுத்தத்திற்கு இன்னும் ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் தமிழ் கட்சிகளும் இப்படுகொலைகள் பற்றி அனேகமாக ஒரு அறிக்கையுடன் கண்ணை மூடிக் கொண்டு விடுகின்றன.

இந்நிலையில் கடந்த வருடம் நவம்பர் 20 திகதி மடு தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில், இங்கு தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் 42 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அனேகம் பேர் சின்னக் குழந்தைகள். இக் கொடூரமான படுகொலைச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகள் கொல்லப்பட்டனர். வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இவர்களின் சடலங்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கூட இந்த நான்கு பிள்ளைகளின் தாய் தன் துயரங்களுடனும் அதிகாரிகளுடன் சண்டையிட வேண்டி ஏற்பட்டது. இதன் பின்பே அவர்களின் சடலங்கள் அந்தத் தாயிடம் ஒப்படைக்கப்பட்டது.

இநதப் படுகொலைகள் பற்றி உருப்படியான எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத சந்திரிகா அம்மையார் தேர்தலில் தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்கவில்லை என்று காய்ந்து கொள்வதில் என்ன நியாயம் உள்ளது.

தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த போதே தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கு கண்ணை மூடிக்கொண்டிருந்த சந்திரிகா அம்மையார் (தேர்தல் காலத்தில் நானும் உங்களைப் போல் ஒரு தாய் என ஒப்பாரி வைத்தவர்) இப்போது தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாத பெருமளவிலான சிங்கள மக்களின் வாக்குகளின் பலத்தில் மீண்டும் ஆட்சியேறி உள்ளார்.



ஷெல் வீச்சுக்கு இலக்கான மடு தேவாலய கட்டடம்



நான்கு குழந்தைகளை பறிகொடுத்த தாய்



கொல்லப்பட்ட பொதுமக்கள்



கொல்லப்பட்ட பொதுமக்கள்

நன்றி - நூலகத்திட்டம்



# குமாரின் படுகொலை ஜனநாயகத்திற்கு ஒரு சவால்!

குமார் பொன்னம்பலம் அவர்களுடனான எனது சந்திப்பு, எமது வாழ்க்கையிலும் அதன் பின்புலத்திலும் ஏற்பட்டுக் கொண்டிருந்த மூன்றுவித மாற்றங்களின் மத்தியில், ஏன் அதன் விளைவால் என்றும்கூட கூறலாம், நிகழ்ந்தது.

அதுவரை காலமும் தென்னிலங்கையின் அரசியல் தலைமைத்துவம் வட்டமேசைமாநாடு, பாராளுமன்றத் தேர்வுக்குழு போன்ற பல இழுத்தடிப்பு முயற்சிகளினால் இனப்பிரச்சி-னையை இந்தா தீர்க்கின்றோம் அந்தா தீர்க்கின்றோம் எனப் பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்தது. ஜனாதிபதி பிரேமதாஸ "ஈழம் தவிர எல்லாம்" என்று கூட பிரகடனம் செய்தார்.

இந்த முயற்சிகளை நாங்கள் முற்று முழுதாக நம்பாவிட்டாலும், எந்தப் பக்கத்திலும் இருந்து ஏதாவது விமோசனம் வராதா என்ற நப்பாசையில் இருந்தோம். ஆனால் 1993ம் ஆண்டு விஜேதுங்கவின் ஆட்சிக்காலத்தில் முதன்முறையாக 'தமிழ் பிரச்சினை என்று ஒன்றுமே கிடையாது, பயங்கரவாதப் பிரச்சினை ஒன்று தான் உள்ளது' என்னும் கருத்து ஆட்சிப்பீட மட்டத்தில் தெரிவிக்கப்பட்டு பரவலாக சிங்கள சமூகத்தினர் மத்தியில் அங்கீகரிக்கப்படலாயிற்று. ஏதோ பிரச்சினை இருக்கிறதோ செய்தோமோ என்றிருந்த நிலைமை பிரச்சினை என்று ஒன்றுமேயில்லை என்ற நிலைக்கு சரித்து விழுத்தப்பட்டது. இனப்பிரச்சினை, தீர்வை நோக்கியல்லாது அதற்கு எதிர்மாறான திசையில் போகத்தொடங்கியதை கலவரத்துடன் அவதானித்திருந்தோம்.

அதே வேளை, சில வருடங்களாக கிராம மட்டங்களில் ஆழமான சமூக வேலை செய்த அனுபவங்களின் பயனாக எனக்குள்ளும் சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. ஜனநாயகம், மனித உரிமைகள் போன்ற பதங்களைப் பற்றிய எனது விளக்கங்களையும் உணர்வுகளையும் பற்றி சிந்திக்க ஆரம்பித்-திருந்தேன். இக்கருத்துக்கள் மேலோட்டமாக உபயோகிக்கப்படும் பொழுது, எமது சமூகத்தில் வேரூன்றியிருக்கும் அதிகாரக்கட்டமைப்புக்-களையே தக்க வைத்துக் கொள்ளவும் நியாயப்படுத்தவும் (being pro-establishment) உதவுகின்றன என்ற முடிவுக்கு வரலானேன். குறிப்பாக, தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அரசினால் முன்னெடுக்கப்படும் யுத்தம் அதற்கு முகம் கொடுக்கும் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திலும் சகல விதத்திலும் வேறுபட்டது என உணரத் தலைப்பட்டேன். இச்சிந்தனை மாற்றங்களினால் அரசு சாரா நிறுவனங்களின் சமூக அபிவிருத்தித் துறையில் நான் அன்னியப்படுவது போல் உணர்ந்திருந்தேன்.

அந்நேரத்தில் குமார் பொன்னம்பலம் அவர்கள் அவருக்கென புதியதொரு அரசியல் தன்னடையாளத்தினை (Political Identity) வரையறுக்க முயன்று கொண்டிருந்தார். அதுவரையும் அவர் தனது தந்தையின் நிழலில் அவர் உருவாக்கிய கட்சிக்குள் அதன் ஐம்பது வருடம் பழமையான கொள்கைகளில் தனது அரசியல் வருங்-காலத்தினைத் தேடிக்கொண்டிருந்தவர். ஆனால் மேலே விவரிக்கப்பட்ட அரசியல் மாற்றங்களின் விளைவாக, அவை முன்வைத்த சவால்களை எதிர்கொள்ள தனக்கென ஒரு பாணியையும் பாத்திரத்தினையும் உருவாக்க முயன்று கொண்டிருந்தார்.

இந்தப் பின்புலத்தில், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டினை உலகுக்கு வெளிப்படுத்த கொழும்பில் தமிழ் மக்கள் ஒன்று கூடவேண்டிய அவசியத்தினை எனக்கு உணர்த்தி என்னையும் அதில் இணைத்துக் கொண்டார். இவ்வாறு எங்கள் இருவரின் தேவைகளும் சங்கமிக்கவே , 1994ம் ஆண்டு நாங்கள் ஒருங்கிணைந்து வேலை செய்யத் தொடங்கி-னோம். அந்த வருடம் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும், அதன் பின்பு கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவிலும் இணைந்து பணியாற்றினோம்.

கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவில் அவர் வகித்த பங்கு கணிசமானது. 1994 தேர்தலில் நான் சந்திரிகா மீது ஓரளவு நம்பிக்கை வைத்த போது "she will be the biggest hoax of the centuary" என்று உறுதியாகச் சாதித்தார். இவருடைய வாதங்களால் எங்கள் அறிக்கைகள் கூடிய தீர்க்க தரிசனத்துடன் வெளிவந்தன. அதன் பிறகு சந்திரிகா அரசு ஒரு போலிப் பொதியை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்த காலங்களில் திம்புக் கோட்பாடுகளில் தான் தமிழ் மக்களின் விடிவுக்குரிய கொள்கைகள் நங்கூரமிடப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அப்பொழுது கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு ஒரு வெற்றிகரமான அரசியல் கூட்டத்தை நடாத்தி பத்து வருடங்களாக எல்லோரும் மறந்திருந்த திம்புக் கோட்பாட்டை மீண்டும் அரசியல் மேசையில் வைத்தது. குமார் பேச்சாளரானால் எங்கள் கூட்டங்கள் கலகலப்பாக நடக்கும். மண்டபம் நிறைந்து வழியும். வந்தவர்களுடைய எதிர்பார்ப்புக்களை ஏமாற்றாது செல்லத் தமிழில் சுவையாக உரையாற்றுவார். அவர் முன்வைக்கும் சுவையான எதிர்வாதங்களைக் கேட்டு கரகோஷம் பிறக்கும்.

பொதுவாகவே அரசியல்வாதிகளைப் பற்றிய எனது எடுகோள்கள் குமாரின் விடயத்தில் மாறுபாடாயிற்று. அவர் மிகவும் எளிமையானவர், கள்ளங் கபடம் இல்லாது தான் நினைத்ததைப் பேசுவார். நேர்மை நிறைந்தவர், அதே சமயத்தில் ஒரு சிறுபிள்ளைத்தனமான பிடிவாதமும் இருந்தது. கண்டனக் கணைகள் கொண்ட அவர் எழுத்துக்களைப் பார்த்தால் நேரடியாக கடுமையாகத் தாக்கிப் பேசுபவர் என்று பலர் நினைக்கலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில், யாராயிருந்தாலும் பணிவுடன் தனது கருத்துக்-களைத் தெரிவிக்கும் அடக்கமுள்ள ஒருவரைத் தான் கண்டோம். அவரை நோக்கி வரும் விமர்சனங்களையும் குறையில்லாமல் ஏற்றுக் கொள்வார். உண்மையில் அவர் இவ்வாறு இருந்திருக்காவிடில், எதையும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் நோக்கும் எனக்கு அவருடன் ஒன்றாக வேலை செய்திருக்கவே முடிந்திருக்காது. பலவிடயங்களில் எனது மார்க்ஸியக் கண்ணோட்டம் முரண்பாடு-களைத்தான் தோற்றுவித்திருக்கும். ஆனால் குமார் எதையும் கற்றுக் கொள்ளத் தயாராக இருந்தார். அடிக்கடி நான் அரசியலில் ஒரு மாணவன் என்றுகூடக் கூறிக்கொள்ளுவார். மொத்தத்தில், எங்களிடையே ஒரு பயனுள்ள நட்பு மலர்ந்தது.

இந்தக் காலகட்டத்திற்தான் தனக்கெனவோர் பாத்திரத்தினை தமிழ் அரசியலில் வகுத்துக் கொள்வதில் வெற்றியும் கண்டார் குமார். இராணுவம், அரசியல் என்ற இரட்டைக் கிளைகளில் தாங்கப்படும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில், தென்னிலங்கைக் களத்தில் நிகழ்த்தப்பட்ட அரசியலினைத் தனியொருவராகத் தாங்கிக் கொள்ள ஆரம்பித்தார். அத்துடன் அவருக்கு அதற்குரிய ஒருவித அரசியல் பதவிகளும் இருக்கவில்லை. இது மகத்தான சாதனைதான். ஏனெனில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீது அதிகூடிய அடக்குமுறையினை இந்த அரசு 1990களின் ஆரம்பம் முதல் பிரயோகிக்கத் தொடங்கியிருந்தது. தென்பகுதி மனித உரிமைவாதிகள் விடுதலைப் புலிகள் பற்றிச் செய்த பிரச்சாரங்களினாலும், அரசு இனப்-பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக முத்திரை குத்தக் கிளம்பியதனாலும், சிங்கள மக்கள்கூட இப்போராட்டத்தை அசுரத்தனமான-தொன்றாகப் (demonising) பார்க்கத் தொடங்கி-யிருந்தனர். இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஜனநாயகம், தேசிய விடுதலைப் போராட்டம் என்பது பற்றி அங்கீகரிக்கப்பட்ட கருத்துக்கள் ஒரு பூர்ஷூவா தாராண்மைவாதிகளினால் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்ட கருத்துக்-களாக, எந்த அரசினதும் கட்டமைப்புக்களை நிலை நிறுத்தும் கருத்துக்களாகவே இருந்ததனால், தங்களுடைய ஆயுதப் போராட்டத்தினை நிலைநிறுத்தும் விழுமியங்களைப் பற்றி தமிழ் மக்களினால் வாய் திறந்து பேச முடியவில்லை.

அப்படிச் செய்தால் அராஜகவாதி, பயங்கரவாதத்தை ஆதரிப்பவர் என்ற பழிச்சொல்லே தலைக்கு மேல் இடியென இறங்கிற்று. இந்தப் பின்னணியில், தென்பகுதியில் ஈழப் போராட்டத்தைப் பற்றிய விவாதங்களைத் தொடர்வது இலகுவாக இருக்க-வில்லை. ஆனால் குமார் இக்-கடமையை அநாயாசமாகச் செய்தார். மற்றவர்கள் ஏற்றுக் கொண்டார்களோ இல்லையோ, தன் கருத்துக்களைக் கூற அவர் பின்னிற்கவில்லை.



குமார் பொன்னம்பலம் அவர்கள்

> 'நான் இறக்கும்வரை எனது மனச்சாட்சிப்படி தான் நடப்பேன். நீதியும் நியாயமும் நிலைநிறுத்தப்பட வேண்டுமேயன்றி இந்த அடிப்படைகளுக்கு சமரசமே கிடையாது'

பிற அரசியல்வாதிகளைப்போல் பதவிகளோ அல்லது அதிகாரத்திலுள்ளவர்களின் கடைக்கண் பார்வையோ அவருக்குத் தேவைப்படவில்லை. பிறகென்ன, காற்றுக்கென்ன வேலி? கடலுக்கென்ன மூடி? தமிழ் தேசியத்தின் சுய நிர்ணய உரிமை என்கின்ற வாதத்தை சென்றவிடமெல்லாம் நிலைநாட்டினார். தமிழ் தேசியவாதம் சமன் புலிகளின் பயங்கரவாதம் என்ற கருத்து தென்பகுதியில் வேரூன்றி-யிருந்ததனால் இவர் எதிர்நோக்கிய எதிர்ப்புக்-கள் ஏராளம். இன்னொருவரெனில் கைவிட்டி-ருக்கும் நிலையே ஏற்பட்டிருக்கும். ஆனால் அஞ்சா நெஞ்சமும் வாக்கு நேர்மையும் குமாரின் ஆயுதங்களாக இருந்ததனால், சிங்கள மக்கள் மத்தியிலிருந்தும் அரசு தரப்பிலிருந்தும் வந்த எதிர்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் ஒரு பொருட்டாகக்கூட மதிக்கவில்லை. உண்மையில் தெற்கின் அரசியலின் சிறுபிள்ளைத்தனமான போக்கினைப் பரிகசித்தார். இவர்கள் இருக்கும் நிலைமையில் ஈழம் ஒன்றே வழி எனப் பகிரங்கமாக அறைகூவல் விடுத்தார். நண்பர்களும் உறவினர்களும் அவர் பாதுகாப்பு எண்ணி எச்சரிக்கை பல செய்தும் அவர் செவிசாய்க்கவில்லை. 'நான் இறக்கும்வரை எனது மனச்சாட்சிப்படி தான் நடப்பேன். நீதியும் நியாயமும் நிலைநிறுத்தப்பட வேண்டுமேயன்றி இந்த அடிப்படைகளுக்கு சமரசமே கிடையாது' என்னும் தன் கொள்கையில் உறுதியாக நின்றார்.

இந்த நிலைப்பாட்டினால் அவர் நேரடியாக சாதித்ததைவிட, தமிழ் மக்கள் கண்ணோட்டத்தில், மறைமுகமாகச் சாதித்தது இன்னும் காத்திர-மானது. அரச பயங்கரவாதத்தினால் பயந்து தூங்கியிருந்த தமிழ் சமூகம் விழிப்புக் கொள்ள-லாயிற்று. கணைகளையும் வெடிகளையும் தாங்க முன்னால் குமார் இருக்கின்றார் என்ற தைரியத்தில் அவர் பின்னே அணிவகுத்தவர்கள் பலர். கொழும்பில் பல தமிழ் அமைப்புக்கள் அரசியல் ரீதியாக இயங்கத் தொடங்கின.

எமக்கெல்லாம் குமார் கவசமாய்த் திகழ்ந்தார். இது மட்டுமல்ல. சிறுபான்மையராய் அடக்கு முறைக்குள்-ளாக்கப்பட்டு ஊமை-களாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தாங்கள் சொல்ல நினைத்-ததையெல்லாம் துணிவாகச் சொல்ல ஒரு தலைவன் கிடைத்தானேயென்ற திருப்தியும் மன-நிறைவும் ஏற்பட-லாயிற்று. தன்னுடைய மனச்சாட்சிப்படி நடக்கத் துணிந்தவர் இலங்கை முழுவது-மிருந்த தமிழ் மக்களின் மனச்-சாட்சியாக மாறிய வரலாற்றினை நாம் கண்டோம். தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக நடவடிக்-கைகளின் மீள் உயிர்ப்பிற்கான வித்-துக்களைத் துவினார் குமார். இங்குதான் புதியதொரு அரசியல் பாதையை வகுக்க நின்ற எனது தாகமும் தணிந்தது. புதிய வரலாறு படைக்க எங்களில் பலர் துணிந்தோம்.

இது மட்டுமல்ல. சுற்றி வர கைதுகள் நிகழ்ந்து கொண்டிருந்த இலங்கைச் சூழலில் குமார் பொன்னம்பலம் அவர்கள் செய்த உதவி-கள் ஏராளம். எங்கும், எப்பொழுதும், யாரா-யிருந்தாலும், கைது செய்யப்பட்டால் நாங்கள் அவரைத் தான் நாடுவோம். அழைத்த குரலுக்கு ஓடி வந்து உதவிகள் புரிந்தவர் அவர். எத்தனை வழக்குகள் வாதாடி குற்றமற்ற இளைஞர்களையும் யுவதிகளையும் அவர் விடுவித்திருப்பார். இதற்கு ஒரு கைம்மாறும் அவர் எதிர்பார்க்கவில்லை. இவரது இழப்பு தமிழ் அரசியல் வானில் மட்டுமல்ல, எம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு வெறுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

குமாரின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவின் அறிகுறி. இனியும் தமிழ் அரசியல் ஜனநாயகத் தளத்தில் விவாதிக்கப்பட அனுமதிக்கப்பட மாட்டாது என்று தமிழ் மக்களுக்கு இந்த அரசு விட்ட சவால் இது. அவர் தியாகம் வீண்போகக்கூடாதெனில் கடந்த பத்து வருட வரலாற்றின் பாடங்களை நாம் மீட்டிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாவோம். இதில்தான் எங்கள் மீட்சியே தங்கியுள்ளது.

- சாந்தி சச்சிதானந்தம்

நன்றி - நூலகத்திட்டம்




# 1999: 36 ஊடகவியலாளர்கள் படுகொலை

சன்ஸ் ஃபுறொன்ரியர்ஸ் தகவலாளர்களின்படி 1999ல் 36 பத்திரிகையாளர்கள் தம் கடமையில் ஈடுபட்டிருந்த போது கொல்லப்பட்டதோடு 446 பேர் கைது செய்யப்பட்டும் 653 பேர் தாக்கப்பட்டோ, பயமுறுத்தலுக்குஉள்ளாக்கப்பட்டோ உள்ளனர். மொத்தம் 357 பேர் தடை செய்யப்பட்டும், இடைநிறுத்தம் செய்யப்பட்டும் உள்ளனர். 1999ம் ஆண்டு டிசெம்பர் 28ம் திகதி 85 பத்திரிகையாளர்கள் சிறையில் தள்ளப்பட்டிருந்தனர். (09 பேர் எத்தியோப்பாவில்) காரணம், இவர்கள் தமது நடவடிக்கையான பொது மக்களுக்குத் தகவல் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதே. 20 கோடி மக்களைக் கொண்ட 20 நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் என்பதே இல்லை. இன்னும் 70 நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு மதிப்பு அளிப்பது என்பதே நிச்சயம் அற்ற ஒன்று.

1999ல் சிறந்த பத்திரிகையாளர்கள் தொகை 1998ல் இறந்தவர்களை விட இரு சந்தேகத்தில் கொன்றனர். கொலம்பியாவில் ஆறு பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் அதி தீவிர ஆயுத அமைப்புகளுக்குப் பலியாகினர். இவர்களில் அமைதிக்காகப் பாடுபட்ட, கொலம்பியாவின் பத்திரிகை உலகின் முன்னுதாரணமாக விளங்கிய நகைச்சுவையாளர் ஜெயிம் காசனும் (Jaime Garzon) உள்ளடங்குவர். இவர் 13ம் திகதி பொகொராவில் (Bogota) மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜேர்மனிய சஞ்சிகையான ஸ்ரேர்ன் (Stern) இன் விஷேட நிருபர்களாக விளங்கிய கப்றியல் குறுனர் (Gabriel Gruner), வோல்கர் கிறேமர் (Volker Kramer) ஆகியவர்கள் கொசோவோவில் கொல்லப்பட்டனர். ஐ.நா. சபையின் அமைதிப் படை இங்கு பிரவேசித்த போது, என்ன காரணம் என்று புலப்படாத சூழலில் இவர்கள் கொல்லப்பட்டனர். ஸ்ரேர்ன் சஞ்சிகையின் புலனாய்வுப்படி,



மடங்காகும். 1998ல் 19 பேரே இறந்தனர். கூடுதலானவர்கள் இறந்ததற்குக் காரணம், உலகெங்கும் வியாபித்துள்ள ஆயுதப் போராட்டமே. யுத்தக் கெடுபிடி வலயங்களில் 28 பத்திரிகையாளர்கள் இறந்தனர். கூடுதலானவர்கள் இறந்ததற்குக் காரணம் உலகெங்கும் வியாபித்துள்ள ஆயுதப் போராட்டமே. யுத்த கெடுபிடி வலயங்களில் 28 பத்திரிகையாளர்கள் இறந்தனர். சியரா லியோனில் 10 பேரும், யுகோஸ்லாவியா சமஷ்டிக் குடியரசில் 06 பேரும், கொலம்பியாவில் 06 பேரும், செச்னியாவில் 03 பேரும், கிழக்குத் திமோரில் 02 பேரும், லெபனானில் ஒருவரும் கொல்லப்பட்டனர். 06ம் திகதியிலிருந்து, ஜனவரி 12 வரை சியரா லியோனில் இருந்த புரட்சிகர ஐக்கிய முன்னணிக் (RUF) கிளர்ச்சிக்காரர்கள், அரசாங்கத்தோடு ஒட்டியிருந்த பத்திரிகையாளர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இறந்துபோன 09 பேர் கிளர்ச்சிக்காரர்களால் கொல்லப்பட்டவர்களாவர். தனியாருக்குச் சொந்தமான 'ஸ்ரான்டர்ட் ரைம்ஸ்' தினசரியின் உதவி ஆசிரியர் போல் அபு மன்சார்ட் இப்படிக் கொலை செய்யப்பட்டவராவர்.


41 வயது நிறைந்த இவர், தனது மனைவியோடும், பிள்ளைகளோடும் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது RUF கிளர்ச்சிக்காரர்கள் அவர்களைக் கூட்டிச் சென்று கொன்றனர். சர்வதேச ஊடகத்தின் பிரதிநிதிகளைக் கொல்லவும் இவர்கள் தயங்கவில்லை. அமெரிக்க செய்தி முகவர் நிலையமான அசோஷியேட்ட் பிரஸ் உடன் சம்பந்தப்பட்ட மைல்ஸ் ரயர்னி (Myles Tierney) என்பவரை RUF கிளர்ச்சிக்காரர்கள் நீலத் தலைக் கவசம் அணிந்து வந்து கொன்றனர்.

அடுத்த கொலைக்கு எகோமொக் (Ecomog) என்னும் மேற்கு ஆபிரிக்க அமைதிப் படை காரணமாய் இருந்தது. அவர்கள் அஃபிறிகன் சம்பியன் (African Champion) சஞ்சிகையின் ஆசிரியரான அப்துல் ஜுமா ஜாலோ என்பவரை RUF கிளர்ச்சிக்காரர் என்ற சேர்பியாவுக்குப் பின்வாங்கிச் சென்ற அதி விஷேட பரா மிலிற்றறி படையினரால் இவர்கள் கொல்லப்பட்டனர். கிழக்குத் திமோரில் கொலை செய்யப்பட்ட இரு பத்திரிகையாளர்களுக்கு இந்தோனேஷிய இராணுவமே பொறுப்பு. அண்மையில் செச்னியா மீது ரஷ்யப் படையெடுப்பின்போது, மூன்று உள்ளூர் நிருபர்கள் கொல்லப்பட்டனர். இன்னும் இலங்கை, இந்தியா, துருக்கி போன்ற நாடுகளில் தீவிரவாதக் குழுக்களின் இலக்காகப் பத்திரிகையாளர்களே உள்ளனர். நைஜீரியாவில் மூன்று பத்திரிகையாளர்கள், அங்கு நடந்த இனக் கலவரங்கள் பற்றிய செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த போது கொல்லப்பட்டனர்.

1999ல் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்களின் தொகை ஒப்பீட்டளவில் சிறிது குறைவே. 1999 டிசெம்பர் 28ல் 85 பத்திரிகையாளர்கள் சிறையிலிருந்தனர். ஆனால், 1998இன் இதே காலப் பகுதியில் 93 பேர் சிறையில் இருந்தனர். ஆனால், இந்தப் புள்ளி விபரம் ஏனைய சில நாடுகளில் நடந்த அடக்குமுறை பற்றிய முழு உண்மையாகவும் கொள்ள முடியாது. ஜனநாயகக் குடியரசான, கொங்கோவில் 1999ல் 40 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுத் தனித் தனிச் சிறைகளில் வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், இந்த வருட முடிவில் இன்னும் மூன்று பேர் மாத்திரமே அங்கு சிறையில் உள்ளனர். 1997இல் லோறன்ற் டிசயர் கபிலா ஆட்சிக்கு வந்ததிலிருந்து 100 பத்திரிகையாளர் வரை சிறிது கால அல்லது நீண்ட காலச் சிறைவாசத்திற்கு உள்ளாகியிருந்தனர். கியூபாவில் 1999ல் 46 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். சிலர் பலமுறை இத்தண்டனைக்குள்ளாகினர். இப்பொழுது, இந்த வருட முடிவு வரை மிகச் சிலரே சிறையில் உள்ளனர். துருக்கியிலும் இதே நிலை தான். 1999இல் 19 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் கண்டனர். இன்னும் 87பேர் கைதும் செய்யப்பட்டனர்.

## கடவுளின் பெயரால்...

காட்சி ஆரம்பமாகின்றது. இருள். மிகவும் தேவைப்படும் சூழலுக்கேற்ற நிசப்தம். மொஹெஞ்சதாரோ சிற்பம் ஒன்று திரையில் சுற்று வட்டமாக காட்டப்படுகின்றது. மிகப் பருத்த மார்பகங்கள். பருத்த பிருஸ்டங்கள். பெரிய வயிறு. அவலட்சணமான முகம். சாதாரண பெண் என்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் எதுவும் அற்ற கண்களிலிருந்து தவிர்க்கப்பட முடியாத சிற்பமாக வியாபித்து நிற்கின்றது.



- ✔ பாரிய வெறியாட்டம் திரையில். ஒரே சிவப்பு மயம். கூச்சல். ஏன் என கேள்வியெழுப்ப முடியாத பல விம்பங்கள். படிமங்கள். ஆணாதிக்க வெறி.

  "நாங்கள் என்ன பெண்களா? அவர்களுக்கு போய் சொல்லுங்கள் சேலை கட்டச் சொல்லி. சேலை கட்டுபவர்கள் தான் பாவிகள். அவர்களைப் போன்ற வெட்கமற்றவர்களுக்குத் தான் சேலை வேண்டும். எமக்கல்ல."

*பி.கு:*

சேலை ஒரு கலாசார சின்னம்.

பெண்கள் தமது கலாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்த கட்டாயம் விரும்பியோ விரும்பாமலோ சேலை அணிதல் வேண்டும். மேற்கூறப்பட்ட கூற்று அயோத்திப்பிரச்சினையை தீர்ப்பது பற்றி ஒருவர் கூறிய கருத்து பற்றிய ஒரு அபிப்பிராயம்.

- ✔ மங்களகரமான அடையாளங்களுடனான சதிப்பூஜை. பெண் மதத்தின் பெயரால் புனிதமாக்கப்படுகின்றாள். ரூப்கன்வர் என்ற பெண், அங்கு தீயில் கணவனின் பெயரில் சிதைவுறுகிறாள். புனிதமாக்கப்பட்ட அவளை ஆண்கள் ராஜமாதாவாக கண்ணீர் மல்க ஏற்றுக் கொள்கின்றனர்.
- ✔ "எங்கள் வேலை கணவனைப் பார்த்துக் கொள்வது தானே. பாருங்கள் அவள் இப்பொழுது புனித தெய்வமாக்கப்பட்டுவிட்டாள். இவ்வாறான வாய்ப்பு யாருக்கு கிடைக்கும். அவள் இப்பொழுது ஒரு கடவுள்"

  - ஒரு பெண்ணின் கருத்து

  "நான் என் பெண்களை படிப்பிக்கின்றேன். ஆனால் அவர்கள் படிப்புக்கேற்ற கணவர்கள் கிடைப்பார்களா என்பது சந்தேகமே. எனினும் சதிப்பூஜை பற்றி என்ன சொல்ல? மனைவி இறந்ததும் கணவன் மறுமணம் செய்து கொள்கின்றான். ஆனால் பெண்கள்? கணவன் இறந்ததும் தான் பெண்கள் பலமாக வாழ முனைய வேண்டும். முன்னரை விட பலமடைய வேண்டும்"

  - இன்னொரு பெண்

  "அவள் இறந்தது எமக்கு வருத்தத்தை தந்தாலும், அவள் புனிதமானவளாக மாறியது சந்தோசத்தையே தருகின்றது. பாருங்கள் அவளுக்கு எவ்வளவு பெருமையென்று. அவளுக்கென ஒரு கோவிலும் கட்டப்பட்டுள்ளது. எங்களுக்கு சன்மானமும் கொடுத்தார்கள். எங்கள் குடும்பம் ஊரில் தலைநிமிர்ந்து நிற்கின்றது."

  -ரூப்கன்வரின் அண்ணன்

- ✔ ஒரு சட்டமிடப்பட்ட புகைப்படம். அதில் சிதையொன்று. ரூப்கன்வர் சிதையில் மங்களகரமாக கிடக்க சிதைக்கு பக்கத்தில் உள்ள மரத்தின் பின்னணியில் இருந்து காளிமகாதேவி கையை நீட்டி ஆசீர்வதிக்கின்றார். அவரின் கையில் இருந்து விபூதியும், குங்குமமும் சிதையில் உள்ள பெண்ணின் மீது பொழிகின்றது. அந்த புகைப்படத்தை கட்டிப்பிடித்துக்கொண்டு ஒரு பெண்மணி ஆனந்த பரவசத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டிருக்க பின்னணிக்குரல் கேள்விக் கேட்க ஆரம்பிக்கின்றது. இந்தப் படம் போலியானது என்கின்றது. அப்பெண் வன்மையாக மறுக்கின்றாள், அந்த கட்டிப் பிடித்த புகைப்படத்துடன். இந்த படத்தில் காளியின் படம் ஒட்டப்பட்டுள்ளதை நீங்கள் அறியவில்லையா? அப்படம் போலியானது உங்களுக்கு விளங்கவில்லையா? கேள்விகள் அடுக்கப்படுகின்றன. ஆனால் பதில்கள் எவற்றிலும் மாற்றமில்லை.

ஆனந்த் பட்வர்த்தனின் குயவாநசஜி ளுழவெ ரு ர்ழடல றுயச விவரணத்திரைப்படத்தில் தாம் இத்தனை ஒளிஓவியங்கள், ஆர்ப்பாட்டங்கள்,அவலங்கள் எல்லாம்.

கடந்த 1999 நவம்பர் 02 தொடக்கம் 05ம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப திரை அரங்கில் அவரது திரைப்பட விழா இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. விபவி கலாசார நிலையம், சமூக விஞ்ஞானிகள் சங்கம் போன்ற இதர அமைப்புகள் இணைந்து இந்த விழாவினை ஒழுங்கு செய்திருந்தன.

விழாவில் In the Name of God, In Memory of friends, Father, Son & Holy War, Narmadha Diary, Bombay: Our City ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பட்டிருந்தன. திரைப்படங்களின் முடிவில் ஆனந்த் பட்வர்த்தன் அவர்களின் திரைப்படம் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

ஆனந்த் பட்வர்த்தனின் திரைப்படங்கள் அனைத்தையும் கண்டு களிக்கும் வாய்ப்பு கிட்டாத போதிலும், அவரது In the Name of God, Father, Son & Holy War ஆகிய திரைப்படங்களை பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. இரண்டு விவரணங்களிலுமே மத வன்முறை தான் அடிப்படை. மத வன்முறையின் தீவிரம், அதனால் பாதிக்கப்படும் பெண்கள் என்பன குறிப்பிட்டுச் சொல்லக் கூடியன எனலாம். ஆரம்பத்தில் விபரித்துக் கூறப்பட்ட காட்சிகள் யாவும் பெண்கள் எங்ஙனம் இந்த கருத்தியலுக்குள் ஈவிரக்கமின்றி அகப்பட்டுக் கொள்கிறார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

ராஜஸ்தானில் இடம்பெற்ற ரூப்கன்வரின் கொடுமை பற்றி எத்தனையோ பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வாசித்தறிந்திருந்த போதிலும் பட்வர்த்தன் அவர்களின் விவரணம் கொடூரத்தை கண்முன் நிருபித்துக் காட்டுகின்றது. பின்னணி இசை என்பனவும் காட்சித் தொகுப்பும் அவ்வாறே. இவையெலாம் இறுதியில் சிறிது சோகத்தை தெளித்து விட்டு செல்கின்றதெனலாம். இது ஒரு புறமிருக்க மத்தின் பெயரால் தனது கருவளத்தை - குறிப்பாக ஆண் குழந்தையை- உறுதிப்படுத்த தன் கணவனுடன் கோயில் கோயிலாக சளைக்காது ஏறி இறங்குகிறார்கள் பெண்கள். அதற்கான அவரது தர்க்கங்களை மிகவும் ஆர்வத்துடன் நியாயப்படுத்திக் கொள்கிறார்கள்.

In the Name of God திரைப்படத்தில் மத வன்முறைகளினால் பெண்கள் பாதிக்கப்படும் விதம் பற்றி அச்சொட்டாக காண்பிக்கப்படுகின்றது. மதத்தின் பெயரால் பெண்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாகின்றனர். குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ள பிள்ளைகளும் வரிந்து கொண்டு ஓடுகின்றார்கள். வன்முறையில் இறந்த கணவன்களுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் கண்ணீர் விடுகின்றார்கள். தன் உடமைகளை இழந்து விட்டுத் துடிக்கின்றார்கள். பாபர் மசூதி கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தலித்திய பெண் தன் நம்பிக்கைகளை தகர்த்தெறிகிறாள் இவ்வாறு," இந்தச் சமூகம் எங்களுக்காக என்ன செய்து விட்டது. இந்தக் கடவுள் எமக்காக என்ன செய்து விட்டார். பாபராயினால் என்ன ராமராயினால் என்ன நாங்கள் இந்த சாக்கடைக்குள் எல்லாவற்றையும் இழந்து விட்டு, எங்கள் அடையாளங்களை தொலைத்து விட்டு" என்கிறார்.

பட்வர்த்தன் அவர்கள் சமூகத்தில் எந்த ஒரு பிரச்சினையின் போதும் குறிப்பாக மறைமுகமாக பெண்களே ஈவிரக்கமன்றி பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர் என தெளிவுறுத்துகின்றார். அல்லது அவர் கூறவந்த விடயங்களுடன் இந்த நிகழ்வும் திரைப்படத்தில் தொடர்ந்து தவிர்க்க முடியாமல் துரத்தி வருகின்றது எனக் கொள்ளலாம். ஏனெனில் இவ்விரு திரைப்படங்களிலும் அவர் மத வன்முறையையும், தீவிரவாதத்தையும், பாசிசத்தையும், அராஜகத்தையுமே வெளிக்காட்டும் முறைகளையே அவர் கைக் கொள்கின்றர்.

எவ்வாறாயினும், ஒளிக்கலவையிலும், ஒலிக்கலவையிலும் ஒரு விவரணத்திரைப்படத்தினால் பெண்கள் மீதான மறைமுக அழுத்தங்களை, அடக்குமுறைகளை, கொடுமைகளை பட்வர்த்தன் அவர்கள் புரிய வைத்துள்ளார். அவருக்கு பாராட்டுக்கள்!

நன்றி - நூலகத்திட்டம்



# குமார் படுகொலை: தொடரவிருக்கும் படுகொலைகட்கான தொடக்கம்?

'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' கட்சியின் தலைவரும் கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண ரெரஸ் இல் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் வெறும் 'அரசியல் படுகொலைகளில்' ஒன்று என்று ஒதுக்கிவிடப்படக்கூடிய ஒன்றல்ல.

வெளிப்படையாக தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக சட்டவாத மரபுக்குள் நின்று போராடும் அரசியல் சகாப்தத்திற்கு இனிமேல் தெற்கிலும் இடமில்லை என்பதை கட்டியம் கூறும் ஒரு படுகொலையாகவும் அது அமைந்துள்ளது.

இந்தப் படுகொலைக்கு உரிமை கோரிய 'புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி' என்ற பெயரிலான அமைப்பு குமார் பொன்னம்பலத்திற்கு 'துரோகிப்' பட்டம் வழங்கி கௌரவித்துள்ளதுடன் 'டிசெம்பர் 18 குண்டுத்தாக்குதலின் பின் பிரித்தானியா சென்ற ஜனாதிபதிப் பற்றி தமிழ் நெட் இணையத்திற்கு அவர் வழங்கிய உரை, ஜனவரி 3ம் திகதி ராவய பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டி புலிப் பிரதிநிதியாக ஸ்ரீலங்கா மக்களுக்கு எதிரான கருத்துப் போரில் ஈடுபட்டமை, புலிகளுக்கெதிரான போரில் ஈடுபடும் இலங்கை இராணுவத்தை அபகீர்த்திக் குள்ளாக்கியமை, வடகிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை புலிகளுக்கு வழங்க திட்டமிட்டமை ஆகிய காரணங்களுக்காகவே அவர் கொல்லப்பட்டார் என்று 'மகிழ்ச்சியுடன்' அறியத்தந்திருக் கிறது.

இந்த விதத்தில் இந்த இயக்கம், தமிழ் இயக்கங்களை விட ஒருபடி மேலே போய்விட்டுள்ளது. தமிழ் இயக்கங்கள் மரண தண்டனை வழங்கினார்கள். ஆனால் அவர்கள் இந்தத் தண்டனை வழங்கலால் 'மகிழ்ச்சி' அடைந்ததாக ஒருபோதும் சொன்னதில்லை. இந்த இயக்கமோ தமது உரிமைக் கோரலை 'மகிழ்ச்சியுடன்' அறியத்தருவதாக கூறுகிறது. இது மிகவும் ஆபத்தான கொலையில் மகிழ்ச்சியுறும் மனோவிகாரத்தைக் கொண்ட ஒரு விடயமும் கூட.

குமார் பொன்னம்பலத்தை கொலை செய்வதற்காகவென்றே உருவாக்கப்பட்டது போல தெரியும் இந்த இயக்கம் இலங்கை அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் அண்மைக்கால அரசியல் கருத்துக்களை பிரதி பலிப்பதுடன் ஜனாதிபதியவர்கள் இராணுவத்தினரை அபகீர்த்திக் குள்ளாக்கும் வகையில் பேசுவதை 'தேசத்துரோகத்தனமானது' என்று குறிப்பிட்ட அதே மொழியில் பயன்படுத்துவதும் புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல.

ஜனாதிபதி அவர்களது 'புகழ்பெற்ற' நீண்ட உரையாடல் தனது அரசியல் எதிராளிகளுக் கெதிரான படுகொலைகட்கான பச்சைக்கொடியைக் காட்டியிருக் கின்றது என்று கருதுவதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

பத்திரிகையாளர்களை கீழ்தரமாக பழிகூறுதல், அதிகாரிகளை தெருச் சண்டித்தன மொழியில் திட்டுதல் (எத்தனையோ சட்டபூர்வ வழக்குகளில் அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பும் அதிகாரமும் இருந்தும்) தீவிர இனவாத சக்திகளை தூண்டிவிடுகிற விதத்தில் அரசியல் கருத்து ரீதியான எதிராளிகள் மீது 'துரோகிப்' பட்டம் அமைத்தல் என்பது இப்போதெல்லாம் ஜனாதிபதி அவர்களது புதிய பாணியாக மாறிவிட்டுள்ளது.

'புலிகளுக்கு எதிரான தேசிய இயக்கம்' என்ற ஒன்று இருக்கிறதோ இல்லையோ அப்படிப்பட்ட ஒரு இயக்கம் உருவாதலை அரசு தரப்பு விரும்புகிறது என்பதை குமாரின் கொலை குறித்தும் அவ்வியக்கம் குறித்தும் அது சாதித்த நீண்ட மௌனம் தெளிவுபடுத்துகிறது.

ஜனாதிபதி அவர்களின் சார்பில் செயலகம் நீண்ட மௌனத்தின் பின் வெளியிட்ட அறிக்கை கூட இந்தப் படுகொலையின் அரசியலையோ அவர் கொல்லப்பட்ட முறையையோ கண்டிக்கவில்லை. குமாரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்வதுடன் தனது கடமையை நிறுத்திக்கொண்டுவிட்டது.

குமார் பொன்னம்பலம் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமானவை. அவர் வெளிப்படுத்தும் அரசியல் கருத்துக்களின் தீவிரத்திற்கு சற்றும் பொருத்தமற்றவை. தான் வாழும் சூழலின் யதார்த்தம் குறித்த எச்சரிக்கை உணர்வு அவரிடம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

அவரது துணிவும், வெளிப்படைத்தன்மையும், தமிழ் இன அரசியலுரிமை தொடர்பாக அவரிடம் காணப்பட்ட உணர்வுபூர்வமான ஈடுபாடும் அவரது காலத்து சட்டவாத வரையறைக்குள் நின்று செயற்படும் எந்தத் தலைவர்களிடமும் காணப்படாத அவரது சிறப்புக்கள். அரசியல் ரீதியாக அவர் அவரது சமகால தலைவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, தீவிரமான, ஓய்வொழிச்சலற்ற எதிர்ப்புக்குரலெழுப்பும் ஒரு தலைவராக இருந்தார். ஒரு சட்டத்தரணி என்ற முறையிலும் அவர் மற்றெல்லா அரசியல் தலைவர்களையும் விட அதிகளவில் அநியாயமாக அரசாங்கத்தின் கருப்புச் சட்டங்களின் கீழ் கைதுசெய்யப் படும் இளைஞர்களை விடுவிப் பதற்காக முன்னின்று பாடுபட்டார். சரிநிகர் பத்திரிகையின் மீது தொடுக்கப்பட்ட வழக்கிலும் கூட அவர் இலவசமாக ஒரு பத்திரிகைக்கு தான் செய்யக்கூடிய உதவி என்று கூறி வாதாடினார். அவரது அரசியல் கருத்துக்கள் செயற்பாடுகள் குறித்து சரிநிகர் விமர்சித்திருந்த போதும் அதன் தொடர்ச்சியான ஒரு வாசகராக இருந்ததுடன் சரிநிகருடன் நல்லுறவை பேணியும் வந்தார்.



பொன்னம்பலம் இலங்கை அரசாங்கங்கள் அனைத்திற்கும் ஒரு தனிமனித சவாலாகவே இருந்து வந்துள்ளார் என்ற போதும் இன்றைய அரசாங்கத்திற்கு அவர் பெரும் தலையிடியாகவே இருந்தார். ஜனாதிபதியின் தென்னாபிரிக்கப் பேச்சு கிருஷாந்தி கொலை வழக்கு, சண்டேரைம்ஸ் வழக்கு போன்ற பல விடயங்களில் அவர் அரசாங்கத்தினை மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் 'அரசியல் தத்துவத்தின் சஞ்சலமேதுமில்லாத ஆதரவாளர்' என்று தன்னைப் பகிரங்கமாக கூறிக்கொண்ட அவரது விமர்சனங்கள் சிலவேளைகளில் தவிர்க்க முடியாமல் புலிகளை முழுமையாக நியாயப்படுத்தும் அளவுக்கும் போனதுண்டு. ஆயினும் அவர் அரசியல் படுகொலையை ஒரு அரசியல் தீர்வாக ஒருபோதும் கருதிய தில்லை.



குமார் பொன்னம்பலம் கொழும்பிலிருந்து சுதந்திரமாக இயங்கும் ஒரு புலி என்ற பிரச்சாரத்தை ஆளும் தரப்பும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளும் பெருமளவுக்கு பிரச்சாரம் செய்தன. இந்தப் பிரச்சாரம் அவரை ஒரு தேசத் துரோகியாக முத்திரைகுத்துவதற்கு வாய்ப்பான சூழ்நிலையை சிங்கள மக்கள் மத்தியில் ஓரளவுக்கு வளர்த் திருந்ததென்றே கூறவேண்டும்.

அரசியல் படுகொலைகள் மூலம் அரசியல் சிந்தனைகளை அடக்கிவிட முடியும் என்ற கடந்த இரண்டு தசாப்தகால ஈழ அரசியல் வரலாற்றில் தோல்விகண்ட கோட்பாட்டை தெற்கிலேயும் உருவாக்கிவிடுவதில் ஐ.தே.க, பொ.ஐ.மு அரசுகள் முயன்றிருக் கின்றன. அரச படைகளையும் குண்டர்களையும் பயன்படுத்தி அதனை நடைமுறைப்படுத்த முயன்றிருக்கின்றன. ஆயினும் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. அரசுகள் அம்பலமாகிப் போனதுதான் நடந்தது. ஆனால் இப்போது முதன் முதலாக ஒரு புதிய 'இயக்கம்' உருவாக்கப்பட்டிருக் கிறது. கருத்துப் போரில் ஈடுபட்ட ஒருவரைக் கொல்லவதில் 'மகிழ்ச்சி' அடைவதாக பிரசுரம் வெளியிடக்கூடிய ஒரு இயக்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் இந்த இயக்கம் அரச உயர்மட்ட அங்கிகாரத்துடன் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது அரச தரப்பில் தட்டிக்கொடுக்கும் செல்லப் பிள்ளையாக தமது விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு குழுவாக அது வளர்வதை அரச மேல்மட்டம் விரும்பி மறைமுக ஆதரவு கொடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் வரலாற்றிலே துரோகிப் பட்டம் சுமத்திய தமிழ் அரசியல்வாதிகள் 'தம்பிமாரை' தனிநபர் அளிப்பு அரசியலுக்கு வழிகாட்டியதும் அதன் மூலமாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்னும் மீள முடியாத ஒரு தவறான கோட்பாட்டை சுமந்து கொண்டிருக்கவேண்டிய நிலை நிலவுவதும், அப்படி வழிகாட்டிய வர்களே பின்னாளில் அந்த 'தனிநபர் அளிப்பு' அரசியலுக்குப் பலியாகிப்போனதும் தொடரும் துயரக்கதைகளாக நம்முன் உள்ளன. இப்போது சிங்கள அரசியல் தலைமைகளும் இத்தகைய ஒரு வழிகாட்டலை தமது இளம் சந்ததியினருக்கு வழங்கத் தொடங்கியுள்ளார்கள். வீரவிதான இயக்கம், பயங்கரவாதத்திற்கெதிரான இயக்கம் என்பவற்றின் வரிசையில் இன்று தோன்றியுள்ள புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி என்பவற்றின் அரசியலை ஊட்டி வளர்ப்பதால் தற்காலிக இலாபம் தேட முனையும் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் அரசியல்வாதிகளின் அதே தவறை திரும்பவும் இழைக்கிறார்கள். சிங்கள மக்களின் விடுதலைப்பற்றி சிந்திக்கத் தலைப்படும் சிங்கள இளைஞர்களும் வழிமாறிப் போய் தனிநபர் அளிப்பு அரசியலுக்குள் சிறைப்பட்டு வெற்று இனவாதத்தின் கருவிகளாக சிதைந்து கொண்டிருக்கிறார்கள்.

நாடு விடுதலையைக்கோரி நிற்கிறது. இனங்கள் சுதந்திரமான வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இன்றைய அரசியலிலிருந்து விடுபடத் துடிக்கின்றனர். ஆனால் இந்த நியாயமான விடுதலை உணர்வு இனவாத மோகத்தால் மூடி மறைக்கப்பட்டு திசைதிருப்பி விடுபட்டுக்கொண்டிருக்கிறது. சிங்கள மக்களின் விடுதலைக்கு உண்மையான எதிரி புலிகளோ, தமிழ், முஸ்லிம் மக்களோ அல்ல. இன்றைய அரசும் அரசியலும் என்பது மறைக்கப்படுகின்றது.

பொன்னம்பலம் அவர்களின் படுகொலை ஒரு இருண்ட எதிர்காலத்திற்கு இன்றைய அரசியல்வாதிகள் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற் கான ஒரு சாக்குருவியின் ஓலம் மட்டுமே.

தமிழ், சிங்கள, முஸ்லிம் புத்திஜீவிகளும் ஜனநாயக வாதிகளும் இந்த விஷச் சூழலில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு உண்மைக்காக குரல் எழுப்பவேண்டிய ஒரு அவசரத் தருணம் இது.

குமாரின் படுகொலை தனிநபர் படுகொலைகளால் ஒரு அரசியல் கருத்தை பணிய வைத்துவிட முடியாது என்பதற்கு இன்னுமொரு உதாரணமாகி விட்டுள்ளது. இதற்கு சாட்சி கூறுவது போல் அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளத்திடமிருந்து வெளிப்பட்ட அவலக்குரலை, தனிநபர் பயங்கரவாதத்தை நம்பும் அரசியல்வாதிகள் கணக்கில் எடுத்துக்கொள்வார்களா?

இல்லாவிடில்,

கொல்லப்பட்டது வெறும் பொன்னம்பலம் மட்டுமல்ல.

இந்த நாட்டின் தொடரப் போகின்ற நீண்ட படுகொலைகளின் வரலாற்றில் பொன்னம்பலமும் ஒருவர் என்ற அநியாயமான பரிதாப நிலை தொடரும். அந்தத் தொடரில் தாம் ஒவ்வொருவரும் பலியாகும் வரை அசட்டை காட்டுவார்களா?

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு நவீன துட்டகெமுனுவின் துவம்சம்: இரு அப்பாவித் தமிழர் பலி!

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு அடுத்த தினமான கடந்த டிசெ. 22ம் திகதியும் வழமை போல் தொடம் கஸ்லந்த, மகயாய மற்றும் கெப்பிடிகல தோட்டங்களில் இருள் சூழத் தொடங்கியது. மகயாய மற்றும் கெப்பிட்டிகல தோட்டப் பகுதிகளை சூழ்ந்த இருளில் பயங்கரமொன்றும் சேர்ந்தே சூழத் தொடங்கியது. தேர்தலுக்குப் பிறகு வரும் இரவுகள் மிகவும் இருண்மையானது எனவும், மிகவும் பயங்கரமானது எனவும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களான அவர்கள் அனுபவ ரீதியாக அறிவர். எனினும், அதற்கு எதிராக செயற்பட அல்லது அதிலிருந்து விடுபட்டுச் செல்ல அவர்களால் இயலாது. அந்தளவுக்கு அவர்கள் அப்பாவிகள். வறியவர்கள்.

22ம் திகதி இரவில் மகயாய தோட்டத்தில் செல்வகுமாரன் எனும் இரு பிள்ளைகளின் தந்தையும், சுந்தரலிங்கம் சுபாஷ் எனும் 3 வயது சிறுவனும் கொலைஞன் ஒருவனால் கொலை செய்யப்பட்டதுடன், கொலைஞனின் தாக்குதலுக்கு உள்ளாகிய மேலும் பதினொருவர் மோசமான காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.





காயப்பட்டவர்களில், இறந்த செல்வகுமாரனின் கர்ப்பிணி மனைவியான 24 வயதான செல்வகுமாரி, அவரது மகளான தம்மிகா குமாரி (5) ஆகியோரும், இறந்த சுந்தரலிங்கம் சுபாஷின் தந்தையான எம். சுந்தரலிங்கம் (40), அவரது தாயான ராஜேஸ்வரி (36), மகளான சுந்தரலிங்கம் சுபா (5) ஆகியோரும், பி. வசந்தி (7), ஆர். சரோஜா (22), ஜானகியம்மாள் (28), பளனியம்மா (55), வனிதா சுஜானி (13), நாகலிங்கம் (38) ஆகியோரும் அடங்குவர்.

சம்பவ தினம் இரவு 8.30 மணியளவில், மகயாய தோட்டத்தில் தமிழ் லயன்களை நோக்கி வந்த நபர் ஒருவர் தான், எல்லாளன் துட்டகைமுனு போரில் ஈடுபடுவதாகவும், தமிழர்களை கொல்லப் போவதாகவும் கூறிக் கொண்டே சுந்தரலிங்கம் லயனுக்குள் வந்து தாக்கத் தொடங்கியுள்ளார். தாக்குதலுக்குள்ளான சிறுவர்கள் இருவரும், தாய் மற்றும் தங்கை ஆகியோர் ஒரே படுக்கையில் இரத்தத்தில் தோய்ந்து கிடந்தனர். 3 வயதான சுபாஷின் தலை மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதன் பின்னர் செல்வகுமாரின் வீட்டிற்குள் சென்று அந்நபர் தாக்கத் தொடங்கியுள்ளார். அவ்வேளை அவரது மனைவியான செல்வகுமாரியின் கையில் இருந்த குழந்தையை தூக்கி வீசிய கொலைஞன், செல்வகுமாரன், செல்வகுமாரி அவர்களது 5 வயது மகன் ஆகியோரை ஈவிரக்கமின்றி தாக்கத் தொடங்கியுள்ளான். இறுதியில் செல்வகுமாரன் படுகொலை செய்யப்பட்டார்.

இவர்கள் காயத்துக்குள்ளானதும், கொலை செய்யப்பட்டதும் அப்பாவிகள், வறியவர்கள் என்பதனாலேயே. இரண்டாவதாக தமிழர்கள் என்ற காரணத்தினால் தாம் எனலாம்.

எதிரி வந்து தாக்கியவுடனேயே வீட்டில் பெயருக்கு என இருந்த கதவு விழுந்து விட்டது. சில லயன்களின் கதவுகள் வெறும் தகரங்கள் மட்டுமே. இல்லாவிட்டால் தென்னோலைகளாகும். இந்தக் கதவுகளைக் கைகளால் தட்டிவிட்டு வீட்டிற்குள் எதிரி நுழையும் வேளை தப்பியோடுவதற்கு பின்முற்ற கதவு கூட இல்லாத நிலை. ஒளிந்து கொள்ள அறையொன்று கூட இல்லை. முழு வீடும் அடி 10, 12 கொண்ட அறையாக காணப்படுகின்றன எனலாம். எனவே இந்நிலைமையில் எதிரிக்கு இரையாகாமல் மறைந்து ஓடிச் சென்று ஒளிந்து விடுவது எப்படி?

இந்தப் பயங்கரமான இரவை நினைவூட்டிய மகயாய தோட்டத்தைச் சேர்ந்த எம். ஜானகியம்மாள் இவ்வாறு கூறுகிறார்.

"இரவு 8.30 மணியளவில் இருக்கும். ''நான் எல்லாளன் - துட்டகைமுனு சண்டை செய்து கொண்டிருக்கிறேன். தமிழர்களை விட மாட்டேன். நம்மவர்கள் எல்லோரும் தள்ளி நில்லுங்கள். தமிழர்களை நான் கொல்லப் போகிறேன். எனது தம்பியும் இராணுவத்திலிருக்கும்போது குண்டு பட்டு இறந்து விட்டான்" என்று யாரோ ஒருவர் சத்தமிடும் குரல் கேட்டது. எங்களது வீட்டைத் தாண்டி இருவர் செல்வது போன்றிருந்தது. சிறிது நேரத்தில் சுந்தரலிங்கத்தின் லயம் பக்கம் அலறும் சத்தம் கேட்டது. நாம் அவ்விடத்தில் ஓடிச்சென்று பார்க்கும்போது நால்வரும் விழுந்து கிடந்தனர்.

இறந்தவர்களின் சடலங்களை வைக்கக் கூட அவர்களது லயன்-

> கொலைஞன் தன்னை துட்டகைமுனு எனக் கூறிக் கொண்டு எல்லாளன் — துட்டகைமுனு யுத்தத்தை நடாத்தியதாகக் குறிப்பிட் — டுள்ளார்.
> எனினும். துட்டகைமுனு அரச பலத்தைப் பெற்றுக் கொள்ள போராடி எல்லாளனை கொன்ற பின் அப்பாவித் தமிழர்களை அல்லது தமிழ் இராணுவ சிப்பாயைக் கூட கொல்லவில்லை என வரலாறு கூறுகின்றது.
> அதுமட்டுமின்றி எல்லாளன் அரசனின் இறுதிக் கிரியைகளை கூட அவர் உரிய மரியாதையுடன் நடாத்தியதாக வரலாறு கூறுகின்றது.
> இதன்படி இவ்வாறு அப்பாவிகளைக் கொல்வது கூட துட்டகைமுனுவுக்கு செய்யும் அகௌரவமாகும்.

களில் இடமில்லாததால் சிறிது இடம் உள்ள அயலவர்களின் லயன்களில் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த இருவரின் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள தற்காலிகமாக மருத்துவமனையிலிருந்து சுந்தரலிங்கம் சுபாஷின் தாயும், செல்வகுமாரனின் மனைவியும் வந்திருந்தனர்.





செல்வகுமாரனின் லயனுக்குள் நுழைந்த எமக்கு வீட்டின் ஒவ்வொரு பகுதியும் மழைக்கு ஒழுகுவதையும் காணக் கூடியதாகவிருந்தது. இதனால் நனையாது சடலங்களைப் பாதுகாக்கவும் இயலவில்லை. கூரையிலிருந்து ஒழுகிய நீரிலிருந்து விழுந்த துளிகளினால் அவர்களது குருதிக் கறைகள் கழுவப்பட்டுச் சென்றன. சுந்தரலிங்கம் சுபாஷின் வீடும் அவ்வாறே. அவரும் அலயவர்களின் வீட்டில் இருந்தே இறுதி யாத்திரையை நடாத்த வேண்டியிருந்தது.

மகயாய தோட்டத்தின் லயங்களை நோக்கித் தாக்குதல்களை ஆரம்பித்த கொலைஞன், பின்னர் சுமார் ஒரு மைல் துாரமுள்ள கெப்பிடிகல தோட்ட லயன்களையும் தாக்கியுள்ளான். இத் தாக்குதல்களினால் கே. வேலு (55), தெய்வானை (50) மற்றும் கே. லட்சுமணன் (20) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் தந்தை மற்றும் மகன் ஆகியோர் காயமடைந்துள்ளனர். எஸ்.ஏ. சாலட் எனும் சிங்கள குடும்பம் வாழும் லயத்திற்குள் நுழைந்து அந்த நபர் அப்பெண்ணின் குழந்தையை தாக்க முயற்சித்த வேளை "அடிக்க



வேண்டாம். நாம் சிங்களவர்கள்" எனக் கூறிய போது "யாருக்கு தெரியும். முதலில் சொல்ல வேண்டாமா" என்று கூறிவிட்டுப் போயிருக்கின்றான கொலைஞன்.

இந்த கொலைஞன் சித்தசுவாதீனமற்றவன் எனக் கூறப்படுகின்றது. அவன் மனநோய்க்கு சிகிச்சைப் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. எனினும், அவனுக்கு தமிழர்களை தனியே தெரிவு செய்து தாக்கவும், சிங்களவர்களை விட்டு விடவும் சுய புத்தியுள்ளது. மகயாய தோட்டைத்தைச் சேர்ந்த எம். ஜானகியம்மா இவ்வாறு கூறுகின்றார். "இவர் சிங்களவர், இவர் முஸ்லிம், இவர் தமிழர், இவர் ரண்பண்டா என அவன் நன்கு அறிந்து வைத்துள்ளான். சிங்கள, முஸ்லிம் நபர்களை விட்டு விட்டு தமிழர்களை மட்டும் கொல்ல நல்ல சித்தசுயாதீனம் உடையவனாலல்லவா முடியும்?"

கொலைஞன் தன்னை துட்டகைமுனு எனக் கூறிக் கொண்டு எல்லாளன் - துட்டகைமுனு யுத்தத்தை நடாத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும், துட்டகைமுனு அரச பலத்தைப் பெற்றுக் கொள்ள போராடி எல்லாளனை கொன்ற பின் அப்பாவித் தமிழர்களை அல்லது தமிழ் இராணுவ சிப்பாயைக் கூட கொல்லவில்லை என வரலாறு கூறுகின்றது. அதுமட்டுமின்றி எல்லாளன் அரசனின் இறுதிக் கிரியைகளை கூட அவர் உரிய மரியாதையுடன் நடாத்தியதாக வரலாறு கூறுகின்றது. இதன்படி இவ்வாறு அப்பாவிகளைக் கொல்வது கூட துட்டகைமுனுவுக்கு செய்யும் அகௌரவமாகும்.

எவ்வாறாயினும் இக் கொலைஞனுக்கு மனநோய் உள்ளது என ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த மனநோய், 'துட்டகைமுனு பித்தாக' மாறுவதற்கு வாய்ப்பளித்த, ஏதுவாகிய சமூகப் பின்னணியை சற்று ஆராய்ந்து பார்க்கத் தான் வேண்டும்.

## கண்ணாடி....

நடந்தவைகள் வேறு சந்தர்ப்பத்தில் சொல்லப்படும்.

என்னை அவமானப்படுத்து முகமாக சந்திரிகா என்னை ஒரு 'மிருகம்' என்று சொல்லியுள்ளார். அது உண்மையே. நான் மிருகம் என்றால் அவரும் ஒரு மிருகமே. காரணம் நாம் எல்லோரும் மிருக இராட்சியத்திற்குரியவர்களே.

மேலும் நான் தான் பண்டாரநாயக்கா குடும்பத்தை நாசமாக்கியவன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். உண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த ஆதிக்கப் போட்டியே அவர்களின் குடும்பப் பிளவுக்குக் காரணம். இதனால் தான் சந்திரிக்கா தனது தாயாரையே பலவிதமாகக் கண்டித்துப் பேசியவை பத்திரிகையில் வந்துள்ளன. அவற்றைக் கீழே தருகின்றேன்.

'ஸ்ரீலங்கா மகாஜன கட்சிக்குள் (SLMP) சிறிமாவுக்கோ அனுரவுக்கோ இடமில்லை' (லங்காதீப 13.03.83)

அம்மாவும் அனுரவும் மிகுந்த கோபத்தோடு இன்று பேசுகின்றனர். அவர்கள் எஸ்.எல்.எம்.பி தலைமையை கேவலப்படுத்துகின்றனர். அவர்கள் ஹொரகொல்லையிலுள்ள தேங்காய்களையும் வாகனங்களைப் பற்றியும் பேசி எஸ்.எல்.எம்.பி தலைமையைக் கேவலப்படுத்துகின்றனர். நான் மக்கள் போராட்டத்தில் சேர்ந்துவிட்டேன். 'வலவ்வவுக்குள்' நான் திரும்பப் போவதில்லை. (தினகர 06.03.84)

'நான் என்னுடைய அம்மா மாதிரி பொய் வாக்குறுதிகள் கொடுப்பதில்லை' (தினமின 14.03.84)

'நான் என்னுடைய அப்பாவின் பெயரை விற்பவருக்கு துணையாக நிற்க மாட்டேன்' (தினமின 21.01.84)

என்னைப் பற்றி பலவிதங்களில் குற்றம்சாட்டும் அவருக்கு அவருக்கெதிராக பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விஷயங்களில் ஒன்றை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். இது 1977 டிசம்பர்மாதம் 8ம் திகதி முன்னைய நிதியமைச்சர் ரொனி டிமெல் பாராளுமன்றத்தில் பேசியது பற்றியது. அப்பேச்சில் ரொனி டிமெல் 'அலரி மாளிகையிலுள்ள மாணிக்க வியாபாரிகள்' பற்றி குறிப்பிடுகையில் முன்னைய பிரதமரின் மகளான சந்திரிக்கா ஜனவாச தலைவராக இருந்தபோது ஹொங்கொங்கில் இருந்த நிறுவனத்திற்கு மாணிக்கக் கற்கள் ஏற்றுமதி செய்துள்ளார்'. (இவரது சகோதரி சுனேத்திரா, மாமன் கிளிபோர்ட் ரத்வத்த எல்லோரும் இதில் ஈடுபட்டிருந்தார்கள்.) 'சந்திரிக்கா போன்ற ஒருவர்-நாட்டின் 84 ஆயிரம் ஏக்கர் மாணிக்கக் கற்கள் உடைய காணி உடைய ஒருவர் - இவ்வாறு நடந்துகொள்ளலாமா? இதுதான் இவர்களுடைய அரசியல் ஒழுக்கமா என ரொனிடிமெல் கேட்டார்.

என்னை ஐ.தே.கட்சியின் ஒரு ஏஜன்டாக குற்றம்சாட்டும் சந்திக்காவிடம் இன்னொன்று கேட்க விரும்புகிறேன். உண்மையில் சந்திரிக்கா தான் ஐ.தே.க.விடமிருந்து பல உதவிகளைப் பெற்றவராவார். அன்று ஐ.தே.க ஆட்சியில் நிதியமைச்சராக ரொனி டி மெல் இருந்த போது மதுபான விற்பனைக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றவர் சந்திரிக்கா தான். இதைப் பின்னர் அன்றைய ஐ.தே.க மாகாண சபை உறுப்பினரான டங்கன் பெர்ணான்டோவுக்கு வாடகைக்குக் கொடுத்தவர். இதற்கான ஆதாரங்கள் எல்லாம் பகிரங்கமாகவே உள்ளன.

நன்றி - நூலகத்திட்டம்



# களுத்துறை சிறைத் தாக்குதல்: மீண்டும் தொடரும் வெலிக்கடைகள்!

மீண்டுமொருமுறை தமிழ்க் கைதிகள், களுத்துறைச் சிறைச்சாலையில் சிறைக் காவலர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இரண்டு கைதிகள் மரணமடைந்த இச்சம்பவத்தில் 53 கைதிகள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 30 கைதிகள் படுகாயமடைந்துள்ளனர். இத்தகவல்களே இச்சம்பவத்தின் பாரதூரமான நிலைமையினை விளங்கிக் கொள்ள போதுமானதாகும்.


வழக்கம் போலத் தமிழ்க் கட்சிகள், தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது மந்திர உச்சாடனங்களை அட்சரம் பிசகாமல் ஒப்புவித்துள்ளனர். வாக்குறுதிகள் ஃபக்ஸிலும், அறிக்கைகளிலும், பத்திரிகைகளிலும் முன்னைய சூடு, சுவை குறையாமல் வெளிவந்தவண்ணமுள்ளன. இவையெல்லாம் வழக்கம் போலவே நடைபெற்றுள்ளன.

அடுத்த காட்சிகளும் வழக்கம் போலவே இடம் பெறும். வாக்குறுதிகள் மறக்கப்படும் அல்லது மறந்தது போன்று நடிக்கும் சிறைச்சாலை நிர்வாகம், நீதியமைச்சு என்பன தங்களுக்காகவே, தங்களால் நியமிக்கப்பட்ட குழுவொன்று மூலம் கண்துடைப்பு விசாரணையொன்றை நடாத்தும். விசாரணையின் முடிவுகளுக்கோ, அறிக்கைகளுக்கோ என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாமல் போகும். கேட்பதற்குத் தான் யாருமில்லையே. இன்னுமின்னும் சிறைச்சாலைக்குள் தமிழ்க் கைதிகள் தாக்கப்படுவர். மீண்டும் மீண்டும் ஒரே காட்சி அரங்கேறும்.

களுத்துறைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் பின்னணி அனைவருக்கும் தெரிந்ததே. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பவற்றின் கீழ்க் கருணையின்றிக் கைது செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழ் இளைஞர்கள், நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களோடு அரசையும், அரசு அடிவருடிகளையும் எதிர்க்கும், கேள்வி கேட்கும் இளைஞர்களும் புலி முத்திரை குத்தப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர்.


சிறையுள்ளே இவர்கள் சிறை நிர்வாகத்தினாலும், சக சிங்களக் கிறிமினல் குற்றவாளிகளாலும் இம்சிக்கப்பட்டும், கீழ்த்தரமாகவும் நடத்தப்படுகின்றனர். சிங்களக் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாறாக, அவர்கள் எப்போதும் தூண்டிவிடப்பட்டே வந்துள்ளனர். தமிழ்க் கைதிகளுக்கு உணவு வழங்குதல் போன்றவற்றிலும் இவ்வாறான கைதிகள் ஈடுபடுத்தப்படுவதாகத் தகவல்களும் உண்டு. உண்மையிலேயே அரசியல் கைதிகளான இவர்கள், கிறிமினல் குற்றவாளிகளை விடவும் கீழ்த்தரமாகவே நடத்தப்பட்டுள்ளனர்.

நீதியற்ற முறையில் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும், இவ்வாறான நடவடிக்கைகளையும் எதிர்த்துத் தமிழ்க் கைதிகள், 1995 மார்ச் முதல் அவ்வப்போது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வந்துள்ளனர். அப்போதெல்லாம் சிறைச்சாலை நிர்வாகம், கைதிகளை இடமாற்றம் செய்து, அச்சுறுத்தி அவர்கள் பாணியில் போராட்டங்களை நசுக்க, மற்றைய முனையில் தமிழ்க் கட்சிகள் ஏனைய அரசியலாளர்கள், முன்னணிச் சட்டத்தரணிகள் அவர்களுடைய ஆயுதமான வாக்குறுதிகளைக் கொண்டு காரியம் சாதித்து வந்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்து, ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசியெறியும் படலத்தில் ஜனாதிபதி ஒரு வாக்குறுதியை அளித்திருந்தார். அதனடிப்படையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத கைதிகள் பெப்ரவரிக்கு முன் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதே அந்த வாக்குறுதி ஆகும்.



ஜனாதிபதி, வாக்குறுதிகள் பற்றி நினைவில் வைத்துள்ளாரோ, இல்லையோ அவரினதும், அவரினது அரசினதும், மற்றொரு காவல் நாயான சிறை நிர்வாகம் அதை நன்கு செயற்படுத்தி வருகிறது. ஆம்! அவர்கள் ஒவ்வொரு கைதிக்கும் 'விடுதலை' அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனவரி 05ல் நடைபெற்ற சம்பவத்திற்கான உடனடிக் காரணமும் தமிழ் அரசியற் கைதிகளின் போராட்டமே. சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கெதிராகப் புதிய நடைமுறை ஒன்றைச் சிறை நிர்வாகம் கொண்டு வந்துள்ளது. அவர்களை உறவினர்கள் பார்வையிட வரும் போது, விலங்கிட்டுச் சங்கிலியால் பிணைத்துப் பார்வையாளர் பகுதிக்குக் கொண்டு வரும் முறையைச் சிறை நிர்வாகம் ஏற்படுத்தியது. இத்தகைய முறை கிறிமினல் குற்றவாளிகள் தொடர்பில் கூடக் கடைப்பிடிக்கப்படுவது இல்லை. எனவே, இதை எதிர்த்து F பகுதித் தமிழ் கைதிகள் கூரைமேல் ஏறி உண்ணாவிரதமிருந்துள்ளனர். இப்போராட்டத்தைக் கையாள நீதியமைச்சிலிருந்து கரலியத்த தலைமையிலான குழு சிறை சென்று பேசிய போது, வாக்குவாதம் முற்றிய நிலையில் கைதிகள் தாக்கப்பட்டுள்ளனர். கைதிகள் தற்காப்புத் தாக்குதலில் ஈடுபட்டதையடுத்து இரு தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஜேசுதாசன் என்ற கைதி கொலை செய்யப்பட்டார். 32 கைதிகள் காயமடைந்து நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் நான்கு பேரின் நிலைமை மோசமானதாகக் காணப்பட, அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



முதல் நாள் சம்பவங்கள் இவ்வாறு நடைபெற்று முடிந்துள்ளன. சம்பவங்களையடுத்துச் சிறைச்சாலைப் பகுதியில் நிலவிய பதற்றத்தைத் தணிக்கும் முகமாகக் கைதிகளுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கி, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாக எந்த நடவடிக்கையிலும் சிறை நிர்வாகமோ, பொலிசோ, அரசோ ஈடுபடவில்லை. இதுவே மற்றைய நாள் சம்பவத்திற்கும் வாய்ப்பாகப் போனது.

மறுநாள், கொழும்பு, தெஹிவளை, கல்கிஸ்ஸை நகரங்களில் பாதுகாப்புப் படைகள் புலி வேட்டையில் இறங்க, வெலிக்கடையிலிருந்து களுத்துறை சென்ற சிறைக் காவலர் குழு, கைதிகளை வேட்டையாடத் தொடங்கியது. இரண்டாம் நாள் தாக்குதலில் 'சி' பகுதிக் கைதிகள் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஸ்ரீகுமாரன் என்ற கைதி கொல்லப்பட்டும், மேலும் 05 கைதிகள் காயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவையே நடந்த சம்பவங்கள். வெறுமனே தமிழ் அரசியல் கைதிகள், சிங்களக் காவலர்களால் தாக்கப்பட்டுள்ளனர் என்று, அன்றாட நாட்டு நடப்பாக இதைப் பார்ப்பதை விடுத்து இதன் அரசியல் பின்னணி விளங்கப்படல் வேண்டும்.

இந்தத் தாக்குதல் மூலம் சிறை நிர்வாகமும், அரச இயந்திரமும் சாதிக்க முயல்வது,

01. சிறையினுள்ளே தமிழ்க் கைதிகளின் அமைதியான போராட்டத்தை வன்முறையூடாக நசுக்குவதும், அவ்வாறான போராட்டங்கள் எதிர்காலத்தில் தொடங்காதிருக்க அச்சுறுத்துதலும்.
02. தமிழ் அரசியல் கைதிகள் சிறையினுள்ளே வன்முறையிலும், குழப்பத்திலும் ஈடுபடுகின்றார்கள் எனக் காட்டி, அவர்களுக்குக் குத்த வேண்டிய முத்திரை குத்தி நீதியற்ற முறையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை நியாயப்படுத்தல்.

இரண்டாவது விடயத்தினடிப்படையில் தான் மேற்படி சம்பவங்கட்கு சிறை நிர்வாகம் கூறும் விளக்கத்தை நோக்க வேண்டும். சிறையுள் மதில்களைக் கட்டுவதற்கு எதிராகவே கைதிகள் கலகத்தில் ஈடுபட்டதாக அவர்கள் கூற முயல்கின்றனர். சிறை நிர்வாகம் தமது கடமைகளைச் செய்வதற்கு இடையூறாகத் தமிழ் அரசியல் கைதிகள் கலகத்தில் ஈடுபடுகின்றார்கள் என்பதே அந்த விளக்கத்தின் தொனிப் பொருள்.

### பேரினவாதப்படுத்தப்பட்ட மக்கள்

நடந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக இடம்பெற்ற சம்பவங்கள், பேரினவாதக் கருத்தியல் சிங்களப் பொது மக்களிடையே எவ்வளவு ஆழமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. தமிழ் மக்களுக்கெதிரான காழ்ப்புணர்ச்சியும், வன்முறை மனோபாவமும் நன்றாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்த தமிழ்க் கைதிகள் மோசமாக நடாத்தப்படுகின்றனர். கைவிலங்குகள் பூட்டப்பட்டுள்ள நிலையில், கால்கள் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையிலும் ஒரு கட்டிலில் இருவர் வீதம் சிகிச்சைஅளிக்கப்படுகின்றது. வைத்தியசாலையில், வைத்தியசாலை ஊழியர்களாலும், பொது மக்களாலும் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

### தமிழ் அரசியலாளர்கள் செய்தியாளர்கள்:

இவ்வாறாக நடைபெற்ற அனைத்துச் சம்பவங்களின் பின்னரும், தமிழ் அரசியலாளர்கள் தமது வழமையான செயற்பாடுகளை மேற்கொண்டு ஓய்ந்து போயுள்ளனர். எந்தவிதமான தீர்க்கமான போராட்டத்திலும் ஈடுபடாமல், வெறுமனே அறிக்கைகள், ஃபக்ஸ் போன்றவற்றைக் கிரமமாக வெளியிட்ட வண்ணமுள்ளனர்.

நாகொடை வைத்தியசாலைக்குக் கைதிகளைப் பார்வையிடச் சென்ற கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்தியசாலைக் காவலாளிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். அங்கே தான் ஆச்சரியப்படவைக்கும் வகையில் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராடி, உள்ளே சென்று நிலைமைகளை அறிந்து வந்துள்ளனர்.

அன்றாடத் தினசரிகளை வாசிக்கும் ஒருவர், எம் உறுப்பினர்கள் தொழிற்பட்ட முறை ஒரு செய்தியாளருக்குரியது என்பதைச் சுலபமாக விளங்குவர்.

### களுத்துறைப் படுகொலையும் தமிழ்த் தினசரிகளின் செய்தியிடலும்

மேற்படி படுகொலை பற்றிய செய்திகளைச் சுயாதீன தமிழ்த் தினசரிகளில் வாசிக்கும் ஒருவர், இக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்ட இரண்டாவது விடயத்திற்கு அறிந்தோ, அறியாமலோ துணை போவதை விளங்கிக் கொள்ள முடியும்.

தினகரன், புலிப் பயங்கரவாதிகள் சிறையில் கலகத்தில் ஈடுபடுவதாகச் செய்தி வெளியிட, ஏனைய இரண்டு கொழும்புச் செய்திப் பத்திரிகைகளும், சிறைக்குள் நடந்த தாக்குதலை மோதலாகச் செய்தி வெளியிட்டு இருந்தன. முதல் நாள் தாக்குதல் மோதலெனப்படுவதற்கு ஓரளவு நியாயமானதெனினும், மற்றைய நாள் அப்படிப்பட்டதன்று. ஆனால் இரண்டையும் தமிழ்த் தினசரிகள் மோதலெனவே வெளியிட்டன.

***வீரகேசரி 07. 01. 2000***

களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகளும், சிறைக் காவலர்களும் மோதல் : ஒரு கைதி மரணம், 42 கைதிகளும், 12 காவலாளிகளும் காயம்.

***வீரகேசரி 08. 01. 2000***

களுத்துறைச் சிறையில் இரண்டாவது நாளாக, நேற்றும் மோதல் : ஒரு தமிழ் அரசியல் கைதி பலி, 05 பேர் காயம்.

***தினக்குரல் 07. 01. 2000***

களுத்துறைச் சிறைத் தமிழ்க் கைதிகளுக்கும், காவலர்களுக்கும் இடையே கடும் மோதல்.

### அடுத்து என்ன?

மேற்படி படுகொலைகளின் பின், இரண்டு குழுக்கள் விசாரணையில் ஈடுபடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை இரண்டும் நீதியமைச்சும், சிறை நிர்வாகமும் நியமித்துள்ள குழுக்கள். இவை எதையும் விசாரிக்கப் போவதுமில்லை, எதுவும் நடக்கப் போவதும் இல்லை. களுத்துறைச் சிறையதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டதாகவும், கரலியத்த பதவி நீக்கம் செய்யப்படுவதாகவும் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் வழமையான பம்மாத்துக்கள் தான்.

உடனடியாக அரசு செய்யவேண்டியது இரண்டு சுயாதீனக் குழுக்களை அமைத்தல்.

அ. படுகொலைச் சம்பவம் பற்றி நீதியான விசாரணை மேற்கொள்வதற்கும், அந்தக் குழு பரிந்துரை செய்யும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு, இனிவரும் காலங்களில் அனைத்துச் சிறைகளிலும் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல். குற்றவாளிகளைத் தண்டித்தல்.

ஆ. மற்றைய குழு, நீதியற்றுக் காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றி ஆராய்ந்து, அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

இந்த நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில், மேலும், மேலும் வெலிக்கடைகளும், களுத்துறைகளும் வரலாற்றில் இடம்பிடிக்கப் போவது உறுதி.

**இளங்கோ**

நன்றி - நூலகத்திட்டம்



# தொடரும் பாலியல் வல்லுறவுக் கொலைகள்

1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் யாழ்ப்பாணத்தில் பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றில் சில வெளிவந்துள்ளன. பல சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக மூடி மறைக்கப்பட்டுள்ளன. ஐந்து பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் கொல்லப்பட்டுள்ளனர். அம்மையாரின் ஆட்சியிலேயே பெண்கள் அதிகளவு அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது சொல்லித்தெரிய வேண்டிய ஒன்றல்ல.

01.05.96 அன்று கச்சாய்ப் பகுதியில் புஸ்பமலர் என்ற 22 வயதுப் பெண்மணி அதிகாலை வேளை வயலுக்குக் கணவருக்குத் தேநீர் கொண்டு சென்றபோது பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் கொல்லப்பட்டார். இவருடன் இவரது கணவரும் கொல்லப்பட்டார். இதே ஆண்டு இதே மாதம் யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி குமாரசாமி படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் நைலோன் கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

04.08.96 அன்று கெருடாவிலில் உள்ள கார்த்திகேசன் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்த படையினர் கார்த்திகேயனை வாளால் வெட்டிக் கொன்ற பின் அவரது மகள் பாலேஸ்வரியை (22 வயது) பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய பின் அவரையும் வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

30.10.96 அன்று ரஜனி வேலாயுதப்பிள்ளை என்ற 23 வயது யுவதி உரும்பிராயில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் கொல்லப்பட்டார்.

இந்த வகையில் கடந்த 28.12.99 அன்று புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் குருக்களின் மகளான சரவணபவானந்தக் குருக்கள் சாரதாம்பாள் என்ற ஒரு குழந்தையின் தாயான 20 வயதுப் பெண்மணி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் அவரது உள்ளாடையை (PANTY) வாய்க்குள் திணித்துக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த ஐந்து பாலியல் வல்லுறவுக் கொலைகளில் கிருஷாந்தியின் கொலையில் மட்டும் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. ரஜனியின் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏனைய இரு பெண்களின் விடயமும் எதுவித வழக்கு விசாரணையுமின்றி மறைக்கப்பட்டுவிட்டன.

சாரதாம்பாளுக்கு தாய் இல்லை தனது பதினாறாவது வயதிலேயே ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். ஒரு குழந்தை பிறந்ததும் கணவன் சாரதாம்பாளைக் கைவிட்டுச் சென்றுவிட்டார். அதன் பின் தந்தை புத்தி சுவாதீனம் குறைந்த ஒருவரைத் திருமணம் செய்துவைத்தார். புத்தி சுவாதீனமற்ற ஒருவருடன் எவ்வாறு வாழ்வது எனவே அவரையும் விட்டு விட்டு குழந்தை, தந்தை, சகோதரன் ஆகியோருடன் வாழ்ந்து வந்தார்.

சாரதாம்பாளின் தந்தை அனலைதீவுக் கோயிலுக்குச் சென்ற பின் சகோதரனுடனேயே சாரதாம்பாள் வசித்து வந்தார். அப்போது தான் இந்த பாலியல் வல்லுறவுக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாரதாம்பாள் தனியே தம்பியாருடன் வசித்து வந்தது கடற்படையினரின் கண்களில் பட்டுவிட்டது. இதனால் அடிக்கடி சாரதாம்பாளிடம் போய் தண்ணீர் கேட்பது தீப்பெட்டி கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

புங்குடுதீவுப் பகுதியில் கடற்படையினர் விதவைகளைத்தேடிவந்து தொந்தரவு கொடுப்பதாக அங்கு கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். எட்டு மாதங்களுக்கு முன்னரும் புங்குடுதீவில் ஊமைப் பெண் ஒருவர் நான்கு படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். எனினும் இச்சம்பவம் மூடிமறைக்கப்பட்டுவிட்டது.

சாரதாம்பாளின் சம்பவம் இடம்பெற்ற பின்னரும் கடற்படையினர் கடந்த சில தினங்களுக்கு முன் தையல் வகுப்புக்குச் சென்று வந்த பெண் ஒருவரை இழுத்துச் சென்று வல்லுறவுக்கு முயற்சித்ததாகவும் அந்தப் பெண் பறித்துக் கொண்டு தப்பி வந்துவிட்டதாகவும் அங்கு கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். வேறு இரு சந்தர்ப்பங்களில் இரவு நேரம் சண்முகலிங்கம் என்பவரின் வீட்டிற்குச் சென்று துங்கிக் கொண்டிருந்த பெண்மணியின் மீது ஜன்னலூடாக தண்ணீரைத் தெளித்ததாகவும் அப்பெண் எழுந்தவுடன் படையினர் ஓடிவிட்டதாகவும் மற்றொரு சம்பவத்தில் கணவனைச் சாராயம் வாங்குவதற்கு வேலணைக்கு அனுப்பிவிட்டு மனைவியுடன் சேட்டை விட்டதாகவும் தெரியவந்தது.



புங்குடுதீவில் சாராயம் தாராளம். யாராவது தமது சொந்தத் தேவைக்கு ஒரு போத்தல் இரண்டு போத்தல் எடுத்து வந்தால் மட்டும் படையினர் அவற்றுக்குத்தடை விதிப்பர். ஆனால் சாராய வியாபாரிகளிடமிருந்து படையினருக்கும் மாமூல் போவதாகவும் இதனால் படையினர் அவர்களைத் தடுப்பதில்லையெனவும் அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சமயம் கடற்படைத் தளபதியும் பொதுசனத்தொடர்பு அதிகாரியும் லீவில் சென்றிருந்தனர். சாரதாம்பாளின் முகம் முழுவதும் கடிகாயங்கள் காணப்பட்டுள்ளன. பல் உடைந்துள்ளது.

எதிரிகளுடன் கடும் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னரே சாரதாம்பாள் மரணமடைந்துள்ளார். கடற்படை சிப்பாய் ஒருவரின் கைகளிலும் கழுத்திலும் கடிகாயங்கள் காணப்படுவதாகவும் அந்தக்காயங்கள் எப்படி ஏற்பட்டது என்று சிப்பாயிடம் கேட்டதற்கு நாய் கடித்ததாக அந்தச்சிப்பாய் கூறியதாகவும் ஆனால் இந்தக் காயம் சாரதாம்பாள் கடித்த காயமே என்றும் எமக்குக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. சாரதாம்பாளின் கொலைச்சம்பவம் இடம்பெற்ற அடுத்த நாள் காலையில் பொதுமக்கள் சாரதாம்பாளைத் தேடித்திரிந்த போது குறிப்பிட்ட ஒரு இடத்திற்குச் செல்லவிடாது கடற்படைச்சிப்பாய் ஒருவர் தடுத்ததாகவும் அந்த இடத்திலேயே சாரதாம்பாளின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் புங்குடுதீவு வாசிகள் தெரிவித்தனர்.

சாரதாம்பாளின் சடலம் மீட்கப்பட்ட பின்னர் அப்பகுதிப் பெண்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர். இவர்களையும் ஊர்வலத்திற்குச் செல்ல விடாது கடற்படையினர் தடுத்துள்ளனர். அத்துடன் ஊர்வலத்தையும் புங்குடுதீவில் வைத்து கடற்படையினர் தடுத்துள்ளனர். பின்னர் வேலணை உதவி அரசாங்க அதிபரும் கடற்படைத் தளபதியும் ஊர்வலத்தை நோக்கிச் சென்று ஊர்வலக்காரரைச் சந்தித்துள்ளர்.

ஊர்வலத்தில் எண்ணூறுக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் பெண்கள். பல பெண்கள் பிள்ளைகளின் பசியையும் பொருட்படுத்தாது கைக்குழந்தைகளுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் பெண்கள் எழுப்பிய கோஷங்களில் முக்கியமானது "நாங்கள் இருப்பதா வெளியேறுவதா" என்பதே. (ஊர்வலம் சென்றவர்கள் மீதும் சிப்பாய்கள் மிகவும் கடுமையாக நடந்து கொண்டனர்) மும்மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களைப் பெண்கள் எடுத்துச் சென்றனர்.

இப்போது புங்குடுதீவுப் பெண்களிடம் படையினர் கடுகடுப்புடன் நடந்து வருகின்றனர். பாஸ் புதுப்பிக்கப் போனாலும் சரி வேறு தேவைகளுக்காக முகாமுக்குச் சென்றாலும் சரி காவலரண்களிலும் சரி பெண்கள் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்படுகின்றனர். நீங்கள் தானே ஊர்வலம் போனீர்கள் என்ற வார்த்தையும் படையினரிடமிருந்து வருகிறது என்கின்றனர் அல்லலபடும் அப்பெண்கள்.

நீங்கள் ஏன் ஊர்வலம் போனீர்கள் இது எனக்கு எவ்வளவு அவமானம் தெரியுமா என்று கேட்டாராம் கடற்படை தளபதி. இந்தப்படிப்பறிவற்ற முட்டாள்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை என்றாராம் மேலும் அந்த அதிகாரி.

இப்போது இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் ஆரம்பத்தில் துணிந்து சாட்சி சொல்ல முன்வந்தவர்கள் இப்போது சாட்சி சொல்லத் தயங்குகின்றனர்.

2000ம் ஆண்டில் யாழ்ப்பாண மக்களுக்கு விமோசனம் வேண்டும், தமிழன் தமிழன் என்ற பெருமையோடு வாழ சந்திரிகாவுக்கு வாக்களியுங்கள் என ஜனாதிபதித் தேர்தலின் போது முதுகு சொறியும் கூட்டம் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகளை ஒட்டியது. 2000ம் ஆண்டில் யாழ் மக்களுக்கு விமோசனம் என்று தானே இவர்கள் சுவரொட்டி ஒட்டினார்கள். அம்மையார் ஏனைய மாவட்டங்களில் தோற்றாலும் யாழ்ப்பாணத்தில் வெற்றியீட்டினார். தனக்கு வாக்களித்த மக்களுக்கு அம்மையார் புத்தாண்டுப்பரிசாக சாரதாம்பாளை சொர்க்கத்துக்கு அனுப்பியுள்ளார். அம்மையாரின் பதவிக்காலம் முடிவதற்கிடையில் இன்னும் எத்தனை சாரதாம்பாள்களோ?

– எழுவான்

## மடக்கிப் பிடிக்க வழி!

பொலிஸ் உயரதிகாரிகளின் பாவனைக்கென அதிவசதி வாய்ந்த 150 வாகனங்களும் 500 ஜீப் வண்டிகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரியவருகின்றது. பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு விரோதமாக மாறுவதிலிருந்து தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் கருதப்படுகின்றன.

இந்த வாகனங்கள் வழங்கப்படுவதைத் தவிர, பொலிஸ் அதிகாரிகளுக்கான புதிய வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பிக்கவும், தற்போது உத்தியோகபூர்வ இல்லங்களில் உள்ள பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து வீட்டு வாடகையை அறவிடுதலை நிறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பொலிஸ் அதிகாரிகளின் பிள்ளைகளுக்கென பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்கவும், சம்பளங்களை அதிகரிக்கவும் ஜனாதிபதி ஆலோசனை நடத்துவதாக தெரியவருகின்றது.

## பாதுகாப்புப் பிரிவுள் பாதுகாப்பில்லை!

கடந்த புதன் கொழும்பு பிரதமர் அலுவலகத்தின் முன் குண்டு வெடிக்க வைத்த தற்கொலை குண்டுதாரியின் இலக்கு, பாதுகாப்புப் பிரதியமைச்சர், ஜெனரல் ரொஹான் தளுவத்த, லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியவர்களில் ஒருவராக இருக்கலாமென பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகம் தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

அன்றைய தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற இராணுவம் தொடர்பான பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவென மேற்கூறப்பட்ட நால்வரும் அந்த வழியில் பயணிக்கவிருந்ததாக தெரியவருகின்றது. இவர்கள் அத்தினம் அவ்வழியினூடாக பயணிக்கவுள்ளனர் என்பதை பாதுகாப்புப் பிரிவு மட்டுமே அறிந்து வைத்திருந்ததினால், புலிகளும் பாதுகாப்புப் பிரிவின உதவியுடன் இவ்விடயத்தை அறிந்துகொண்டனரா என்பதை ஆராய்ந்து வருவதாகப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளுக்கு எதிரான முன்னணி:

## ஆளும்கட்சி அமைச்சர் பின்னணியில்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களை கடந்த புதனன்று கொலை செய்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு அடுத்த நாள் 'புலிகளுக்கெதிரான தேசிய முன்னணி' என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டதன் பின்னணியில், அரசாங்கத்தின் பிரபல அமைச்சர் ஒருவர் இருப்பதாக ஐயம் தெரிவிக்கப்படுகின்றது.

வெளியீட்டு இலக்கம் 01 என குறிப்பிடப்பட்டிருந்த இந்த அறிக்கை, தொலைமடல் மூலம் பத்திரிகை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆணையிடும் அதிகாரி விஜய ரணவாகு என்ற பெயரில் கையொப்பமிடப்பட்டிருந்த அந்த அறிக்கை, கொழும்பின் பிரபலமான தனியார் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்ததாக தெரியவருகின்றது. சிலவேளை குறிப்பிட்ட அவ்வமைச்சருக்கு தெரியாமல் அவரது அமைச்சில் சேவை புரியும் சிலரினால் இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## மண்டையோட்டு வாழ்த்து!

அரசாங்கத்தின் விரோதத்திற்கு உள்ளாகியிருக்கும் வர்த்தகத் துறையைச் சேர்ந்த பிரதான வர்த்தகர்கள் இருவருக்கு, புதுவருடத்திற்கான வாழ்த்து அட்டைகளாக மண்டையோடுகள் இரண்டு உள்ள அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த சம்பவம் வர்த்தகத் துறையினரிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து விட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துள் சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு அண்மையில் சிலை எழுப்பப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இருபத்தைந்து ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாகவே இச் சிலை எழுப்பப்பட்டது என்றும் தெரிய வருகிறது. இது தான் யாழ் பல்கலைக்கழகம் பற்றிய இக்கட்டுரைக்கு உந்துதல் ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருபத்தைந்து வருடங்களை நிறைவு செய்து விட்டமை பல வழிகளிலும் ஒரு சாதனை என்பது உண்மை. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால நிலை பின்னர் முழு அளவிலான யுத்தம் எனத் தீவிரமான பல நெருக்கடிக்குள்ளும் பாரபட்சம் - நிதியுதவி இல்லாமை, பேராசிரியர்கள், கல்விமான்கள் வெளியேறுதல் போன்ற அக நெருக்கடிக்குள்ளும் தப்பிப் பிழைத்து வாழ்வது என்பது மிகவும் முக்கியமான அம்சம் தான். அந்த வகையில் கல்வி என்பது தான் பெரிய முதலீடு என்கிற பாரம்பரிய யாழ்ப்பாண மனோபாவத்தின் குறியீடாகவும் எத்தகைய சூழலிலும் தப்பிப் பிழைத்தல் என்கிற உள்ளுணர்வின் குறியீடாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் துலங்குகின்றது என்பது மிகையான கூற்றல்ல.

கடந்த இருபத்தைந்து வருடங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினூடாக உருவாகிய விஞ்ஞானிகள், போராளிகள், எழுத்தாளர்கள், நடிகர்கள், இலக்கியகாரர்கள் கணிசமான அளவுக்கு உள்ளனர். இவர்களில் பலர் உலகமெங்கும் துண்டு துண்டாகச் சிதறிப் போய்க் கிடக்கிறார்கள். இவர்கள் அனைவரதும் பங்களிப்பு, இவர்களுடைய ஆளுமை உருவாக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பங்கு என்ன ஆகிய கேள்விகளுக்கான ஒரு பதிலைக் கணக்கெடுப்பாகத் தருவது இப்போதைக்கு இயலாது. அதற்காக நாம் எல்லோரும் காத்திருக்க வேண்டியது தான். எனினும் இருபத்தைந்து வருட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் அதனுடைய சமூக, அரசியல் வரலாற்று முக்கியத்துவம் பற்றியும் தன்னுடைய வரலாற்று, சமூகச் சவால்களை அது சீரிய முறையில் எதிர் கொண்டுள்ளதா என்பது பற்றியும் நாம் பேச முடியும். 1979 இலிருந்து 1983 வரையான காலப் பகுதியில் மாணவனாக இருந்தபடியாலும் பல வழிகளில் யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல் வரலாற்றில் ஒரு கொந்தளிப்பான காலத்தை இக் காலகட்டம் ஆரம்பித்து வைத்தது என்பதாலும் ஈழப் போராட்டத்தின் இடைக்கால மையங்களில் ஒன்றாக யாழ் பல்கலைக்கழகம் இருந்தது என்பதாலும் சில விஷயங்களை உரத்துச் சிந்திப்பது பொருத்தமானதே.

வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களிலிருந்து கணிசமான அளவு மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருந்தமையும் முஸ்லிம் மாணவர்களின் இருப்பும் பல்கலைக்கழகத்தின் மாணவர் சமூகத்தின் இயல்புக்கு ஒரு தனியான வலுச் சேர்த்தது. எனினும் யாழ்பாணப் பல்கலைக்கழகம் பெயருக்கு ஏற்ப யாழ்ப்பாணச் சமூகத்தையே பிரதிபலித்தது. யாழ்ப்பாணத்துச் சமூக, அரசியல் வரலாற்றில் இரண்டு வகையான பிரதானமான போக்குகளை நாங்கள் இனங் காண முடியும். ஒரு போக்கு - இது தான் ஆதிக்கம் பெற்ற போக்காக இருந்தது - இராமநாதன் பாரம்பரியம் என்று அழைக்கப்படுகிற இந்தப் போக்கு யாழ்ப்பாணியத்தின் சின்னங்களான சாதிப் பாகுபாடும் ஒடுக்கு முறையும், சைவ சித்தாந்தத்தில் மையங் கொண்ட சைவமும் அதனோடு இணைந்ததாக மட்டுமே தமிழை அடையாளப்படுத்துவதும் என்னும் தன்மைகளைக் கொண்டிருந்தது.

ஆறுமுக நாவலர், இராமநாதன் பிறகு அடங்காத் "தமிழன்" சி. சுந்தரலிங்கம் இப்போது (வேறு பலருடன் சேர்த்து, சேர்ந்து) நடேசன் சத்தியேந்திரா என இந்தப் போக்கிற்குப் பல பிரதிநிதிகள் உள்ளனர். இராமநாதன் பாரம்பரியத்தின் அடிப்படையான கூறு தமிழ்ச் சமூகத்தின் (யாழ்ப்பாணம் சமன் தமிழ்!) சாதிப் படிமுறை அமைப்பைப் பேணுவதும் இந்தப் படிமுறை அமைப்பில் சைவ வெள்ளாளர்களின் அரசியல், சமூக, பொருளாதார மேலாட்சியை என்ன விலை கொடுத்தாவது பேணுவது என்பதும் தான். 1920-30களில் பள்ளிக் கூடங்களில் சாதியமைப்பையும் படிநிலையையும் புறக்கணித்த மாணவர்களுக்கு சம ஆசனம் மற்றும் சம உணவு வழங்கப்படுவதை இராமநாதன் எதிர்த்தார். இந்த எதிர்ப்பு இலங்கையின் மகா தேசாதிபதியைச் சந்தித்து முறையிடும் அளவுக்கு அவரைக் கொண்டு சென்றது. "தாழ்த்தப்பட்ட சாதியினர்" தமது சா ஊர்வலத்தில் பறையைப் பயன்படுத்திய போது அத்தகைய சடங்குகளைப் பயன்படுத்தும் உரிமை தாழ்த்தப்பட்டவர்களுக்கு இல்லை என இராமநாதன் வாதாடினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படுவதையும் இராமநாதன் எதிர்த்தார். இவர்கள் அனைவருக்கும் சர்வசன வாக்குரிமை கிடைத்தால் அது யாழ்ப்பாணத்தின் சைவ வாழ்க்கை முறைமையை ஊறுபடுத்தும் என்று இராமநாதன் கருதினார். "கால வழுவமைதி" என்ற ஒரு நியாயத்தை இராமநாதனுக்காக



யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இராமநாதனின் சிலை

எவராவது முன்வைக்கக் கூடும். எனினும் அது உயிரோட்டம் அற்றது. ஏனெனில் இராமநாதனோடு கூடப் பிறந்த அருணாசலத்தையே மாற்றாக நாம் உதாரணம் காட்ட முடியும். கூடவே இளைஞர் காங்கிரஸ், யாழ்ப்பாணம் (பலரும் எழுதுவது போல 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்' அல்ல இதன் பெயர். யாழ்ப்பாணத்துள் மட்டும் குறுகி விடாது முழு இலங்கைக்குமான இளைஞர் காங்கிரஸாகவே இந்த இயக்கம் தொழில் பட விரும்பியது. இவ்வியக்கியத்தின் யாழ்ப்பாணக் கிளையே இளைஞர் காங்கிரஸ், யாழ்ப்பாணம் என வழங்கப்பட்டது) என்ற அமைப்பு சமூக சமத்துவத்துக்கும், சாதி ஒழிப்புக்கும் இலங்கைக்கான மாற்றான சுதந்திரத்துக்கும் போரிட்டது. இது இரண்டாவது போக்கு ஆகும். இராமநாதன் பாரம்பரியமும் இளைஞர் காங்கிரஸ் பாரம்பரியமும் ஒன்றுக்கொன்று எதிரான போக்குகளாக இருந்தன.

# இராமநாதன் பாரம்பரியமும் இளைஞர் காங்கிரஸ் பாரம்பரியமும்

இளைஞர் காங்கிரஸ் பாரம்பரியம் ஜனநாயகத்தையும் சமூக சமத்துவத்தையும் யாழ்ப்பாணச் சூழலில் வலியுறுத்தியது. ஒரு காலகட்டத்தில் தீவிரமான இயக்கமாகவும் இது இருந்தது. ஆரம்ப கால இடதுசாரி இயக்கங்கள், சாதிப் போராட்டங்கள் பின்னர் ஈழப் போராட்டத்தின் முற்போக்கான, ஜனநாயகக் கூறுகள் ஆகியவற்றை இளைஞர் காங்கிரஸின் கருத்தியல் மற்றும் ஆத்மீகத் தொடர்ச்சியாக நாங்கள் கொள்ள முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இருபத்தைந்து வருட கால வரலாற்றைப் பின்னோக்கித் திரும்பிப் பார்க்கிறபோது இந்த இரண்டு போக்குகளுமே தாராளமாகப் பிரதிபலிக்கப் பட்டுள்ளமையைக் காண முடியும். பல்கலைக்கழக நிர்வாகம், ஆளுநர் சபை என்பன பெருமளவுக்கு இராமநாதன் பாரம்பரியத்தைப் பேணி வந்தன. விரிவுரையாளர், பேராசிரியர்கள் நியமனங்கள் என்பனவற்றிலிருந்து பல்கலைக்கழகத்தின் 'கருத்தியலை' தீர்மானிப்பது வரை நேரடியாகவும் மறைமுகமாகவும் இராமநாதன் பாரம்பரியம் தொழிற்பட்டது. இதற்குச் சவாலாக எதிர்ப்புக் குரல் எழுப்பிய விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இருந்தனர் தான்.

எனினும் இராமநாதன் பாரம்பரியம் எதிர் இளைஞர் காங்கிரஸ் பாரம்பரியம் என்பதும் பல சந்தர்ப்பங்களிலும் மறைமுகமாகவும் தொடர்ந்து வந்தது. முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட பிற்பாடு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய நாகரீகத்துறை முற்றாகவே இல்லாமல் போய் விட்டது. கிறிஸ்தவ நாகரீகத்துறை பலத்த சிரமங்கள் மத்தியில் நின்று பிடித்தது. அடிக்கடி விளம்பரம் செய்யப்பட்டாலும் சைவ சித்தாந்தத்துக்கு ஒரு பீடாதிபதியை இன்னும் தேடிக் கண்டு பிடிக்க முடியாமலேயே இருக்கிறது! யாழ் பல்கலைக்கழகத்தை ஒரு சார்பற்ற அறிவு சார்ந்த, சீரிய நிறுவனமாகவும் இயக்கமாகவும் வளர்த்தெடுப்பதில் நிறையச் சங்கடங்கள் இருக்கின்றன. பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு புத்திஜீவி சரிநிகர் இதழில் குறிப்பிட்டது போல யாழ் பல்கலைக்கழகம் தனது தொடக்க காலங்களில் பேணிய அகன்ற பார்வையையும் விரிந்த நோக்கத்தையும் இப்போது இழந்து விட்டது. இதனுடைய சிகரமாகத்தான் இராமநாதனுக்கு வளாகத்தில் சிலை எழுப்பப் பட்டமையை நாங்கள் பார்க்க வேண்டும். மறுபுறத்தில், தொடர்ந்து வந்த பல்கலைக்கழக மாணவர் அவைகளும், அவ் அவைகள் தொழிற்பட முடியாத போது இயங்கிய அமைப்புக் குழுக்களும் இராமநாதன் பாரம்பரியத்தின் மேலாட்சிக்கு எதிராகச் சமூக, அரசியல் மட்டத்தில் நடவடிக்கைகளில் இறங்கின. (வ.ஐ.ச.ஜெயபாலன், மரியாம்பிள்ளை செல்வின், அ.விமலதாசன், ஏ.ஜோ. ஜெயராஜா, ஜெராட் சவிரிமுத்து, சி. அனந்தபாலன், கு. இராசநாயகம், சிறீஸ்கந்தராஜா, அருள்ராஜா போன்ற மாணவர் தலைவர்கள் குறிப்பிடத் தகுந்த அளவில் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1979 ல் கைதடியில் இடம் பெற்ற 'தாழ்த்தப்பட்ட' மக்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் பேரணி ஒன்றை நடத்தினர். இப்பேரணியில் தான் சாதி அமைப்பைத் தங்க வைக்கும் அனைத்துச் சாதி சார்ந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் ஒழிக்க வேண்டாம் என்ற கோரிக்கை விடப்பட்டதுடன் இவற்றை விளக்கிப் பல்லாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

கைதடித் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியும் பாதுகாப்பும் பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கப்பட்டது. 1978ல் கிழக்கு மாகாணம் பயங்கரமான புயலினால் பாதிக்கப்பட்டபோது பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு வாரம் வகுப்புக்களைப் புறந்தள்ளி விட்டு குடாநாடு முழுவதும் ஆடைகள், கிடுகு மற்றம் உலர் உணவு சேகரித்துக் கிழக்கில் விநியோகம் செய்தனர். இக் காலகட்டப் பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் உயர்தர மாணவர்களுக்கு இலவச வகுப்புகளை ஒவ்வொரு சனி, ஞாயிறும் தொடர்ச்சியாக பல்கலைக் கழக மாணவர்கள் நடாத்தி வந்தனர்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஜே.ஆர் அரசு முன்வைத்த போது அச் சபைகள் உள்ளீடு அற்ற வெறும் தந்திரோபாய ரீதியான அரசியல் நடவடிக்கை என்பதை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அம்பலப்படுத்தினர். மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பான ஆய்வரங்கு நடாத்தப்பட்ட ஆரம்பத்தில் இணங்கியிருந்த போதும் எந்தப் பிரதிநிதியையுமே அனுப்பவில்லை. கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

தெற்கின் பல்கலைக்கழகங்களிலிருந்த தமிழ் மாணவர்கள் அடித்து விரட்டப்பட்ட பிற்பாடு இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்கள் அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பு யாழ் பல்கலைக்கழகத்திலே மையங்கொண்டு செயற்பட்டது. இவ் அமைப்பு முன்னெடுத்த சாகும் வரை உண்ணா விரதப் போராட்டம் பெரிய அனுதாப அலைகளை எழுப்பிற்று. விடுதலைப் புலிகளின் தலையீட்டால் உண்ணாவிரதப் போராட்டம் இடை நிறுத்தப்பட்டது. கணிசமான அளவினர் ஈழப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து கொண்டனர். 1986 இல் ரெலோ இயக்கத்தில் ஏற்பட்ட உட்பகையின் விளைவாக தாஸ்-பொபி என இரண்டு குழுக்களாகப் பிரிந்து அவர்கள் மோதினர். இதன் விளைவாக தாஸ் குழுவினரின் முக்கியமானவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடலையாவது தரும்படி கேட்டுப் பொதுமக்கள் சென்ற எதிர்ப்பு ஊர்வலத்தின் மீது "பொபி" குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு எதிரான கண்டனக் கூட்டமும் ஊர்வலமும் பல்கலைக்கழக மாணவர்களாலேயே நடாத்தப் பெற்றது. அச் சூழலில் பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பொது மக்கள் சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்துஉருவாக்கியிருந்த அமைப்புக் குழு, அனைத்து ஈழப் போராட்டக் குழுக்களிடமிருந்தும் பொது மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கைவிடுதல், ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குதல் என்ற அம்சங்களில் இணக்கத்தை ஏற்படுத்த முயன்ற போதும் அது வெற்றி தரவில்லை. 1987ன் ஆரம்பத்தில் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்திச் செல்லப்பட்ட போதும் மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்தினர். ஈழப் போராட்ட இயக்கங்களைத் தீவிரமாகக் கேள்விக்குள்ளாக்கிய இந்தப் போராட்டம் அப்போதைய விடுதலைப் புலிகளின் யாழ் தலைவர் கிட்டுவின் தலையீட்டால் முடித்து வைக்கப்பட்டாலும் விஜிதரன் பற்றிய எந்தத் தகவலுமே இதுவரை இல்லை. உண்ணாவிரதப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய மாணவர் தலைவர்களில் ஒருவரான சி.விமலேஸ்வரன் பின்னர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் இருபத்தைந்து வருட கால வரலாற்றில் இவை முக்கியத்துவம் வாய்ந்த சில எதிர்ப்புப் போராட்டங்களாகும். ஈழப் போராட்ட இயக்கங்கள் பலம் பெற்று மேலெழுந்த போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவைகளுக்குத் தமது சுயாதீனத்தைப் பேண முடியவில்லை. இயக்கங்கள் தமது கட்டுப்பாட்டிலும் தமது ஆளுமைக்குள்ளுமே பல்கலைக் கழக மாணவர்களை அடக்கிக் கொண்டு விட்டனர். 1990-1995 காலகட்டப் பகுதியில் இந்த நிலைமை பூரணத்துவம் பெற்று விட்டது. ஒரு பல்கலைக்கழகத்தின் தரத்தைத் தீர்மானிப்பவை அதன் கட்டிடங்களும் பெயரளவிலான கீர்த்தியும் அன்று. கல்வி, ஆய்வு இரண்டிலும் புதுமை, நோட்டுப் புத்தகங்களை மனனம் செய்து விட்டுக் குறும்பார்வையுடன் வெளியேறுகிற பட்டதாரிக் கூட்டங்களை உருவாக்குவதிலிருந்து விலகி சிந்தனையும் தேடலும் உடைய சீரிய மாணவர்களை உருவாக்குவது, தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் சமூக-உளவியல், சமூகவியல், பொருளாதார மற்றும் பிற அறிவுத்துறைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதில் தீவிரமாக உழைத்தல் என்பன பல்கலைக்கழகங்களின் முக்கியமான பணியாகும். 1990-95 காலகட்டத்தில் தீவிரமான பொருளாதார நெருக்கடிகளுக்கு யாழ்ப்பாணச் சமூகம் முகம் கொடுத்த வேளை தருணத்திற்கேற்ற தொழிநுட்பங்கள், அபிவிருத்தி போன்ற அம்சங்களில் யாழ் பல்கலைக்கழகம் முன்னோடியாகப் பணி புரிந்தது. எனினும் அறிவுத் தேட்டத்தின் இயங்கு விசையான எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கு (Ominibus Dubitandem) என்பதை சமூக, அரசியல், கல்வியல் தளங்களில் பேணவும் முன்னெடுக்கவும் யாழ். பல்கலைக்கழகம் தவறி விட்டது. இதனுடைய முக்கியமான ஒரு பக்க விளைவு தான் ஆழமும், விரிவும் சுயசிந்தனையும் மிக்க ஒரு அறிஞர் குழாம் (நுஃமான், இரகுபதி, இந்திரபாலா, வி.நித்தியானந்தன், சிவத்தம்பி, போன்றோர்) வெளியே இருப்பது, சார்ந்ததன் வண்ணமாக மாறக் கூடிய பல Mediocres உள்ளே இருப்பது!

—சேரன்

நன்றி - நூலகத்திட்டம்




# வன்முறை அரசியலை உருவாக்கிய வரலாற்றுத் தடங்கள்...

1956ம் ஆண்டு ஈழத் தமிழர்களைப் பொறுத்தளவில் ஒரு முக்கிய ஆண்டாகவே கொள்ளப்படல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதியாக விளங்கும் இக் காலப்பகுதியே, ஈழத்தமிழர்கள் இதுகாலவரை ஒப்பீட்டளவில் அனுபவித்து வந்த, ஆற்றொழுக்காகச் சென்ற இதமான வாழ்க்கையை ஒரு உலுக்கு உலுக்கியெடுத்து கேள்விக் குறியாக்கிய பகுதியாகும்.

ஈழத்தமிழர்கள் இறுக்கமாகப் பற்றியிருந்த வாழ்க்கை இருப்பு, கொப்பொடிந்து போனதுபோல் தலை குப்புற விழுந்தது.

இந்தநிலை தமிழர்களுக்குச் சித்திக்கக் காரணமாய் இருந்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.-பண்டாரநாயக்கா! அதற்கு அவருக்குத் துணையாய் இருந்தது அவர் கொண்டுவந்த 24 மணித்தியாலயத்திற்குள் நாடெங்கும் அமுல்படுத்தப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம்!



எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

இக்காலகட்டத்தில் நான் சிங்கள நகரொன்றில் 10ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் சிறுவன்.

அரசியல் என்றால் என்னவென்று அதிகம் தெரியாதவன். இருந்தபோதும் அப்பொழுது நடந்த சில முக்கியமான விஷயங்கள் என் கண் முன் வருகின்றன.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வநாயகம் தலைமையில் பழைய பாராளுமன்றமிருந்த காலிமுகக் கடற்கரைத் திடலில் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலமும் அவர்களோடு சேர்ந்து இதில் பங்கு பற்றுகிறார்.

திடீரென அவர்கள் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தேறுகிறது.

அரசியல் விஷமிகளின் தூண்டுதலில் காடையர்கள் கட்டவிழ்த்துவிடப்பட, சத்தியாக்கிரகம் செய்த செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம் உட்பட ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுகின்றனர். கற்கள் அவர்களைப் பதம் பார்க்கின்றன. அவர்கள் மண்டைகளில் இருந்து இரத்தம் வழிகிறது.

முதன்முதலாக தமது உரிமைக்காக சாத்வீகமாகப் பேராடிய தமிழ் அரசியல் தலைவர்கள் மீது சிங்கள அரசியல்வாதிகளால் வன்முறை ஏவப்படுகிறது.

சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த, வியாபாரம் செய்த, உத்தியோகம் பார்த்த தமிழர்கள் மீது இனவாத வன்முறை அலை வீசுகிறது.

பதவியாவில் இருந்து, தமிழ்பேசும் மக்களின் நிலங்களை கபளீகரம் செய்யும் முகமாக குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்கள், வடபகுதி, வன்னிப் பகுதி நோக்கி அங்குள்ள தமிழர்களை கொன்றொழிப்பதற்காக கத்தி, வாள் என்று பலவித கொடிய ஆயுதங்களோடு லொறிகளில் படையெடுப்புச் செய்கின்றனர்.

நான் பாடசாலையிலிருந்து எனது ஆசிரியர்களின் பாதுகாப்போடு எனது இருப்பிடத்திற்குப் போகிறேன்.

அப்போது நான் வாழ்ந்த சிங்கள நகரத்தில் இருந்த தமிழர்களின் கடைகள் அடித்து நொருக்கப்பட்டு, பொருட்கள் தெருக்களில் சிதறப்பட்டுக் கிடக்கின்றன. போத்தல் ஓடுகள் தெருவெங்கும் சிதறப்பட்ட நிலையில்...

முதன் முதலாக தமிழர்களின் மனதில் அச்சம், தம் இருப்பின் நிலையாமை புகுந்து கொள்கிறது.

இதன் ஆவணமாக முன்னாள் டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியரான தாஸி வித்தாச்சி எழுதிய நூல் 'நெருக்கடி நிலை 56' (Emergency 56') நிற்கிறது.

1958ம் ஆண்டு வரலாறு மீண்டும் இனவாத முகம் பூண்டு தன்னைத் திருப்பித் தருகிறது.

1957ல் பண்டா - செல்வா ஒப்பந்தம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இரு தரப்பினரும் ஒரு சுமுகமான இணக்கத்துக்கு வருகின்றனர். அதன் விளைவே பண்டா- செல்வா ஒப்பந்தம்.

ஆனால், ஆழமாகப் புரையோடிய சிங்கள இனவாத - சந்தர்ப்பவாத அரசியல், இதற்கு அவ்வளவு இலகுவில் விட்டுக் கொடுத்து விடுமா?

ஜே.ஆர். ஜயவர்த்தனா, இலங்கையை பண்டாரநாயக்கா துண்டாட வழிவகுப்பதாகப் பிரச்சாரம் செய்யும் பாணியில் கண்டி யாத்திரையை மேற்கொள்கிறார்.

பிக்குமார் ஒப்பந்தத்திற்கு எதிராக தூண்டி விடப்படுகின்றனர்.

பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிகிறார்.

ஏமாற்றப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைமை, வவுனியாவில் தம் அடுத்த உரிமைப் போராட்ட நடவடிக்கைக்காக மாநாடொன்றை ஏற்பாடு செய்கிறது.

அதைச் சிங்கள இனவாதம் எதிர்கொண்ட விதம்? மீண்டும் ஒரு இரத்தக்களரி! 1958ல் 56ல் நடந்ததைவிட மோசமான இனக்கலவரம் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

சிங்களப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப் படுகின்றனர். தமிழ்ப் பெண்கள் வன்புணர்வுக்குள்ளாக்கப்படுகின்றனர். சிறுவர்கள் கூட தப்பவில்லை.



பாணந்துறையில் வாழ்ந்த எனது அண்ணன் முறையான ஒருவர் மிகக் குரூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு நெருப்பில் வீசப்படுகிறார்.

இச் சம்பவத்தை அடிப்படையாக வைத்தே மு.த. 'இரத்தம்' என்ற சிறுகதையை எழுதுகிறார்.

1958 இனக்கலவரத்தை, பண்டாரநாயக்கா விரும்பியிருந்தால் அடக்கியிருக்கலாம். அவர் 24 மணித்தியாலங்கள் பிந்தியே ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துகிறார்.

காரணம் என்ன?

தமிழர்கள், சிங்களவர்களின் வன்முறையைச் சுவைக்கட்டும். அதுதான் அவர்களுக்கு பாடம் புகட்டும் என்னும் அவரது அந்தரங்க ஆசையே. "Let them taste it" என்று பண்டாரநாயக்கா அசட்டை செய்திருக்காவிட்டால் அத்தனை தமிழர்கள் 58ல் இறந்திருக்க மாட்டார்கள். இந்த உதாசீனத்தால் நேர்ந்த கர்மந் தான் பண்டாரநாயக்காவை அடுத்த சில மாதங்களுக்குள் பழிவாங்கிற்றோ என்னவோ!

பின்னர் மூன்று வருடங்களுக்குப் பின்னர் 1961ல் தமிழரசுக் கட்சியினர், மீண்டும் தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். பெரியளவிலான சத்தியாக்கிரகப் போராட்டம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆரம்பிக்கப்படுகிறது. இப்போராட்டம் வடகிழக்குப் பிரதேசத்தின் நிர்வாகத்தை மூன்று மாத காலம் ஸ்தம்பிதம் அடையச் செய்கிறது. இதனால் அசௌகரியத்துக்குள்ளான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இயங்கிய அரசாங்கம், அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்து, இரவோடிரவாக இராணுவத்தை ஏவி, சத்தியாக்கிரகிகளை அடித்து உதைத்து, அப்போராட்டத்தையே முற்றுக்கு கொண்டு வருகிறது.

இக்காலத்தில் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட போராட்டத்தை எதிர்த்து, பீக்கிங், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சண்முகதாசன் கூட வன்மையாகக் கண்டித்து, அது ஒரு பிற்போக்குத் தனமான போராட்டம் என அறிக்கை விடுகிறார். பின்னர் இறக்கும் தறுவாயில் "தாம் பெரிய பிழை செய்து விட்டோம். தமிழ் மக்கள் உரிமைப் போராட்ட விஷயத்தில்" என்று அவர் அறிக்கை விட்டது காலங் கடந்த ஞானமாகும். என்றைக்குமே இடதுசாரிக் கட்சிகள் தமிழ் மக்கள் விஷயத்தில் பாரபட்சமாக நடந்தமையே அவர்கள் செல்வாக்கு தமிழ் மண்ணில் ஊன்றாமல் போனதற்குக் காரணமாகும்.

1961ல் நடந்த போராட்டத்துடன் தமிழரசுக் கட்சியினரின் மங்கு திசை ஆரம்பமாகி விட்டது. அவர்கள் போராட்டத்தை அரசாங்கம் சிதைத்து அவர்களைத் தடுப்புக் காவலில் வைத்தவுடன் போராட்டமும் நின்று விட்டது. இங்கே தான் தமிழரசுக் கட்சியினர் காந்தீய வழிப் போராட்டத்தை பூரணமாக அறிந்திருக்கவில்லை' என்பதைக் காட்டுகிறது.

பின்னர் தமிழரசுக் கட்சியினர் போராட்டம் என்பதை சமரசம் செய்வதாகவே எடுத்துக் கொண்டனர். 1965ல் ஐ.தே.கவுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் நிறுவ ஒத்தாசை கொடுத்து ஈற்றில் "திருமலையை புனித நகர் ஆக்க அரசு மறுத்து விட்டது" எனக் கூறிக் கொண்டு ஏமாற்றப்பட்டு வெளியேறினர்.

1970ல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அரசு 1974ல் உலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டவர்களைத் தாக்கியது. சிலர் கொலை செய்யப்பட்டனர். இதற்கும் 'பல முற்போக்கு' புத்திஜீவிகள் ஆதரவாகவே இருந்தனர்.

பின்னர் 1977ல் ஆட்சிக்கு வந்த ஜயவர்த்தன அரசு, "யுத்தமா? சமாதானமா?' எனத் தமிழர்களை நோக்கி சவால் விட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் பெரியளவில்



எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க

இனக்கலவரம் தூண்டி விடப்பட்டது. தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப் பட்டனர்.

இங்கே நாம் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

1983 வரை கடந்த இருபத்தைந்து வருடங்களாக தமிழர்கள் தமது உரிமைக்காக அகிம்சை வழியிலேயே போராடினர். அப்பொழுதெல்லாம் சிங்களப் பெரும்பான்மை அவர்களுக்கு எதிராக வன்முறையையே கட்டவிழ்த்து விட்டது.

அடுத்த முக்கியமான விடயம், இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னிருந்து சிங்கள அரசியல்வாதிகள் "சிங்கள மகாசபாக்"களைக் கட்டி எழுப்பிக் கொண்டிருந்த காலத்திலும் கூட தமிழ்த் தலைவர்கள் ஐக்கிய இலங்கைக்காகவே குரல் கொடுத்தனர். யாழ்ப்பாணத்தில் தோன்றிப் பிரபலம் பெற்ற "இளைஞர்கள் காங்கிரஸ்" இதற்கு உதாரணம். இது தமிழ்த் தலைமைகள் செய்த மிகப் பெரும் பிழை என இன்றைய முற்போக்கு சிங்களப் புத்திஜீவிகள் கூறியுள்ளனர். (பேராசிரியர் சி. தில்லைநாதன் மணிவிழா மலர்.)

இக்காலகட்டத்தில் தமிழ்த் தலைமைகள் செய்த இன்னொரு பெரும் பிழை, சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கெதிராக சிங்களவர்களோடு சேர்ந்து நின்றமை, பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் செய்த இப்பெரும் பிழையே, தமிழர்கள் இன்றுவரை சிங்களவர்களால் நசுக்கப்படுவதற்குரிய காரணமாயிற்றோ! அத்தகைய இப்பிழையை இன்றைய தமிழ் இயக்கங்களும் செய்ததால் இன்று ஐக்கியப்பட வேண்டிய இனங்கள் பிளவுபட்டுப் போயின. இதைச் சாதகமாக்கி அரசியல் லாபம் பெறும் தலைமைகள் உருவாக இது வழிவகுத்து விட்டது.

இறுதியாக நாம் கவனிக்க வேண்டியது, 1956ல் இருந்து 80வரை அகிம்சை ரீதியாகவே தனது போராட்டத்தை முன்வைத்து வந்த தமிழ்மக்கள், 1980ப் பின்னர் வன்முறைப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டதென்றால் அதற்குக் காரணம், அவர்களின் அகிம்சை வழியை, சிங்களப் பேரினவாதம் வன்முறைப் பயங்கரவாதத்தால்' சந்தித்தமையே. ஆகவே இன்றைய தமிழ் "பயங்கரவாத"நிலைக்கு முழுக்க முழுக்க சிங்கள இனமே பொறுப்பாகும்.

–மு.பொ.

நன்றி - நூலகத்திட்டம்



# வரலாறு எதிர்பார்க்கிற செஞ்சோற்றுக்கடன்

புத்தாயிரமாம் ஆண்டு பிறப்பு சர்வதேச ரீதியில் பெருத்த எதிர்ப்பார்ப்பின் மத்தியில் நடந்தேறியுள்ளது. இப் புதுவருடத்தில் ஆயினும், தமக்கு நிரந்தரமான கௌரவமான சமாதானம் கிடைத்து விடாதா என்று உணர்வுமிக்க ஒவ்வொரு ஈழத் தமிழரும் மனதார வேண்டி நிற்கின்றனர். "விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை" என்ற நிலையிலே மீளவும் ஸ்ரீலங்கா ஜனநாயக(?) சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெறும் 1.12 விழுக்காடு மேலதிக வாக்குகளால் மட்டும் ஆட்சிக் கட்டிலேறியிருப்பது, இலங்கைத் தீவினது சமாதான முயற்சிகளை அர்த்தமற்றதாக்கியுள்ளதென நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்றைய அரசியல், இராணுவ வரலாற்றிலே கடந்த ஐந்தாண்டு கால பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியில் ஈழத் தமிழ்த் தேசிய இனம் என்றுமே ஆற்ற முடியாதளவு துன்ப துயரங்களால் அலைக்கழிக்கப்பட்டு மிகவும் நொந்து போயுள்ளது. இவ் ஆட்சியில் இலங்கைத் தீவின் தமிழ் பூர்வீகக் குடிகளின் தாயக ஆள்புலமான வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் உருக்குலைக்கப்பட்டதுடன், "மரணத்துள் வாழும் மக்கள்" ஆக ஈழத்தமிழ் மக்களை உருவகப்படுத்தவும் செய்தது.

பதினேழு வருட ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி சாதிக்க முடியாத இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதாக "மக்கள் ஆணை" பெற்று ஆட்சிபீடமேறியவர்கள் குடும்ப அரசியல் வழித் தோன்றலாதலால் "சமாதான தேவதை"யாகக் காட்சியளித்து, சர்வதேச சமூகத்தை "அரசியல் இராஜதந்திர ஹிப்னாட்டிஸம்" மூலம் 'துாக்க நிலை'க்கு இட்டுச் சென்று, "சமாதானத்திற்கான யுத்தம்" என்று முழக்கமிட்டு இன்று மீளவும் "பயங்கரவாதத்திற்கெதிரான(?) யுத்தம்" என்று "டயலொக்" பாணியிலே முழுமூச்சுடன் செயற்பட முனைந்து நிற்பதையே அவரது கருத்து வெளிப்பாடுகள் கோடி காட்டுகின்றன.

இலங்கைத் தீவின் நீண்டு செல்லும் யுத்த வரலாற்றிலே புத்தாயிரமாம் ஆண்டினையும் எட்டிப் பிடித்துள்ள "ஈழப்போர் - 3" சகல விதத்திலும் முதன்மை பொருந்தியதாக அரசியல்/இராணுவ ஆய்வாளர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது. பொ.ஐ.மு. அரசாங்கத்தின் அரசியல் / இராணுவத் தந்திரோபாயங்களுக்கு பலத்த சவாலாக அமைவது இப்போர்.

இந்த அரசாங்கம் ஆட்சி பீடமேறிய ஓராண்டு இறுதிப் பகுதிகளில் (1995) தமது பலத்தைக் காட்டுவதாகக் கூறி வடபுலத்தைக் கைப்பற்றும் வகையிலே இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருந்தார்கள். "யாழ்தேவி" நடவடிக்கை தொடக்கத்திலேயே வைத்து விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதாலும் "இடிமுழக்கம்" நடவடிக்கை எதிர்பார்த்த வெற்றியைத் தராது போனதாலும் "முன்னோக்கிப் பாய்ச்சல்" நடவடிக்கையானது "புலிப் பாய்ச்சல்" என்ற தீர்க்கமான நடவடிக்கையால் பிசுபிசுத்துப் போனதாலும் வடபுலப் படையெடுப்பு வீண்போய் விடுமோ என்ற அச்சம் அரச/ படை உயர் மட்டத்தில் எழுந்திருந்தது.

இந்நிலையிலேயே யாழ். குடாநாட்டைச் சுட்டெரிக்க சிங்களப் பேரினவாத விசுவரூபம் எடுத்து "ரிவிரஸ" என சூரியக் கதிர் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி நான்காண்டுகள் உருண்டோடி விட்ட நிலையிலேயே வரலாற்றுப் பதிவுகளை மீள நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமுடையதாகிறது.

"ரிவிரஸ" நடவடிக்கை ஆரம்பத்திலிருந்தே உக்கிரமானதாக இருந்தமையாலும், பெரும் மக்கள் அழிவைத் தவிர்க்க வேண்டியிருந்ததாலும், அரசியல் / இராணுவ தந்திரோபாய பின்வாங்கல் உத்தியாலும், 1987 மே மாதம் வடமராட்சியில் நடந்த "ஒப்பரேஷன் லிபரேஷன்" ஏற்படுத்திய உளப் படிப்பினைகளாலும் ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பினின்றும் தப்பும் பொருட்டு வலிகாமம் மக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு இரவினிலேயே இடம்பெயர்க்கப்பட்டனர்.

தேசவிடுதலையின் தேவைப்பாட்டை பட்டறிந்தவர்களாக, சூழ்நிலைகளை நாடி பிடித்தறிந்தவர்களாக 1995 ஒக்டோபர் 30ல் வரலாறு காணாத மானுட இடப்பெயர்வு அரங்கேறிய நிகழ்வு ஈழத்தமிழ் தேசிய வரலாற்றில் மைல்கல்லாகவே கொள்ளப்படும். சர்வதேச சமூகத்தையே வலிகாமம் இடப்பெயர்வு அதிர்வடையச் செய்திருந்தது.

1995ன் இறுதிப் பகுதியில் வலிகாமம் மக்களற்ற ஒரு சூனியப் பிரதேசமாக விளங்கிய நிலையிலே யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதாக அரச தரப்பால் அறிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மிகச் சிறிய மாவட்டமான யாழ் குடாநாட்டை (நிலப்பரப்பு 936 சதுர கி.மீ.) உலகிற்கு பெரிதாக்கிக் காட்டும் வகையிலே யாழ்ப்பாணத்தைக் கைபற்றியதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வகையிலான கொடியேற்றல் வைபவம் 1995 டிசெம்பர் 06ம் திகதி யாழ் செயலகத்தில் நடைபெறுமென அரச ஊடகங்கள் அறிவித்திருந்தன.

குறித்த வைபவம் நடைபெற சில மணித்தியாலங்களுக்கு முன்பாக யாழ். செயலகக் கட்டிடத்தின் ஒரு பகுதி குண்டு வெடிப்பால் தகர்ந்தது. இதையடுத்து யாழ்.முற்றவெளி/ துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் திடீரென்று இவ்வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது. ஸ்ரீலங்காவின் தேசியக் கொடியான வாளேந்திய சிங்கக் கொடியை ஏற்றி "நவீன துட்டகெமுனு"ஆகத் தன்னைத் திடப்படுத்தி சிங்களப் பௌத்த பேரினவாத 'ஹீரோ' ஆனார் பாதுகாப்புத்துறை இணை அமைச்சரான (அப்போது) கேணல் அனுருத்த ரத்வத்தை. எதிரி நாட்டை ஒரு நாடு கைப்பற்றும் போதே தனது தேசியக் கொடியை விழாவெடுத்து ஏற்றுவது அரசியல்/ போரியல் மரபாக இருந்து வந்த வகையிலே, இந்நிகழ்வு தமிழர் தேசம் தனிநாடு என்று மறைமுகமாக சிங்கள அரசு ஏற்பதையே காட்டுவதாக நோக்கர்கள் அப்போதே கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அவ்வைபவத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்மாவில் ஆழமான வடுவை என்றுமே அழியாத வகையில் ஏற்படுத்தியிருக்க இன்றைய அரசாங்கம் தவறியிருக்கவில்லை. போர்த்துக்கேயரிடம் 1619ல் இழக்கப்படும் வரை தன்மானத் தனியரசாக விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தின் தேசியக் கொடியான 'நந்திக்கொடி'யினை ஸ்ரீலங்காவின் 'வாளேந்திய சிங்கக் கொடி'யின் கீழ் பறக்க விட்டிருந்தனர். அக்கைங்கரியத்தை தமிழரின் தேசிய உடையான வேட்டி, சால்வை அணிந்தவரான முன்னாள் மன்னார் உதவி அரசாங்க அதிபராக ஊழியம் செய்த 'இராமலிங்கம்" என்பவரே ஆற்றியும் ஆலோசனை நல்கியும் இருந்தார்.

யாழ்ப்பாணம், "யாப்பாபட்டுண"வாக்கப்பட்டு 'கேணல்' ரத்வத்தை 'ஜெனரல்' ஆக்கப்பட்டிருந்தார். பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப். ஜெனரல் பதவிகளைக் கடந்து ஒரேயடியாக கேணல் ஜெனராலானது உலகப்போரியல் வரலாற்றில் இதுவே முதன் முறையாயிருக்கும்.

எதிர்ப்பின்றி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றிக் களிப்பில் அகலக் கால் பதிக்கும் வகையில் மன்னார் பிரதேசத்தில் "எடிபல" நடவடிக்கையும் மேற்கொண்டனர். கைப்பற்றிய பிரதேசங்களில் ஒன்றான 'பறையனாலங்குளம்' பகுதியில் பொலிஸ் நிலையத்தை திறந்த போது "சப்புமல்புர" எனப் பெயர் சூட்டியதன் மூலம் 'ஜெனரல்' தன்னை சிங்கள தேசத்தின் புதிய "சப்புமல்குமாரய"வாக உருவகப்படுத்தத் தவறியிருக்கவில்லை.

இத்தருணத்தில் இன்னொரு வரலாற்று நினைவூட்டல். கோட்டே இராசதானியின் தளபதியாக இருந்த "சப்புமல்குமாரயா" யாழ் இராச்சியம் மீது படையெடுத்து மக்கள் வாழிடங்களை நாசப்படுத்தியதுடன் அன்றே போரியல் ஒழுக்கத்தை மீறியவனாக யாழ்ப்பாண இராச்சியத்தின் அறிவுக் கருவூலமாக யாழ். நாயன்மார்கட்டில் விளங்கிய "சரஸ்வதி மஹால்" என்ற பெரும் நூலகத்தைத் தீக்கிரையாக்கி தமிழர் கல்விக்கு அன்றே வேட்டு வைத்திருந்தான்.

1996ல் "ஓயாத அலைகள் - 1" மூலம் முல்லைத்தீவைப் புலிகளிடம் பறிகொடுத்த வேளையில் அவசரகாலச் சட்ட பாராளுமன்ற விவாதத்தின்போது ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்கா அவர்கள் "...மகிய்யாவை (ஐ.தே.க) கவுன்சில் உறுப்பினராக இருந்த உம்மை 'கேணல்' ஆக்கியது என் தாயார். பின் உம்மை 'ஜெனரல்' ஆக்கியது என் தமக்கை. இப்போ முல்லைத்தீவைப் பறிகொடுத்ததற்காக பிரபாகரன் உம்மை 'ஃபீல்ட்மார்ஷல்' ஆக்க வேண்டும்" என பாதுகாப்புத்துறை இணை அமைச்சரைப் பார்த்து கிண்டலுடன் கூறியிருந்தமையை தலைநகர சிங்களப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன.

பொ.ஐ.மு.அரசாங்கம் ஐ.தே.கவை அரசியலில் தோற்கடித்த யாழ்ப்பாண கைப்பற்றலை மலினப்படுத்தப்பட்ட அரசியலுக்கு பயன்படுத்தியிருந்தது. இந்நிலையில் 1992ல் யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற முழுத் தயார் நிலைத்திட்டம் பின்னர் பிசுபிசுத்த வரலாற்றை நினைவூட்டுவதும் பொருத்தமானது.

ஸ்ரீலங்காவின் இராணுவ வரலாற்றில் தொழின்முறை (Professional) தளபதியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மதிநுட்ப திட்டமிலுடன் கூடிய, யாழ். நகரைக் கைப்பற்றுவதை ஆரம்பக் கட்டமாகக் கொண்ட "ஃபைனல் கவுண்ட் டவுண்" (Operation Final Countdown) என்ற குறியீட்டுப் பெயரிலான நடவடிக்கை முழுத் தயார் நிலையிலிருந்தது. 09.08.1992 அதிகாலை ஆரம்பமாக இருந்த நடவடிக்கை முதல் நாளான 08.08.1992 நிகழ்ந்த கண்ணி வெடித்தாக்குதலுடன் தவிடுபொடியாகியது.

அராலித்துறையில் நடைபெற்ற இத்தாக்குதலில் "டென்சில் கொப்பேகடுவ" உட்பட ஒன்பது உயர்நிலைத் தளபதிகளும், அதிகாரிகளும் பயணித்த "லாண்ட்றோவருடன்" வெடித்துச் சிதறினர். எவ்விடத்தில் தமது நடவடிக்கையை ஆரம்பிக்க இருந்தனரோ அதேயிடத்திலேயே தளபதிகள் கொல்லப்பட்டதுடன் "ஒப்பரேசன் ஃபைனல்கவுண்டவுண்" பெயர் வெளித்தெரியாமலே அப்படியே அமுங்கிப் போயிற்று. "அராலித்துறைக் கண்ணிவெடித் தாக்குதல்" மூன்று வருடங்களுக்கு யாழ். குடாநாட்டைத் தக்க வைத்திருந்தது என "ரிவிரெஸ" நடவடிக்கை நேரத்தில் இராணுவ ஆய்வாளர்கள் இச்சம்பவத்தை நினைவுபடுத்தியிருந்தனர்.

இத்தகைய கடந்து சென்ற வரலாறுகளை புத்தாயிரமாம் ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கும் ஈழத்தமிழ் மக்கள் நினைவுபடுத்திக் கொள்ள தவறக்கூடாது. பிறந்துள்ள "புதுயுகம் எங்களுக்கானது" என்ற வரலாற்று வார்த்தைப் பிரயோகத்தின் உள்ளார்ந்த அர்த்தத்தை உள்வாங்கிக் கொண்டு, ஒன்றுபட்ட மக்கள் சக்தியாக சொல், செயல், மூச்சு மூன்றும் ஒருமித்தவர்களாக விரைந்து செயலாற்றுவதே ஈழத்தமிழர்களிடம் வரலாறு எதிர்பார்க்கும் "செஞ்சோற்றுக்கடன்" ஆகிறதல்லவா?

– துரை


ஓயாத அலைகள் 3 புலிகள்


ஓயாத அலைகள் 3 புலிகள்


ஓயாத அலைகள் 3 புலிகள்


ஓயாத அலைகள் 3 புலிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# நாங்கள் ஆண்களுக்காக படைக்கப்பட்ட மாணிக்கங்கள்

ஷரீஆ சட்டத்தை அமுல்படுத்தக் கூடிய உயர் நீதிமன்றமொன்றை ஏற்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளினால் பாகிஸ்தானியப் பெண்கள் அதிக பீதிக்குள்ளாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் ஒவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றாள். இவர்களில் 65 வீதமானோர் இளம் வயதினர் என்பதுடன், நான்கில் ஒருவர் குழுவினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றனர். பெண்களின் உரிமைகளுக்காக செயற்படும் சட்டத்தரணியான ஹினா ஜீலானியின் கருத்தின்படி, பயங்கரம் இதுவல்ல. ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளான பின், இதனை நிரூபிக்க சாட்சியில்லை. உண்மையில், இந்த பாலியல் செயற்பாட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பெண்ணால் முன்வைக்கப்படும் முறைப்பாடு ஒரு பெண்ணால் முன்வைக்கப்பட்ட சாட்சி என்ற அடிப்படையின் கீழ் அவரையே குற்றவாளியாக்கி விடுவதாகும்.

பெண்களின் நிலைமை மற்றும் உரிமைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பாகிஸ்தான் அமைப்பான "ஷிக்காட் காஹ்" அமைப்பின் உறுப்பினரும், சமூக விஞ்ஞானியுமான ஷரீடா சஹிட்டினால் ஷாபியா பாபியின் கதை இவ்வாறு கூறப்படுகின்றது. ஷாபியா பாபி 17 வயதான செல்வந்தர் குடும்பத்திற்கு சேவகம் செய்யும் பெண். வீட்டுத் தலைவனினாலும் அவரது புதல்வனினானலும் இப்பெண் அடிக்கடி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதன் விளைவாக அப்பெண் கர்ப்பமடைந்தாள். அவளது தந்தை இவ்விடயம் தொடர்பாக வழக்கொன்றை தாக்கல் செய்த போதும் சாட்சி தேவைப்படுவதால் நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விடுவித்து ஷாபியா பாபியை ஷரீஆ சட்டத்தின் கீழ் குற்றவாளிக்கியது. அவருக்கு 15 கசை அடிகளுடன் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. நாம் சர்வதேச மற்றும் தேசிய தொடர்பூடகங்களில் இந்த தீர்ப்புக்கு எதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.


அன்று ஆட்சியிலிருந்த ஆட்சியாளர்களினால் சட்டமாக்கப்பட்ட ஷரீஆ மசோதா, சட்டத்தில் உள்ள சிக்கல்களின் மொத்த வடிவமாகும். குர்-ஆனின் விளக்கவுரையில் கூறப்படாத, பாலியல் வல்லுறவு உள்ளிட்ட திருமணத்திற்குப் புறம்பான பாலியல் துன்புறுத்தல்களுக்காக கடத்திச் செல்லுதலும் கூட இதற்குள் அடங்கும். ஷரீஆ சட்டத்தினால் நிர்வகிக்கப்படும் அனைத்து வழக்குகளுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றமாக சமஷ்டி ஷரீஆ நீதிமன்றம் செயற்படுகின்றது. பாகிஸ்தானின் சிவில் (சமய சார்பற்ற) சட்டம் இஸ்லாமிய சட்டத்திற்கு அனுகூலமானதா இல்லையா என்பதை தீர்மானிப்பதுடன் வழக்குத் தாக்கலும் இச் சட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டின் இந்தச் சட்ட முறைமை உத்தேச இஸ்லாமிய மயமாதலின் கீழ் பாகிஸ்தானிய உயர் மண்டலமான செனட் சபையின் விவாதத்திற்குள்ளாகி வருகின்றது. இஸ்லாமிய சட்ட சாசனத்துடன் சார்பாகும் வகையில் நாட்டின் சட்ட அமைப்பை மாற்றவும், நீதிமன்ற திட்டங்களை பரவலாக்கவும் நேர்ந்தது. தெளிவாகக் கூறுவதாயின் பெண்களின் மீது அனைத்துவித வேறுபாடுகளை மேற்கொள்ளும் எண்ணத்துடன் முழுமையான இஸ்லாமிய சட்டத்தை முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஷரீஆ நீதிமன்றத்தின் நீதிவானான ஷிடா மொகமட் கான் அவர்களுக்கு இது பற்றி குழப்பம் ஏதுமில்லை எனலாம். "பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் கௌரவம் ஷரீஆ சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றது. எமக்காக படைக்கப்பட்ட மாணிக்கம் தான் பெண்கள். குறிப்பாக தாய்மார்களாக நாம் அவர்களுக்கு செலுத்தும் மரியாதையை, வேறு எந்த விடயத்திற்கும் ஒப்பிட்டு விட முடியாது. விபச்சாரம் அவர்களது கௌரவத்தை குலைப்பதாக இஸ்லாம் கருதுவதுவதுடன், சமூகத்தில் ஒழுக்கத்தை தார்மீகத்தை பேண குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்குதல் நீதியானதும், உறுதியானதும் எனக் கருதப்படுகின்றது."

ஷரீஆ நீதிமன்றத்தின் தலைமை நீதிவானான மொகமுட் அகமட், ஷரீஆ சட்டம் பற்றிக் கூறும் பொழுது சிரித்துக் கொண்டு இவ்வாறு கூறுகின்றார். "மக்கள் இந்தச் சட்டம் பற்றி ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகின்றனர் எனப் புரியவில்லை. எமது சமூகத்தில் பெண்கள் பெறும் மதிப்பையும் மரியாதையையும் போன்று மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பெறுவதில்லை என நான் மிகவும் பொறுப்புடன் கூற விரும்புகின்றேன். உறுதியான தண்டனையைப் பெறாத வகையில், பெண்களை துன்புறுத்தலுக்குள்ளாக்கக் கூடிய வகையிலான சட்டத்தின் நெகிழ்ச்சித் தன்மை மேற்கத்தேய ஆணாதிக்க சட்டங்களில் காணக் கிடைக்கின்றது. எனினும், எமது பெண்களுக்கு பிரதிகூலமான இவ்வாறான சட்டங்களுக்கு இடமளிக்க முடியாது. இந்தவகையில் அவர்களுக்கு பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் ஷரீஆ சட்டம் வழங்கும் எனலாம். பாலியல் வல்லுறவுக்கு ஷரீஆ சட்டத்தில் மிகவும் பயங்கரமான தண்டனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கல்லெறிந்து கொல்லல் மற்றும் திருமணமாகாத நபரெனின் 100 கசையடிகள் என இது வகைப்படும். எவ்வாறாயினும் இந்தச் சட்டம் குற்றத்தை ஒப்புக் கொள்வதினால் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் நான்கு முஸ்லிம்கள் சாட்சியளித்தால் மட்டுமே செயற்படுத்தப்படும். பாகிஸ்தானில் இந்தத் தண்டனை முறை இதுவரை செயற்படுத்தப்படவில்லை என்பதுடன், உண்மையில் இவை நூலுருவில் மட்டுமே அடக்கப்பட்டுள்ளன.

"முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாததால் அவை பிரதியீடு செய்யப்படவில்லை. இது மிகவும் மோசமான விளையாட்டாகும்."- என்கிறார் ஜீலானி. தண்டனையை முழுமையாக செயற்படுத்த குற்றத்தை நிரூபிக்கும் கடினமான நிலை இதற்கு காரணமென்று கான் குறிப்பிடுகிறார்,. தண்டனையும் உள்ளது. தண்டனையை தவிர்க்கும் மார்க்கமும் உள்ளது. "நாள் முழுதும் மிக மோசமாக அதிகரித்துச் செல்லும் பாலியல் வல்லுறவு அடிப்படையில் ஒருவருக்கு சட்டத்தின் இறைமைத் தன்மை தொடர்பாக ஐயமுறும் வழியை ஏற்படுத்துகின்றது".



ஒருவர் வேறு நிரூபணங்களினால் குற்றவாளியானால் "டாஷீர்" எனும் குறைந்த தண்டனைக்குள்ளாவார். துன்புறுத்தலுக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுவதுடன் பாலியல் வல்லுறவுக்கு 4-25 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். 1996 வரையில் "டாஷீர்" தண்டனைக்குள் கசையடியும் உள்ளடக்கப்பட்டது.

பல வழிகளில் ஷரீஆ சட்டம் பெண்களுக்கெதிராக வேறுபாடு காட்டுவதாக ஜீலானி சலால் விடுகின்றார். முதலாவது, பிரதான தண்டனையின்படி குற்றமானது நான்கு ஆண்களின் சாட்சிகளினால் மட்டுமே நிரூபிக்கப்படல் வேண்டும். பெண்கள் கூறும்கண்ணால் கண்ட சாட்சிகள் பொய் கூற்றாக கருதப்படுகின்றது. பாலியல் வல்லுறவு புரிந்தவர்களை கண்ணால் கண்ட ஒரே சாட்சியாக பாதிக்கப்பட்ட இப்பெண் தான் உள்ளார்.

திருமணமாகாத பெண்ணொருவர் தான் பாலியல் வல்லுறவுக்குள்ளானதாக குற்றம் சுமத்தினால் அவர், தன் கன்னித்தன்மையை இழந்து விட்டமையை நிரூபிக்கும் வைத்திய அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டாவதாக, அவர், தம்மை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினார் என்பதை நிரூபிக்கத் தவறினால் இவ்விடயத்தை அவருக்கு எதிராக திசைதிருப்பி விட முடியும். காரணம், திருமணத்திற்கு புறம்பான அனைத்து பாலியல் தொடர்புகளுக்கும் எதிராக தண்டனை வழங்கப்படுவது நடைமுறையில் உள்ளது. ஜீலானி மேலும் விபரிக்கின்றார். " ஆணின் வைத்திய அறிக்கை எதையும் உறுதிப்படுத்தாது". சட்டம் இன்னும் பல வேற்றுமைகளை மேற்கொள்கின்றது. பெண்கள் வயதுவந்தவுடன் ஷரீஆ சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். அதாவது, 16 வயதில் அல்லது பருவம் வந்தவுடன். விரைவில் சிறு வயதில் பருவம் வந்தவுடனும் இவ்வாறு நடைபெறும். ஆண்கள் 18 வயதில் ஷரீஆ சட்டத்திற்குள் உள்ளடக்கப்படுகின்றனர். 12 வயது சிறுவருக்கும் வயது வந்தோருக்குப் போன்று தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. ஜீலானி இவ்வாறு கூறுகின்றார். "நான் இவ்வாறு கேட்கிறேன். இது சரியானதென அவர்கள் நினைக்கின்றார்களாயின் உடல் வளர்ச்சி மற்றும் உளவியல் வளர்ச்சிக்கிடையிலான வேறுபாட்டை ஷரீஆ ஏற்படுத்தவில்லை எனலாம்". மனநலம் குறைவான பெண்ணுக்கு தண்டனை விதிக்க முடியாதென்ற சட்டம் உள்ளது என அவர் கூறுகின்றார். "மிகவும் வயது குறைந்த ஒருவர் எம் முன் வரும் போது குற்றவாளியின் உளநலத்தை கவனத்தில் கொள்ள இந்தச் சட்டம் வாய்ப்பளிக்கின்றதா இல்லையா என்பதை ஆராயும் வாய்ப்பு இருக்க வேண்டும்." என இதன் பிரதிகூலத்தைக் காட்டி கூறுகின்றார். ஷரீஆ சட்டத்தைப் போல் அன்றி தற்போது செயற்பட்டு வரும் பழமையான குடும்ப சட்டம், 16 வயதான சிறுமிகளைப் பெண்களாகக் கருதுகின்றது. குறைந்த வயதினருடனான எந்தவொரு முறையிலான பாலியல் தொடர்பும்- கணவனுடனான போதிலும்- பாலியல் வல்லுறவாகக் கருதப்படுகின்றது. தற்போது ஷரீஆ சட்டம் பொறுப்பின் வயதெல்லையைக் குறைத்துள்ளது. "திருமணத்திற்குள் இடம்பெறும் பாலியல் வல்லுறவுகளை மீண்டும் சட்டத்திற்குள் கொண்டு வருவதே எமது தேவை" என பெண்கள் செயற்பாட்டு கட்டமைப்பின் ஆரம்பகால உறுப்பினரான ஷாமினா அகமட் கூறுகின்றார். "தற்பொழுது நிலவும் சட்டத்தின்படி இது குற்றம் அல்ல. எவரும் இது பற்றி கவனம் கொள்வதுமில்லை. நாட்டிற்கு இது ஒரு பாரிய பிரச்சினையுமில்லை."

பாகிஸ்தானின் மனித உரிமைகளுக்கான ஆணக்குழு, பாலியல் வல்லுறவு சம்பவங்களில் மூன்றில் ஒன்று மட்டுமே பலருக்கு தெரிய வருகின்றது. இவை கூட பொலிசின் கவனத்துக்குள்ளாகாததுடன், மகிழ்ச்சியடையக் கூடிய வகையிலான சிறந்த பெறுபேறு இவ்விடயத்தில் ஆச்சரியமாகவே கிட்டுகின்றது. அண்மையில் நான் 15 வயது சிறுமியை பாலியல் வல்லுறவு புரிந்த நபர் பற்றிய வழக்கு விசாரணையை ஆய்வு செய்து பார்த்தேன். நீதிமன்றத்தினால் அவருக்கு ஆறு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஷரீஆ மன்றம் சிறைத் தண்டனையை இரண்டரை வருடங்களாகக் குறைத்து விட்டது.

ஜீலானின் அலுவலகத்தில் ஒரு பெண் அமர்ந்திருக்கிறார். அவர் குனிந்த தலையுடன் சோகமயமாகக் காட்சியளிக்கின்றார். இறுதியில் அவர் அவரது கதையைக் கூற ஆரம்பிக்கின்றார். "ஒரு பெண்ணின் ஆதரவுடன் அயல்வீடுகளைச் சேர்ந்த இரு ஆண்கள் என்னைக் கடத்திச் சென்று, தாக்கி, மாறி மாறி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். அவர்கள் என்னைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய வண்ணமும் மற்றும் தாக்கிய வண்ணமும் புகைப்படமும் எடுத்தனர். என்னை விடுவிக்கும் முன்னர், இது பற்றி எவருக்காவது கூறினால், கொலை செய்து விடுவதாகவும் என் புதல்விகளை கடத்திச் சென்று விடுவதாகவும் எடுத்த புகைப்படங்களை பத்திரிகைகளுக்குக் கொடுத்து விடுவதாகவும் என்னை மிரட்டினர். எனது மைத்துனி, சம்பவத்தைப் பற்றி கணவனுக்கு கூற வேண்டாம் என அறிவுரை கூறினார். தனது மனைவிக்கு இவ்வாறானதொரு சம்பவம் இடம் பெற்றதாக பலமாக நம்பும் நபர்கள் பாகிஸ்தானில் உள்ளனர் என்பதுடன் தன்னைக் குற்றவாளியாக்கி குடும்பத்தை விட்டு விலக்கி விடுவர் என அவர் பயந்தார். என்னை தாக்கியவர்கள் என்னிடம் பணம் கேட்டதுடன் அவர்களுக்கு பணம் கொடுக்காவிட்டால் புகைப்படங்களை கணவனுக்கு காட்டப் போவதாகப் பயமுறுத்தினர். ஆனால் என்னிடம் சிறு தொகைப் பணமே இருந்தது. எவ்வாறாயினும், எப்படியோ எனது கணவர் இவையெல்லாவற்றையும் அறிந்து கொண்டதுடன் குழந்தைகளுடன் என்னை வீட்டை விட்டு விரட்டி விட்டார். நான் எனது தந்தையுடன் தங்கச் சென்றதுடன் அந்த இரு நபர்களுக்கு எதிராக பாலியல் வல்லுறவு வழக்கொன்றைத் தாக்கல் செய்தேன். குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருந்த-போதும் பொலிஸார் வழக்கினை 08 மாதம் இழுத்தடித்தனர். நாம் பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது எனது தந்தையுடன் எனக்கு கள்ளத் தொடர்பு உள்ளதென எங்கள் மீது பொலிசார் குற்றம் சுமத்தினர். அவர்களில் ஒருவன் "நீ அவர்களுடன் விருப்பத்தின் பேரில் தானே இருந்தாய்?" என்றான். என்னை ஒரு பைத்தியக்காரியைப் போல் நடாத்தினர். குற்றச்சாட்டினை பதிவு செய்ய எமக்கு ரூ. 10,000 (அ.டொ.200) செலுத்த வேண்டியேற்பட்டது. குற்றம் செய்தவர்கள் நிலையத்திற்கு வந்தபோது அவர்களுக்கு அமர ஆசனங்கள் வழங்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் நீண்ட நேர ஆலோசனையின் பின் அவர் விடுவிக்கப்பட்டார். மற்ற நபர் ஒரு போதும் அதன்பின் கைது செய்யப்படவில்லை. பொலிஸ் நிலையத்தில் இருந்த வேளை அவர்கள் ஒப்புக்கு குற்றத்தை -எழுத்தில் அல்ல- ஒப்புக்கொண்டனர். பின்னர் அவர்களால் ரூ.50,000 (அ.டொ.1000) லஞ்சம் பொலிசாருக்கு வழங்கப்பட்டது. எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது பொலிசாரிடம் உள்ளன. எனினும், லஞ்சம் கொடுத்து புகைப்படங்களை எடுத்து விடுவார்களோ என பயமாக உள்ளது. இருக்கும் ஒரே சாட்சி இது மட்டுமே. இந்தச் சம்பவங்களெல்லாம் நடைபெற்ற சில நாட்களுக்குப்பின் காரொன்று என்னை மோதி விட்டுச் சென்றது. குற்றச்சாட்டுக்களை மீளப் பெறாவிட்டால் என்னை கொன்று விடுவதாக காரில் வந்தவர்கள் கூறினர். இன்னும் வழக்கு நீடித்துக் கொண்டே செல்கின்றது. "அவர்கள் என்னைக் கொல்வதாக இருந்தால் நானே தற்கொலை செய்து விடுவேன். ஆனால் நான் வாழ வேண்டும். என் பிள்ளைகளுக்காக நான் வாழ வேண்டும்."

இந்த சட்ட ஆலோசனை நிலையத்தில் அஸ்ராவையும் சந்திக்க நேர்ந்தது. பல வருடங்களுக்கு முன் பொய்யான குற்றச்சாட்டின் காரணமாக அவர் குற்றவாளியானார். ஒரு மாத சிறைவாசத்திற்குப் பின் விடுதலையானார். அவர் தன்னை ஏன் கைது செய்தனர் என பின்வருமாறு கூறினார். "அதிகாரிகள் என்னை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று அறையொன்றில் பூட்டி வைத்தனர். அன்றைய நாட்கள் தேர்தல் நாட்களாக இருந்தபடியால் என்னைப் பற்றி மறந்து விட்டனர். ஒரு முழு நாளும் நான் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதும் ஆகாரம் எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை. வீட்டில் 3 வயது மகளையும், 15 நாள் குழந்தையையும் விட்டு வந்தது கவலையைத் தந்தது. ஆனாலும், மிகவும் பலவீனமான நிலையில் என குழந்தைகளும் இறந்து போய்விட்டதாக அறியக் கிடைத்தது."

பாகிஸ்தான் கலாசாரம் பெண்களை குடும்ப கௌரவத்தை பாதுகாப்பவர்கள் என்றே கருதுகின்றது. "ஆணின் மரியாதையைக் குலைக்க வேண்டுமாயின் நீங்கள் அந்த நபரின் மனைவியின் மூலம் அதனைச் செய்ய வேண்டும்." ஜீலானி இவ்வாறு கூறுகின்றார். "எமது நாட்டில் பாலியல் வல்லுறவு ஒரு குற்றமல்ல . எனினும், பாலியல் குற்றம் என்ற சொல் போதுமானதல்ல". பாலியல் வல்லுறவு ஒரு குற்றம் என்பதுடன் கௌரவத்துடன் அதற்கு எந்தவித கொடுக்கல் வாங்கலையும் மேற்கொள்ள முடியாது. ஒரு பெண் பாலியல் வல்லுறவு புரியப்பட்டாளாயின் அவளது உணர்வுகள், அவளுக்கேற்பட்ட காயங்கள் தொடர்பாக பொதுவாக எவராலும் சிந்திக்கப்படுவதேயில்லை.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் பெண்கள் அதிகம் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றனர். 1992ல் மனித உரிமைகள் பற்றிய ஆய்வொன்று, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களில் 75 வீதமானோர் மோசமான சித்திரவதைக் குட்படுவதாக குறிப்பிடுகின்றது. இவர்களில் 62 வீதமானோர் பாலியல் சித்திரவதைக்குள்ளானோர். இன்று பாகிஸ்தானில் உள்ள பெண்களில் 47 வீதமானோர் ஷரீஆ சட்டத்தில் தண்டனை பெறவுள்ளனர். பெண்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வர பொதுவான குற்றமே பயன்படுகின்றது. பலர் வறியவர்கள். பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். 1979 தொடக்கம் ஷரீஆ சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வேளை ஆயிரக்கணக்கான பெண்கள் குற்றவாளியாக்கப்பட்டனர். நிரூபிக்கப்படும் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளின் காரணமாக பலர் சந்தர்ப்ப சூழ்நிலையினால் விடுதலை செய்யப்பட்டனர். எனினும், மற்றவர்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டாலும் எந்தவிதத்திலும் அவர்களால் சாதாரண வாழ்க்கையை மேற்கொள்ள முடியாதென அவர்கள் நன்கறிவர்.

"இந்தப் பெண்கள் பற்றிய சமூகத்தின் எண்ணங்கள் மிகவும் கீழ்த்தரமானவை" ஜீலானி கூறுகின்றார். "மிக இலகுவாக, ஒழுக்கத்தை குலைத்த பெண்களாக இவர்கள் சமூகத்தினால் விரட்டியடிக்கப்படுகின்றனர். அவர்களது குடும்பங்களிலிருந்து லிலக்கி வைக்கப்படுகின்றனர். குழந்தைகளுடன் தொடர்பை பேணுதலிலிருந்து தவிர்க்கப்படுகின்றனர். இவர்களால் தொழில் ஒன்றைப் பெற முடியாத நிலையில் பாலியல் தொழிலாளர்களாக மாறி விடுகின்றனர். மற்றவர்கள்

நன்றி - நூலகத்திட்டம்



இந்நாட்டில் உள்ள பெண்களுக்கான அனாதை நிலையங்களின் பாதுகாப்பை நாடுகின்றனர்.

சிறைச்சாலை தண்டனையிலிருந்து வெளியேறிய பின் அவர் சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள் பற்றி அஸ்ரா விளக்கினார். "சிறைச்சாலையிலிருந்து வெளியேறிய போது நான் என் குழந்தைகளை இழந்து விட்டிருந்தேன். எனினும், எனக்கு எனது மூத்த புதல்வியை சந்திக்க நேர்ந்தது. உடைகள் கிழிந்து, மந்த போசணையால் அவள் பாதிக்கப்பட்டிருந்தாள். சமூகத்திற்கு எப்படி நான் முகம்கொடுப்பதென முடங்கிக் கிடந்தேன். எனது அயலவர்களும் நண்பர்களும் என்னை விட்டு ஒதுங்க ஆரம்பித்தனர்".

ஷரீஆ சட்டத்தின்படி எவரது எண்ணத்திலும் இறை சிந்தனை இல்லை. 1981ல் உலமா மதத் தலைர்கள் பலர் குர்-ஆனினால் கூறப்படாத விடயம் என்ற அடிப்படையில் கல்லெறிந்து கொலை செய்தலை நீக்கி விடுமாறு குறிப்பிட்டிருந்தனர். "உண்மையில் இவ்விடயம் குர்-ஆனினால் குறிப்பிடப்படாத போதும் செயற்படுத்தும் ஆணையை நபிகள் நாயகம் விடுத்திருந்தார் என்று கூறப்பட்டு இறுதியில் நிராகரிக்கப்பட்டது. சயிட் அப்சால் ஹைதர் கான் இதனை வேறாகக் காண்கிறார். "இந்த சட்டம் இஸ்லாமிய மதத்தின் குர்- ஆன் கூறுவதன்படி அசல் பிரதிகளுக்கு அனுகூலமானதல்ல. அதில் பல தேவையற்ற விடயங்கள் உள்ளதுடன் அவற்றை மண்டலம் சற்று ஆழமாக நோக்க வேண்டும்." குர்-ஆனுக்கும் குர்-ஆனுக்கு வழங்கப்படுகின்ற விளக்கத்திற்குமிடையில் பெரும் வேறுபாடு உள்ளதென்பதை மறுக்கக் கூடாது.

அசல் பிரதிகள் மாற்றமுறாதிருப்பதனுடன் விளக்கவுரை தயாரிக்கும் போதும், அது தயாரிக்கப்படும் போது நிலவும் சமூக நிலைமையின் அடிப்படையிலுமே அவை தங்கியுள்ளன. பாகிஸ்தான் யாப்பு, எமது சட்டங்கள் குர்- ஆனின் சார்பு கொண்டதாகவும், சுன்னா சம்பிரதாயத்தைத் சார்ந்ததாகவும் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றது. எனினும், எமக்கென சட்ட அமைப்பை உருவாக்க வேண்டுமென நான் கருதுகிறேன். இங்கு ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் அதாவது தற்காலத்தில் நிலவும் கருத்துக்களும், எண்ணங்களும் இவற்றில் சேர்க்கப்பட வேண்டும். இன்று மனித உரிமைகள் பற்றி அறைகூவல் விடப்படுகின்றது. சமாதானம் தேடப்படுகின்றது. அனைத்து பிரஜைகளுக்குமான அபிவிருத்தி, சகோதரத்துவம் பற்றிப் பேசப்படுகின்றது. நாம் "தெய்வவாக்கினை " எமது காலத்தின் தேவையின்படி விளக்கப்படுத்த வேண்டியுள்ளதுடன், ஐ.நா சாசனம், மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் என்பன மூலம் தயரிக்கப்பட்ட சர்வதேச தரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயங்கள் மீது அவை பொருத்தப்படல் வேண்டும். முன்னைய விளக்கங்கள் எமக்கு வழிகாட்டும். எனினும், இவை எவற்றினதும் முடிந்த முடிபாக இருக்கப்போவதில்லை. மனிதாபிமானத்தின் முழு வளர்ச்சி கருதி ஒரு நியாயத்தையோ, கருத்தியலையோ மட்டும் கொண்டிருக்க முடியாது.

எனினும், கான் மறுபுறம் சமகால தேவைகளுக்கு ஷரீஆ சட்டம் உறுதியாக தேவையெனக் கருதுகின்றார். அல்லாவினால் நியமிக்கப்பட்ட சட்டங்கள் மனித இயல்புடன் தொடர்புடையவை என்பதால் எக்காலத்திலும் அவை பயன்படுத்தப்படக் கூடியவை. ஷரீஆ சட்டத்திற்கு எதிரான இயக்கங்களில், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மதத் தலைவர்களின் கருத்திற்கு பெண்கள் செயற்பாட்டு முன்னணியும் ஆதரவு தெரிவிக்கின்றது. "இந்த சட்டங்கள் குர்-ஆனின் ஆத்மாவுடன் எதுவும் செய்யப்போவதில்லை" ஷாமினா ரஹ்மான் கூறுகின்றார். மேலும் அவர் குறிப்பாக நிலவும் சமூகக் குற்றங்களுக்கு ஏற்ப தண்டனையை வழங்கும் செயற்பாடு குர்-ஆனிலுமோ மற்றும் சுன்னா சம்பிரதாயத்திலுமோ இல்லை என்கிறார் தீர்க்கமாக!

காந்தா ஹண்ட, ஏப்ரல்99 இதழ்

தமிழில்ரத்னா

# ஆதிக்கக் கலாசாரத்துள் சங்கமமாகும் கொழும்புத் தமிழ்ப் பாடசாலைகள்!

– கபிலன்

கொழும்புத் தமிழ்ப் பாடசாலைகள் வழக்கம் போலத் தமது ஆண்டுக் கலை விழாக்கள், வாணி விழாக்கள் போன்றவற்றைக் கொண்டாடி ஓய்ந்து போயுள்ளன. சில முன்னணிப் பாடசாலைகள், கொழும்பு முன்னணி அரங்குகளிலும், இன்னும் சில தமது பாடசாலை மண்டபங்களிலும் இவ்விழாக்களை நிகழ்த்தி முடித்துள்ளன. உண்மையிலேயே இவ்வகையான கலை விழாக்களின் நோக்கம், இலக்குகள் என்பவை எவை? அவை உரிய முறையில் திருப்தி செய்யப்படுகின்றனவா என்பன போன்ற கேள்விகள், நடந்து முடிந்த சில நிகழ்வுகளை அவதானிக்கும் போது எழுவதைத் தவிர்க்க முடியாமல் உள்ளது.



இலங்கை போன்ற தெற்காசியப் பிராந்தியங்களில், மாணவர்கள் வெறுமனே வகுப்பறைகளுக்குள்ளேயே முடக்கப்பட்டுள்ள நிலைமையே காணப்படுகிறது. அவர்களின் புறச்செயற்பாடுகள், வெளிக்கள நடவடிக்கைகள் அனைத்தும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், மாணவர்களின் கருத்து வெளிப்பாட்டிற்கும், பல்துறை ஆளுமைகளை வெளிக் கொணர்வதற்குமான ஒரு களமாகவே இவ்வகையான நிகழ்வுகள் அமைய வேண்டும் எனக் கூறப்படுகிறது.

எமது கல்விச் செயற்பாடுகள், கல்வியறிவு என்பவற்றைத் தீர்மானிக்கும், வழி நடாத்தும் சக்திகளினதும், எஜமானர்களினதும் நோக்கம் தெளிவாக அறியப்பட்டதொன்று. பலவகை உலக நிறுவனங்கள், அமைப்புக்கள் என்பவனவற்றின் நோக்கத்திற்கேற்ப எமது கல்வி, அரசியல், சித்தாந்தங்களினால் பிணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பொன்றில் மாணவர்கள் தத்தமது கலாசார அடையாளங்கள், பண்பாட்டுக் கோலங்களைத் தொலைத்துச் சங்கமாகியுள்ளனர். ஆதிக்கக் கலாசார அமைப்பு முறைக்கேற்ற வகையில் அவர்கள் தயார் செய்யப்படுவதும், அத்தகைய நிறுவனங்களின் எஜமானர்களினதும் நோக்கங்களில் ஒன்று என்பதுடன் நடைமுறையில் எங்கள் பாடசாலைகளும் அவ்வகை தொழிற்சாலைகளாகவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறானதொரு சூழலில் மேற்படி நிகழ்வுகளின் தேவையைக் குறைத்து மதிப்பிட முடியாது. மாணவர்களின் தனித்துவமான அடையாளங்களை உணர்த்தும் வகையிலும் அவர்களுடைய பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிக்கும் வகையிலும் இவை அமைய வேண்டும். அத்துடன் அவர்களுடைய தொடர்பாடல், கருத்தாடல், திறன்களை வெளிக்கொணர்வதுடன்; மாணவர்களின் சுயமான கருத்துக்களைச் சமூகத்துக்கு வெளிப்படுத்தும் களமாகவும் இவை அமையவேண்டியது அவசியமாகும்.

ஆனால், தமிழ்ச் சூழலில் இன்னும் சற்றுச் சிக்கலான ஆனால், அவசியமானதோர் இலக்கையும் நோக்க வேண்டியுள்ளது. தமிழ் மாணவர்களின் பிரச்சினைகளும், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் சொல்லிலடங்காதவை. ஒருபுறம் வழக்கமான மேற்கூறப்பட்ட பொதுவான நெருக்கடிகளும், மறுபுறம் அவர்கள் தனித்துவமான சிக்கல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. பாதுகாப்புக் கெடுபிடிகள் போன்றவற்றால் ஒரு புறம் மாணவர்களின் இருப்பே கேள்விக்கிடமாக்கப்பட, மறுபுறம் பாடவிதானம், பாடப் புத்தகங்களினூடாக நன்கு திட்டமிடப்பட்ட முறையில் வரலாற்றுத் திரிபுகள், சிங்களத் தேசம் பற்றிய மாயைகள் புகுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தமிழ்ப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிகழ்வுகள் எமது தனித்துவமான அடையாளங்களை உணர்த்துவதுடன், அவர்கள் எதிர்கொள்ளும் சூழலியல் நெருக்கடிகளைப் பிரதிபலிப்பதுடன், அவற்றின் மீதான மாணவர்களின் விமர்சனமாகவும் அமைய வேண்டியுள்ளது. அவ்வாறான நிலையிலேயே மாணவர்களிடமிருந்து மகத்தான படைப்புகளை எதிர்பார்க்க முடியும்.

ஆனால், நடைமுறையில் எமது கலை விழாக்கள், வெறும் களியாட்ட விழாக்களாகவே நடந்துகொண்டிருப்பது கண்கூடு. தொழில் நுட்பத்தின் பிந்திய விடயங்களை உள்வாங்கி வெறுமனே கட்புல,-செவிப்புல மூன்றாந்தர நுகர்வின்பத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான நிகழ்வுகள் அமைக்கப்படுகின்றன. குறிப்பாகக் கொழும்புத் தமிழ்ப் பாடசாலைகள், இவ்வாறான போக்கிற்கு முற்றாகப் பலியாகிப் போயுள்ளன. பொதுவாகவே இவ்வாறான நிகழ்வுகளில் எமது தயாரிப்பாளர்கள் கையாளும் உத்தி நன்கு பழக்கமானது. ஏலவே வடிவமைக்கப்பட்ட கண்ணன் நடனம், மகா பாரத, இராமாயணக் காட்சிகள் போன்றவற்றைக் கொண்டு இட்டு நிரப்புதலே அது. மாணவர்களின் படைப்பாற்றலுக்கும் கற்பனைக்கும், அழகியல் உணர்வுகளுக்கும் எவ்வித வேலையுமின்றி அவர்கள் வெறும் இயந்திரத்தனமான செய்து காட்டலுக்குள் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நிலைமையின் உச்சக் கட்டமாகவே, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இரு பாடசாலைகளின் கலை விழாக்கள் அமைந்திருந்தன. ஒன்று கொழும்பு இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா, மற்றையது வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தின் சிறுவர் கலை விழா. இவை இரண்டும் இன்னும் சில புதுமைகளையும் புகுத்தியுள்ளன.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா, புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது. முன்னணி வர்த்தக ஒலிபரப்பொன்றிலிருந்து இரண்டு அறிவிப்பாளர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கினர். இந்நிகழ்வு வழமையான இட்டு நிரப்பல்களுடன், மேலும் ஒரு புதிய உத்தியையும் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆதிக்கக் கலாசாரத்தின் மற்றொரு . பலமான, காவியாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்ச் சினிமா, தமிழ்ச் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் ஊடுருவியுள்ள நிலையில் இவ்விழாவின் ஏற்பாட்டாளர்களும் அதைச் சுலபமாக உள்வாங்கியுள்ளனர். நிகழ்ச்சியின் இடையிடையே 'இந்துவின் இசைச் சாரல்கள்' என்ற பெயரில் தமிழ்ச் சினிமாப் பாடல்களை மாணவர்கள் இசைத்துக் கொண்டிருந்தனர். இன்னொரு கட்டத்தில் அவ்வாறான பாடலொன்று பின்னணியில் இசைக்கப்பட்டுக் கொண்டிருக்க,




அப்பாடலுக்கு மாணவர்கள், தமிழ்ச் சினிமாப் பாணியில் நடனமாடினர். இலத்திரனியல், பிரசுர ஊடகங்களின் மூலம் வெளியில் மாணவர்கள் தமிழ்ச் சினிமாவினால் இறுக்கப்பட்டு, அவர்களிடம் மோசமான கருத்தியல்கள் ஊட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பாடசாலைகளுக்குள்ளேயும், இந்த நிலை தோன்றுவது வெகு தொலைவில் இல்லையென்பதே இது தெரிவிக்கும் செய்தியாகும்.

மற்றையது, வெள்ளவத்தை சைவ மங்கையர்க் கழகத்தின் சிறுவர் கலை விழா. இது வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இவர்கள் தமது கலை விழாவில், இன்னொரு புதுமையைப் புகுத்தியுள்ளனர். இவ்விழாவில் பிரபலமான ஆங்கிலப் பாடலொன்று ஒலித்துக் கொண்டிருக்க, ஆண்டு நான்கு மாணவிகள் மேற்கத்திய பாணியில் ஆண்களாகவும், பெண்களாகவும் அலங்கரித்துப் பிறேக் டான்ஸ் பாணியிலான நடனத்தை அரங்கேற்றினர். நடனத்தின் கணிசமான நேரத்தில் பெண்களாக அலங்கரிக்கப்பட்டவர்கள் ஒற்றைக் கையால் சட்டையை உயர்த்திய வண்ணம் காணப்பட்டனர்.

முன்னணிக் கொழும்புத் தமிழ்ப் பெண்கள் கல்லூரியொன்றின் சிறுமிகளால் இந்நடனம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. உண்மையில் இவ்வாறான நடனமொன்றை ஏற்பாடு செய்தவர்களின் நோக்கம் என்னவாக இருக்கும். இவ்வாறான வக்கிரங்களுக்கு வெளியில் ஊடகங்களால் நன்கு பண்படுத்தப்பட்ட பார்வையாளர்கள் கூட்டத்தினரின் கைத்தட்டலைப் பெறுவது தானா? ஆனால், இதன் பின்னால் எத்துணை மோசமான கலாசார, பெண் ஒடுக்குமுறைக் கருத்தியல்கள் தொழிற்படுகின்றன என்பதை அவர்கள் அறியாமலிருப்பார்களா?

ஒருபுறம், நன்கு திட்டமிட்ட முறையில் தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், புறச் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மறுபுறம், பெரும்பான்மையின மாணவர்கள் அரசியல் மயப்படுத்தப்படுகின்றனர். நேரடியாக ஊர்வலங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆனால், தமிழ்ச் சூழலின் பொறுப்பற்ற தனங்களால் மாணவர்கள் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கொழும்புத் தமிழ்ப் பாடசாலைகள் கிடைத்தற்கரிய வளங்களைக் கொண்டு வெறும் களியாட்டங்களையே நடாத்திக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவுகள் மிக மோசமாகவே அமையும். அவை நீண்டகாலத்திற்கு நம்மைப் பின்தங்க வைப்பது மட்டுமன்றி நம்மை அழித்தும் விடும்.

நாங்கள் இப்போதாவது இதுபற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்



# உளறும் காற்றே தோராய்

தா. உமாகரன்

திருஅண்ணை சாரமும் சேட்டும் அணிந்து எளிமையாக இருந்தார். ஆனால், செழுமை மிகுந்த பூரிப்போடு தெரிந்தார். அந்த செழுமையும் பூரிப்பும் அமைதியான மனநிலையோடு ஆற அமர நன்கு குளித்த பிறகு உண்டாகும் செழுமைக்கும், பூரிப்பிற்கும் ஒப்பானவையாகவிருந்தன. ஆனால், திருஅண்ணை சற்று முன்பாக குளித்திருப்பதற்கான வாய்ப்பே இல்லை. ஏனெனில், அவர் சற்று முன்பாகத் தான் எங்கேயோ போய்விட்டுத் திரும்பியிருந்தார். வீட்டு முன்னறையில் ஜெகனுடைய பிரசன்னத்தைக் கண்டதும் உடைமாற்றி விட்டு வந்து அவனுக்கு முன்பாக அமர்ந்து கொண்டார். ஒரு மணித்தியாலம் குளித்தாலும் தன்னிடத்தில் அந்த செழுமையும், பூரிப்பும் உண்டாவதற்கான சாத்தியமே இல்லை என்று தோன்றியது ஜெகனுக்கு. நேரம் ஒதுக்குவதென்பது ஒரு பெரிய பிரச்சினையே இல்லை.

திருஅண்ணை மூன்று பேர்கள் அமரக் கூடிய சோபாவின் நடுவில் அமர்ந்திருந்தார். வலது காலை இடது காலின் மீது போட்டு கைகளை உயர்த்தி சோபாவின் மேற்புற விளிப்பின் மீது நீட்டியிருந்தார். இரு கைகளினதும் விரல்கள் விளிம்பின் இரு அந்தங்களையும் வருடுவதும் அவற்றின் மீது மென்மையாக தாளமிடுவதுமாக செயற்பட்டுக் கொண்டிருந்தன. கண்களுக்குப் புலப்பட்ட உடற்றோல் பகுதிகளுக்குரிய மயிர்கள் சற்றே சாய்வாக பொருத்தமான முறையில் கிளர்வுற்றிருந்தன. அவை அவருடலின் ஒவ்வொரு அணுவினதும் பூரிப்பின் பிரதிநிதித்துவம் தான். முகத் தசைகள் நெகிழ்ந்து பொலிவுற்றிருந்தன. திருஅண்ணையை அவதானித்துக் கொண்டிருக்கும் சாதாரண மனநிலையுடன் கூடிய ஒரு நபரை திருஅண்ணையின் பரவசத் தோற்றம் அவருடைய மனநிலைக்கே இட்டுச் சென்றிருக்கும். ஆனால் ஜெகன் எதிர்த் திசையில் பயணப்பட்டான்.


திருஅண்ணை மென்மையாக ஆனால் நிறைவாக எதையோ நினைத்து புன்னகைத்தார். பரவசம் நிரம்பி மேலும் நிரம்ப இடமில்லாமல் தான் வடிந்திருக்கின்றது. இன்னும் கொஞ்சம் இறுக்கிச் சிரித்திருந்தால் பரவசம் இரண்டு கண்களில் இருந்தும் கண்ணீர் வடிவிலும் வெளிப்பட்டிருக்கும். அதே அளவிலேயே சற்றுக் கூடுதல் நேரத்திற்கு சிரித்திருந்தாலே வந்திருக்கும் என்றும் பட்டது. திருஅண்ணை சமீப காலங்களாக முன்னரை விடவும் கூடுதலாகத் தான் சிரிக்கிறார். நாளைக்குப் பின்னேரம் வரைக்கும் இன்றும் அடிக்கடி சிரிப்பார். ஒரு சிரிப்பிற்கும் அடுத்த சிரிப்பிற்கும் இடைப்பட்ட நேர இடைவெளி குறைந்து கொண்டு போகும். ஹீத்ரு வாசலில் போய் இறங்கியதும் இதைவிடக் கூடுதலான சந்தோசத்தோடு சிரிப்பார். கட்டுநாயக்காவில் போய் இறங்கியதும் அதையும் விடக் கூடுதலான சந்தோசத்தோடு சிரிப்பார். ஊரில் போய் இறங்கியதும் ஆகலும் கூடுதலான சந்தோசத்தோடு சிரிப்பார். சில நேரங்களில் சந்தோசம் தாங்காமல் அழுதாலும் அழுவாரோ? மூன்று மாதங்களுக்கு முதலிருந்தே 'ஊருக்குப் போறன்', 'ஊருக்குப் போறன்' என்று புலம்பிக் கொண்டு திரியத் தொடங்கியவர் ஒன்பது வருடங்கள் கழித்துப் போகிறார். நடத்தாலும் நடக்கும்.

திருஅண்ணையின் இடத்தில் அவன் இருந்திருந்தால் இதைவிடக் கூடுதலான சந்தோசத்தோடு சிரித்திருப்பான். சிலவேளைகளில் சந்தோசத்தால் தாங்காமல் இங்கேயே அழுதிருப்பான். ஊரில் போய் இறங்கியதும் அந்த மண்ணை விழுந்து கும்பிட்டுவிட்டுத் தான் ஊருக்குள் நுழைந்திருப்பான். திருஅண்ணையைப் போன்று அவனும் எழுபத்தியெட்டாம் ஆண்டே இங்கே வந்திருக்கலாம். வந்திருந்தால் இந்நேரம் அவரோடு சேர்ந்து ஊருக்குப்போக ஆயத்தமாகிக் கொண்டிருந்திருப்பான். சட்டென்று அந்த எண்ண ஓட்டத்தின் பொருத்தமின்மை உறைத்தது. "சீ.. இதென்ன விசர்த்தனமா யோசிக்கிறன்.. எழுபத்தெட்டாம் ஆண்டு எனக்கு நாலுவயசெல்லோ" வந்திருந்தாலும் திருஅண்ணையைப் போல் முட்டாள்த்தனமாக ஒன்பது வருடங்கள் கழித்தெல்லாம் போயிருக்க மாட்டான். அதிகபட்சம் இரண்டு வருடங்கள் தான். "சீ.. வந்த ரண்டாம் மாதமே ஓடியிருப்பன். தரித்திரம் பிடிச்ச வாழ்க்கை. நரகம்". இதற்கும் ஆசைப்பட்டு சிட்டிசன் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள் தானே. திருஅண்ணையைப் பார்த்தால் அப்படிப்பட்டவராகத் தெரியவில்லை. எப்படி இந்தக் கூட்டத்தோடு சேர்ந்து தொலைத்தார் என்பதும் புரியவில்லை. பைத்தியக்கார மனிதர். எப்படித்தான் ஒன்பது வருடங்கள் பொறுத்துக் கொண்டு இருந்தாரோ?

அது சரி, அப்போது திரும்பிப் போயிருந்தார் என்றால் இப்போது திரும்பவும் அவனை மாதிரியே அகதியாய் வந்து சேர்ந்திருப்பார். வந்து அவனை மாதிரியே அகதி அந்தஸ்து கேட்டு விண்ணப்பித்து அது நிராகரிக்கப்பட, அப்பீல் செய்துவிட்டு அலைந்து கொண்டிருப்பார். திருஅண்ணைக்கென்ன, நல்ல வேலை, நல்ல சம்பளம், நல்ல மதிப்பு - கௌரவம், நல்ல வீடு வாசல், இங்கேயே மனைவி - பிள்ளைகள் அவனுக்கு இவையெல்லாமே மாறித் தான் இருக்கின்றன. 'நல்ல' என்ற சொல் கூடாத சொற்களோடு சேர்ந்திருக்கின்றது. அல்லது 'இல்லை' என்ற சொல்லையும் சேர்த்துக் கூட்டிக் கொண்டு வருகின்றது. நல்ல கஷ்டம். நல்ல வேலை, நல்ல வேலையில்லை. நல்ல சாப்பாடில்லை. அவன் பயப்படுகின்ற மாதிரித் தான் 'நல்ல' என்ற சொல்லும் அவனுடைய வாழ்க்கையைப் பார்த்து பயப்பிடுகின்றது போல்.

அப்பீலை திருப்பியும் நிராகரித்துவிட்டாலும் பரவாயில்லை. பேசாமல் ஊருக்குப் போய் நிம்மதியாக இருக்கலாம். "ஐயோ அப்ப வீட்டு நிலைமை?" தோட்டம் இருக்கிறது தானே. தோட்டத்தை செய்ய வேண்டியது தான். ஆருக்கும் அடிமையாக இல்லாத தொழில். இந்த வெள்ளைக்காரர்களிடம் இருந்து கிழிபடுவதை விட அது எவ்வளவோ பரவாயில்லை.

சட்டென்று திரை விலக்கி எட்டிப் பிடித்து கோர உருவினதான உண்மை ஒன்று. "என்ர பயணத்துக்காக காணியையும் ஈடு வைச்சாச்சு". சடுதியாக அவனில் பொங்கிய தீவிரம் திருஅண்ணையைத் தூண்டியது. "என்னடா யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்?", "ஒண்டுமில்லை" முயன்றும் வார்த்தை முழுமையாக வெளிவரவில்லை



> காற்றைத் துணைக்குக் கொண்டது. அறுபட்டது வெளிப்பட்ட சொற்கள் இனி முழுமையாகவே வெளிவராமல் போய் விடுமோ? ஆறுதலும், வாஞ்சையும் உதிர்க்கும் திருஅண்ணை

"ஐயோ, வேண்டாம் திருஅண்ணை" வடிவம் குலைக்க முடியவில்லை. அது அவ்வளவு விருப்பத்திற்குரியதாகவும் இல்லை.

"இல்லை. கூடாது. எனக்கு இருபத்தியொரு வயசு" பிடிமானம் எதுவும் இல்லைத் தான். ஆனாலும் விறைத்தே தான் ஆகவேண்டும். எங்கே சிதறித் தொலைந்தன வார்த்தைகள்? தேடிப் பொறுக்கிய வார்த்தைகள் பறித்துக் கொண்டன கணிசமானளவு நேரத்தை. "நான் போட்டு வாறன் திருஅண்ணை." வெவ்வேறு வேகத்துடனும் வீச்சத்துடனுமான வார்த்தைகள். திரு அண்ணை மெலிதாக உறைந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார். முன்பிலும் உதிர்க்கும் பார்வை. விறைப்பு வலுவிழக்கத் தொடங்கியது. உன்னி எழுந்தான். "நான் போட்டுவாறன் திரு அண்ணை." மேலும் சேர்ந்த வார்த்தைகள் திரு அண்ணையை எழுப்பின. அவனுடைய தோளை அதுரத்துடன் பிடித்துக் கொண்டார். "வீட்டுக்காரருக்கு என்ன சொல்ல வேணும்?" உள்ளுக்குள் எல்லாமே பொறிந்து விழுந்தது. மிகுந்த பிரயத்தனப்பட்டு ஒன்று திரட்டியிருந்த திராணி சிதைந்து கரையத் தொடங்கியது. கரைந்தது. கண்களை அடைந்து சூழவும் செய்தது. வேண்டாம் திரு அண்ணை எல்லாவற்றையும் வீட்டில் போய்ச் சொல்லி விடுவார். எல்லோரும் கவலைப்படுவார்கள். அம்மா அழுவார். நினைத்து நினைத்து அழுவார். நாள் முழுவதும் சாப்பிடாமலே இருப்பார். "அகதி அந்தஸ்தை நிராகரிச்ச விசயத்தையும் வாற கிழமை அப்பீல் வழக்கு நடக்க இருக்கிறதையும் சொல்லாதீங்கோ. மற்றும்படி எழுதவேண்டியதெல்லாம் கடிதத்திலை எழுதியிருக்கிறன். "இவ்வளவையும் பேசி முடிப்பது தான் அப்போதைய இலட்சியமாகவிருந்தது. தட்டுத் தடுமாறி ஒரு மாதிரியாக இலட்சியத்தை அடைந்தாகி விட்டது. இனி விடைபெறும் இலட்சியம். அறுத்து உறுத்துக் கதைத்தாவது இலட்சியத்தை அடைய வேண்டும். "கவனமாகப் போட்டு வாங்கோ. நான் வாறன்." "சரியப்பு. வேளைக்கு அறைக்குப் போய்ச் சேர்", 'அப்பு' என்ற வார்த்தை மேலும் கரைத்தது. நிமிர்ந்து அவரை ஒருமுறை முழுமையாகப் பார்வையால் வருடினான். அடுத்த கிழமை இந்த உருவம் வீட்டு முன்னறையில் வைத்து எல்லோரையும் பார்க்கும். எல்லோரோடும் உறவாடும், எல்லோரோடும் சந்தோசமாக சிரித்துக் கதைக்கும், அப்பாவுடன், அம்மாவுடன், அக்காவுடன், தங்கச்சியுடன், தம்பியுடன். திரு அண்ணையின் உருவம் கலங்கி மங்கத் தொடங்கியது. "நான் வாறன்" காற்று மனமிரங்கி குரல்வளைக்கே வந்து சொற்களை வாங்கிச் சென்றது. திரும்பி நடக்கத் தொடங்கினான். திரு அண்ணை வீட்டுக்குள் திரும்பிப் போகும் சத்தம் கேட்கவில்லை. கதவைச் சாத்தும் சத்தமும் கேட்கவில்லை. திரு அண்ணை பார்த்துக் கொண்டே நிற்கிறார். ஆறுதலும் வாஞ்சையும் உதிர்க்கும் கண்களோடும் அன்பும் ஆதுரமும் நிறைந்த முகத்தோடும் மெலிதாக உறைந்து போன திரு அண்ணை. தளர்ந்தது நடை.

இப்போதே கூண்டுக்குப் போய் அடைபட விருப்பமில்லை. தனக்குரிய நரகத்தைத் தேர்ந்தெடுத்த அவலத்தின் ஒரு பகுதியாக தெரிந்தெடுத்த துயரத்தின் நெருக்கமான இருப்பிடம் அறையின் பரப்பைப் போலவே குறுகிப் போய்விட்ட உயிர்ப்பும் அறையின் அமைப்பைப் போலவே சிக்கலுற்ற பிரக்ஞையும் இன்னும் பலமடைய வேண்டுமா என்ன? "வேண்டாம். நடந்தே போவம்."

ஊரில் போய் இறங்கி அடுத்த நாளே திரு அண்ணை வீட்டிற்குப் போவார்.

"என்னைத் தெரியுதோ?"

"எட நீர் செல்லையா மாஸ்ரரின்ரை மகன் திரு எல்லே? வாரும். வாரும் எப்ப லண்டனிலை இருந்து வந்தனீர்? ஜெகன் அடிக்கடி உம்மைப் பற்றி எழுதிறவன். போன கடிதத்திலை நீர் ஊருக்கு வரப் போறதா எழுதியிருந்தவன். இரும் தம்பி.

"நேற்றுத் தான் வந்தனான். போன செல்வாய் லண்டனிலை இருந்து வெளிக்கிட்டனான்."

அம்மா எங்கேயிருந்து வருவார். குசினியில் இருந்து? "ம்"

"வாங்கோ தம்பி. எத்தினையோ வருசத்துக்கு முந்திப் பார்த்ததுக்கும் இப்ப பார்க்கிறதுக்கும் பெரிசா வித்தியாசம்

நன்றி - நூலகத்திட்டம்



தெரியேல்லை."

அக்காவும் தங்கச்சியும் அறை வாசலில் தான் வந்து நிற்பார்கள். தங்கச்சிக்கு திரு அண்ணையை ஞாபகமிருக்குமோ என்னவோ, அக்காவிற்கு ஞாபகமிருக்கும். தம்பி வீட்டில் தான் நிற்பானோ அல்லது வெளியே எங்காவது போயிருப்பானோ. அவன் எங்கே வீட்டில் நிற்பது ஓ. எல் எழுதி முடித்து விட்டு இருக்கிறவன். எல்லோருக்கும் அவனையே கண்ட மாதிரி சந்தோசமாகவிருக்கும். "ஜெகன் உங்களிட்ட குடுக்கச் சொல்லி இந்தப் பார்சலை தந்து விட்டவன். இதோடை கடிதமும் காசும் தந்தவன்.

அப்பா வாங்கி தங்கச்சியிடம் அல்லது அக்காவிடம் கொடுப்பார். இரண்டு பேருடைய முகங்களிலும் சந்தோசம் அலைமோதும். பார்சலை எப்போது உடைத்துப் பார்ப்போம் என்று அந்தரமாக இருக்கும். தம்பி அந்த நேரத்தில் வீட்டிலிருப்பான் என்றால் உடனேயே உடைத்து விடுவான். இன்னும் நாலைந்து உடுப்புகள் கூடுதலாக வாங்கி இன்னும் கொஞ்சம் பெரிய பார்சலாக கொடுத்து விட்டிருக்கலாம்.

"ஜெகன் எப்பிடி இருக்கிறான் தம்பி?"

"அவனைப் பார்த்தாலே பெரிய பாவமாயிருக்கு. ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை செய்யிறான். ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாளெல்லாம் வேலைதான். காலமை ஏழு மணிக்கு வேலைக்குப் போனான் என்டால் இரவு பன்னிரண்டாகும் அறைக்கு வந்து சேர".

"சரியாகச் சாப்பிடுறேல்லையும் போலத் தெரியுது. ஒழுங்கான சாப்பாடு இருந்தால் தானே சாப்பிடுறதுக்கும். என்னடிக்குத் தான் அடிக்கடி வந்து போறவன். போறதுக்கு வேற இடமும் இருந்தால் தானே. அவனை என்னடியிலை வச்சிருக்கலாமென்டாலும் அவன் வேலை செய்யிற இடத்துக்கும் என்ரை வீட்டுக்கும் சரியான தூரம்."

"சரியாக் கவலைப்பட்டுக் கொண்டு தாடியும் வளர்த்துக் கொண்டு திரியிறான். நான் இஞ்ச வெளிக்கிடக்கேக்கை நல்லாக் கலங்கிப் போனான்."

உடனேயே பதில் சொல்ல இயலாமல் கொஞ்ச நேரம் தவித்து, பிறகு மெலிந்த சோர்ந்த குரலில் பதில் சொல்லும் திரு அண்ணை. பதில்களோடு ஒடுங்கிச் செல்லும் குரல்.

"அப்ப நான் வெளிக்கிடுறன். இன்னொரு நாளைக்கு வாறன்".

"தம்பி திரு அவனைக் கவனமாப் பார்த்துக் கொள்ளப்பு. உம்மை விட்டால் வேறை ஆர் தான் அவனுக்கு அங்கை இருக்கினம்" வாசல் நிலையடியில் வைத்து திரு அண்ணையின் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு நடுங்கிக் கரகரத்த குரலில் அப்பா. அந்தக் குரலுக்கும் கூட இயலாத நிலையில் அம்மா. திரு அண்ணை போன பிறகு அம்மாவிடமிருந்து விசும்பல்கள் அவிழ்ந்து தொடுப்புற்று அழுகையாக மாறும். அம்மாவை ஆறுதல்படுத்த இயலாமல் துவண்டுபோய் இருப்பார்கள் அக்காவும், தங்கச்சியும். சுவாமி அறைக்குள் போய்ப்படுத்துக் கொள்ளும் அப்பா நாலைந்து நிமிடங்களுக்கொரு தரம் "முருகா இப்படிச் சோதிக்கிறியே", "சண்முகா நீ தான் துணை" என்று புலம்பிக்கொள்வார்.

"அண்ணா நீங்கள் போன நாள் தொடக்கம் அம்மா விடியலையிலை சாப்பிடுறேல்லை. கேட்டால் அவன் பிள்ளை அங்கை என்ன கஷ்டப்படுறானோ என்டு சொல்லுறா. நீங்கள் அனுப்பின படங்களைப் பார்த்திட்டு அழ வெளிக்கிட்டா. திரு அண்ணையும் சரியாக் கவலைப்பட்டுச் சொன்னவர். நல்லா மெலிஞ்சு போயிட்டியள். ஏனண்ணா தாடி வளர்க்கிறீங்கள்? உங்களைப் பார்க்க எங்களுக்கு சரியான கவலையா இருக்குது. நல்லா வடிவாச் சாப்பிட்டு உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்கோ அண்ணா. கெதியிலை ஷேவ் எடுங்கோ. கட்டாயம் எடுங்கோ அண்ணா. தங்கச்சியிடமிருந்து கடிதம் வரும்.

திரு அண்ணை வீட்டிற்குப் போகின்ற நேரத்தில் தம்பி சிலவேளைகளில் விளையாடுவதற்கு போயிருப்பாள். "எங்கை உங்கடை கடைசி மகனைக் காணேல்லை? சின்னப் பிள்ளையாத் தான் ஆளைப் பார்த்திருக்கிறன்" "அவன் பக்கத்திலை இருக்கிற கிரௌன்டுக்கு விளையாடப் போட்டான். ஓ.எல். சோதனை எழுதிப் போட்டு இருக்கிறதாலை விளையாட்டும் ஊர் சுற்றுறதுமாகத் தான் இருக்கிறான்."

ஓ.எல்லை நன்றாகச் செய்திருக்கிறதாகத்தான் தம்பி எழுதியிருந்தான். றிசல்ட்ஸ் எப்படி வருமோ தெரியவில்லை. தங்கச்சி வருகின்ற ஆவணி மாதம் ஏ.எல். எழுதப் போகின்றாள். அவள் படிக்கக் கூடியவள். எப்படியும் கம்பஸுக்குப் போவாள்.

வீட்டு அயலில் மைதானம் ஒன்று இருப்பதே திரு அண்ணைக்கு தெரியாது. சிலவேளைகளில் தெரிந்திருக்கும். எண்பத்தியாறாம் ஆண்டு திரு அண்ணை ஊரிற்கு வந்திருந்தபோது காணி துப்பரவாக்கப்பட்டு விளையாட்டு தொடங்கி விட்டது தானே. பாவம் நல்ல மனிதர் சந்திரசேகத்தார். காடுவற்றிப் போய்கிடந்த காணியை விளையாடுவதற்கு கேட்டதும் தந்துவிட்டாரே. அவருடைய உடலுக்கு அந்தக் காணி தான் சுடலையாகப் போகின்றது என்பதற்காகத் தான் கடவுளாகப் பார்த்து அவருக்கு அந்த நல்ல புத்தியைக் கொடுத்தாரோ என்னவோ. என்ன கடவுள். அவருடைய கால் மீது ஷெல் விழுந்து, அது வெடிக்காமல் கால் முறிந்து இரத்தம் ஒழுக ஒழுக ஒதுங்கி ஒதுங்கி சாகும்போது எங்கு போனார் கடவுள். இந்தியன் ஆமிக்குப் பயந்து ஆஸ்பத்திரி பின் மதில் வழியாக அவருடைய பிரேதத்தை தூக்கித் தர அவசர அவசரமாக வாங்கி புளிய மரத்திற்குக் கீழே வைத்து கொள்ளி வைத்துவிட்டு அம்மன் கோயிலுக்கு ஓடி திரும்பி அடுத்த நாள் வரும்போது அரைகுறையாக எரிந்து கிடக்க, திரும்பியும் தீ மூட்டிவிட்டு ஓடி மூன்று நாட்களாக கொஞ்சம் கொஞ்சமாகத் தானே எரிந்து சாம்பலாகினார். ஒரு நல்ல மனிதருக்கு கடவுள் இப்படியா சாவைக் கொடுப்பது?

சந்திரசேகரத்தார் செத்து இந்தியன் ஆமிப் பிரச்சினை முடிந்த பிறகும் விளையாட முடியாமல் பிறகு இந்தியன் ஆமியோடு சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப்.காரர் செய்த அட்டகாசத்திற்குப் பயந்து வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்து. இந்தியன் ஆமி நாட்டை விட்டுப் போய். ஈ.பி.ஆர்.எல்.எப்காரருடைய அட்டகாசமும் முடிந்த பிறகு தானே விளையாட்டு திரும்பவும் தொடங்கியது. ஆனால், அதற்குப் பிறகு சந்திரசேகரத்தாருக்குப் பயந்து புளியமரத்தின் மீது யாரும் ஏறுவதில்லை. கொஞ்ச நாட்கள் கழித்து அவன் தான் துணிந்து முதன்முதலில் ஏறினான். அதற்குப் பிறகு தான் மற்றவர்களும் துணிந்து ஏறினார்கள். என்றாலும் பழைய மாதிரி ஆர்வத்தோடு ஏறியிருந்து கும்மாளம் அடிப்பது குறைந்து தான் போனது. எங்கே. அந்தப் பிரச்சினையோடு ஒவ்வொருவராக வெளிநாடுகளுக்கு போகத் தொடங்கி விட்டார்கள். கடைசியாக வெளிக்கிட்டது அவன் தான். இப்போது உதயன் மட்டும் தான் ஊரில் நிற்கிறான். அதுவும் வவுனியாவில் தான். அரசாங்க வேலை.

முந்தித் தான் விளையாட்டு. நான்கு மணிக்குத் தான் விளையாட்டு தொடங்கும் என்றாலும் மூன்று மணிக்கே - பள்ளிக்கூடத்தால் வந்த கையோடு கிரௌன்டுக்குப் போய் விடுவது, புளிய மரத்தில் ஏறியிருந்து புளியம்பழம் சாப்பிடுவது, ஊர்க்கதை கதைப்பது, கொப்புத் தாவி விளையாடுவது என்று ஒரே அட்டகாசமாக இருக்கும். அந்தப் புளியம் பழம் சாப்பிடுவதற்கு காசு கொடுக்க வேண்டும். சீனி புளியம்பழம். உப்புத் தூளும் மிளகாய்த் தூளும் கலந்து புளியம்பழத்தை தொட்டுச் சாப்பிட என்ன ருசி. இப்போதும் அந்தப் புளிய மரம் இருக்கின்றதோ என்னவோ, இத்தனை வருசங்களில் சந்திரசேகரத்தார் பற்றிய பயமெல்லாம் இல்லாமல் போய் தம்பியாட்கள் புளிய மரத்தில் ஏறி விளையாடுவார்கள். புளிய மரத்தில் பரண் கட்டி அதற்குள் தான் பட், போல், பிளாடர், விக்கெட், உப்புத் தூள், மிளகாய்த் தூள் எல்லாவற்றையும் வைத்திருந்தார்கள். இவர்கள் எப்படி வைத்திருக்கின்றார்களோ தெரியவில்லை. அவன் அந்த உச்சிக் கொப்பில் ஏறியிருக்க வேண்டும். ஏன் தான் அப்போது பயந்தானோ.

"அங்கை பாற்றா ஜெகனை! என்னென்டு மச்சான் உச்சிக் கொப்புக்கு ஏறினனி?"

"டேய் ஜெகன், கொப்பை உலுப்படா. அந்தக் கொப்பிலை இருக்கிறதெல்லாம் பழம் தான்" எல்லோரும் வாயைப் பிளந்து கத்தியிருப்பார்கள்.


ஆவணி விடுதலை வரைக்கும் கிரிக்கெட், ஆவணி விடுதலையோடு ஃபுட்போல், கிரிக்கெட்டும், ஃபுட்போலும் சலித்துப் போனால் இடைக்கிடை கிளித்தட்டு என்பது தான் வழமையாகவிருந்தது. தம்பியாட்களுடைய வழமை எப்படியோ?

"என்ன வெளுவை வெளுக்கிறான் ஜெகன். மெயினாலை சிக்ஸர்."

"மச்சான் ஜெகன். ஓபனிங் பட்ஸ்மனா உன்னை நம்பி அனுப்பலாம்." என்றாலும் அவனால் ஒரு நாளேனும் ஓஃபில் அடிக்க முடிந்திருக்கவில்லை. எப்படியாவது ஓஃபில் அடித்திருக்க வேண்டும். "என்ர ஆண்டவா! அடியைப் பாற்றா ஜெகன்ர, ஓஃபால சிக்ஸர்.

"ஜெகன் டேய். சென்ரர் ஃபோர்வேடுக்கு வா."

"வேண்டாம். வேண்டாம் அவனை பக்குக்கு நிற்பாட்டு அப்பத்தான் பந்து



கீப்பரிட்டை போகாது கிரிக்கெட், புட்போல் இரண்டிலுமே திறமையோடு வேறு யார் தான் ரீமில் இருந்திருக்கிறார்கள். அவனைத் தவிர.

அடுத்த கிழமை அம்மன் கோயில் கொடியேற்றம். திரு அண்ணை விசயம் தெரிந்தவர் கணக்காகத் தான் போகிறார். திரு அண்ணைக்கு மூன்று தேர்கள் இருந்தது தான் தெரியும். இப்போது புதிதாக தங்க ரதம், சப்பறம் செய்திருக்கின்றதெல்லாம் தெரியாது. பார்த்தவுடன் ஆச்சரியப்பட்டுப் போவார். பெரிய சந்தோசமாகவும் இருக்கும். சிலவேளைகளில் தெரிந்திருக்கும். இரண்டையும் செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்தும் காசு சேர்த்தார்கள். திரு அண்ணையும் கொடுத்திருப்பார். மஞ்சம் செய்யப் போகின்றார்கள் என்றும் உதயன் எழுதினான். வேலை தொடங்கிவிட்டதோ தெரியவில்லை. திரு அண்ணை ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போவார். கொம்பு காவுவது, வடம் பிடிப்பது என்று முன்னுக்குத் தான் நிற்பார். அப்பா, அம்மா, அக்கா, தங்கச்சி, தம்பி எல்லோருக்கும் இந்தப் பத்து நாட்களும் கோயிலோடு தான் பொழுது கழியும். அவன் தான் இல்லை.

அறையை வந்தடைந்தாகி விட்டது. உள்ளே போகத் தான் வேண்டுமா? உறவுகளை, உயர்வுகளை, எத்தனை சந்தோசங்களை, மனத் துல்லியத்தை, அமைதியை, தெளிவை இழந்து எத்தனை காலங்களாகி விட்டன. துன்பம், என்ற ஒன்று இருப்பதையே உணர்த்தாமல் கூத்தாடித் திரிய வைத்த காலம். காவடி ஆடுவது, கொம்பு காவுவது, வடம் பிடிப்பது, கோயில் வீதியில் விளையாடுவது, கும்மாளம் அடிப்பதென பூரித்த காலம். விளையாடும்போது உதைக்கின்ற பந்தோடு சேர்ந்து சின்னச் சின்ன பிரச்சினைகளையும், உதைத்து ஓட வைத்து சந்தோசம் பொங்கிப் பிரவகித்த காலம். எல்லாம் அகன்று போய்விட்டன. அவனைச் சூழவமைந்த, அவனைச் செலுத்திக் கொண்டிருக்கும் காலத்தின் முதற் சிறுபகுதி, மென்மையும் அமைதியும் பொதிந்த வசந்தகாலம் தீர்ந்து விட்டது. இனி விகாரங்களையும், புயலையும் கொண்ட நெடிய பாலைவனக் காலம். வசந்தகால உணர்வுகளும் இழக்கச் செய்யப்பட்டுவிட்டன. இனி அகாலத்திற்குரிய உணர்வுகள் தான். மிகைக்கும் அகால உணர்வுகள். முதல் கீரிமலைக் கடல் அனுபவத்தில் நீச்சல் தெரியாமல் ஒரு முறை மீதிருந்து ஆழமான பகுதிக்குள் ஆழமானதென்று தெரியாமல் குதித்து கடும் அவதியுற்று மூர்ச்சித்தது நினைவில் இடறியது. புறத்தே இருப்பதும் நீரைக் கொண்டதுமான ஒன்று தான் கடலா என்ன? ஆனால், இம்முறை அவனாகக் குதிக்கவில்லை.

2

"ஜெகன் டேய்."

"டேய் ஜெகன்?!"

அண்மைய குரலொன்று தொலைவிலிருந்து ஒலித்தது.

"எத்தின மணிக்கு வந்தனி?" என்னடா ஒரு மாதிரி இருக்கிறாய்?" சுகமில்லையோ?"

கழுத்தில் கைவைத்துப் பார்த்தான். மெலிதான சூடு கைவழி புகுந்தது. "கொஞ்சம் காயுது தான்".

காரணத்தைக் கேட்கவில்லை. அவன்மீதான தனது இன்றைய இயக்கம் எவ்விதம் அமையுமென காலம் முன்கூட்டியே உணர்த்தியிருந்தது.

"ஏன்ரா படியிலையே இருக்கிறாய்? மேலை ஏறி அறைக்குப் போகாமல்? சாவியை விட்டிட்டுப் போட்டியே?"

ஆறுதல் தாங்கி வந்த குரலும் இளஞ்சூட்டுடன் பரவிய தொடுகை வாஞ்சையும் உயிர்ப்பை துளிர்க்கச் செய்தன. புலன்கள் சீராகின. எதிரே முகத்திலிருந்து தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக அறை நண்பன் நிக்சன் உருவாகினான். எதிர்பார்த்த வாஞ்சையும், ஆறுதலும் அவன் முகத்தில் தென்படவில்லை. ஓரளவு பரிதாபமும் பெருமளவு இருளும் முகத்தை ஆக்கிரமித்திருக்க சோர்ந்திருந்தான். "டேய், வாடா அறைக்குப் போவம்." நிக்சன் முன்னே ஏறினான். அயர்ச்சியுடன் எழுந்து தொடர்ந்தான் காலை ஓரளவு தான் உயர்த்த முடிந்தது. மேலும் உயர்த்தி அழுத்திப் பதிக்க திராணி இருக்கவில்லை. ஒவ்வொரு படியையும் பிரயத்தனப்பட்டுத் தான் கடக்க வேண்டியிருந்தது.

வீட்டிலிருந்து கடிதம் வந்திருந்தது. அவசரப்பட்டு வாசிக்க விருப்பமில்லை. நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக வாசிப்பதற்கென ஆவல் சேர்ந்தது. நிக்சன் எதுவித எதிர்ப்பும் காட்ட இயலாதவனாக கதிரையால் பலமாக இழுத்து வாங்கப்பட்டான். சத்தம் கேட்டு நிமிர்ந்து அவனை ஆராயு முன் அதே எதிர்ப்பின்மையோடு அவனிடமிருந்து நழுவித் தெறித்தன சொற்கள். "ஊரிலை திருப்பியும் சண்டை தொடங்கிவிட்டது. சண்டை பெரிசாகும் என்டு எல்லாரும் சொல்லினம். அதிர்வுகளின் உச்சத்தில் தொலைபேசி துடித்தலறியது. கால்கள் அனிச்சையாக இயங்கின. திரு அண்ணை தான் பேசினார். ஜெகன் விசயம் கேள்விப்பட்டனி தானே? நான் பயணத்தை நிற்பாட்டிப் போட்டன். மிஸ்ஸிஸையும், பிள்ளையளையும் நினைக்கப் பயமாயிருக்கு. நீ நாளைக்குப் பின்னேரம் வீட்டை வாவன்". வார்த்தைகள் தூக்கி வீசப்பட்டு திக்கும் தூரமும் தப்பி வந்து விழுந்தன.


"அண்ணா திரும்பவும் சண்டை தொடங்கப் போகுதெண்டு அவையே சொல்லிப் போட்டினம். எல்லாரையும் தயாராகட்டாம். சாமான்கள் எல்லாம் விலையேறத் தொடங்கிட்டுது. வீட்டிலை காசில்லை அண்ணா. திரு அண்ணா வரேக்கை கொஞ்சக் காசு கொடுத்தனுப்பி விடுங்கோ." கடிதம் நழுவியது. துவண்டு மடங்கி அமர்ந்து உள்ளங்கைகளுக்குள் முகத்தை புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினான்.

நன்றி - நூலகத்திட்டம்



சந்திரகுப்த தேனுவர, 1960ல் காலியில் பிறந்து கொழும்பில் வாழ்ந்து வரும் ஓவியர் மற்றும் நிலைப்படுத்தல் கலைஞர் (Installation Artist) 1981ல் களனிப் பல்கலைக்கழக அழகியல் கற்கைகள் நிறுவனத்தில் ஓவியத்திற்கான நுண்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். 1992ல் ரஷ்யாவின் மொஸ்கோ அரச கலை நிறுவனத்தின் கலைக்கழகத்தில் நுண்முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இலங்கை விபவி நுண்கலைக் கழகத்தில் நிர்வாகியாக இருந்துவரும் தேனுவர, களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் விரிவுரையாளராகவும் இருப்பவர். பல கண்காட்சிகளை தனிநபராகவும், குழுவாகவும் இலங்கையிலும், இந்தியா, பங்களாதேஷ், ரஷ்யா, நெதர்லாந்து, பிரான்ஸ், ஜப்பான், லண்டன், அவுஸ்திரியா, டென்மார்க் ஆகிய நாடுகளிலும் நடத்தியிருப்பவர்.

இவர் நிலைப்படுத்தல் கலைஞராகவும் முக்கியத்துவம் பெறுகின்றார். தேனுவரவின் புதியன தேடும் உந்தல், அரசியல் நோக்கு, கற்பனை, படைப்பாற்றல் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அவரது நிலைப்படுத்தல்கள் விளங்குகின்றன. இலங்கைத்தீவு உருமறைப்புச் செய்யப்பட்ட பீப்பாய்களால் நிலைப்படுத்தப்பட்ட ஒரு தேசமாகவே காட்சி தருகின்றது.



தேனுவர

இப்பீப்பாய்களால் தீர்மானிக்கப்பட்ட வாழ்வியக்கத்தின், எதிர்ப்பு வடிவமாக அமைவன தேனுவரவின் நிலைப்படுத்தல்கள். இது பீபாயிசம் (Barrelism) என்று அழைக்கப்படுகின்றது. தேனுவர ஓவியத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக ஜப்பான்- இலங்கை பண்பாட்டு நிதியத்தின் 1997ம் ஆண்டுக்கான புங்கா விருது வழங்கப்பட்டிருக்கிறது.

1999 ஓகஸ்ட் 8ம் திகதி கண்காட்சியுடனும் விஞ்ஞான வெளியீட்டுடனும் தோற்றம் கொண்டுள்ள 'ஒழுங்குகள் இல்லை'(ழே ழுசனநச புசழரி) ஓவியக் குழுவின் உறுப்பினராகவும் இவர் விளங்குகின்றார்.

அண்மையில் விபவி நுண்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தேனுவரவின் தனிநபர் ஓவியக் கண்காட்சியின் மனப் பதிவுகள் கவிதைகளாகி இருக்கின்றன. யுத்த சன்னதம் உச்சம் பெற்றிருக்கின்ற இன்றைய சூழலில் நியாயத்தின் மெல்லிதான குரல்கள் எங்கள் செவிகளை நிறைக்கின்றன. அவை, ஆக்கபூர்வமான எதிர்வினைகளை முளைகொள்ளச் செய்யும் ஆற்றலுடையவையாகின்றன. சமாதானத்திற்காக, அமைதிக்காக, எதிர்கால சுபீட்சத்திற்காக என எழும் பொய்யான குரல்கள் ஆகாயத்தை நோக்கிய துப்பல்களாக விழட்டும்.

### தேனுவரவிற்கு...

நூற்றாண்டுகால இராஜாங்கக் கனவுகளில்
பூர்வீககால வரலாற்று அச்சங்களில்
ஓங்கரித்து எழுந்திரையும்
யுத்த சன்னதங்களிடை

ஒரு சிறு ஆட்டிடையனின் புல்லாங்குழலிசை,
அடையாள அட்டைகளால்

பதிவுப் பத்திரங்களால்
கரைத்து வடிவமைக்கப்பட்ட
கடதாசிப் பாவை என்னுள்
உறையவைக்கப்பட்ட அமைதியின் அருவியை
மெல்ல உருக்கிற்று.

அவர்கள் வந்தனர்
பிடரிகள் ஓவியம் பார்க்க
ஆள்மாறி ஆள்மாறிப் பேசிக்கொண்டனர்
வார்த்தைகள் உதிர உதிர
வயிற்றுள் சிற்றுண்டிகளை நிறைத்துப்
போயினர் கைகுலுக்கி விடைபெற்று
மேலும் வந்தனர் போயினர்.

ஒரு சில ஆட்டிடையனின் புல்லாங்குழலிசை
கடதாசிப் பாவை என்னுள்
உறைய வைக்கப்பட்ட அமைதியின்
அருவியை
மெல்ல உருக்கிற்று.

கைவிடப்பட்ட இராணுவத்தின் உறவுகளாய்
தொங்கிற்றுச் சுவரில் ஓவியங்கள்
ஏங்கிய விழிகள் நோக்க
இரத்த உருத்துக்களின் நிழற்படம் சுமந்த
உன் ஓவியம் போல்

தொங்கிற்று சுவரில் ஓவியங்கள்.

வனாந்தரித்த மனங்களிடை
குழலூதித் திரிதல் நீங்கி
உயிர் கொள்ளும் நெஞ்சங்களிடை
இடம்மாறு.
உன் சைக்குரலைப் பெருக்கி
என்னுள் உறைய வைக்கப்பட்ட
அமைதியின் அருவியை மெல்ல உருக்கு

இசைத் தொனியைப் பெருக்கி
நம்பிக்கையின் இளஞாயிற்றுக் கதிர்களை
என்னில் படியவிடு.
வெறிதான வார்த்தைகளுக்கு செவிடாகிப்
போன கடதாசிப் பாவை என்னுள்
நம்பிக்கையின் இளஞாயிற்றுக் கதிர்களை
படியவிடு.

### இரண்டாவது பரிநிர்வாணம்

அருவிகள் வயல்கள் மலைகளென விரிந்த
தேசத்தின் நிலவுருக்கள்
உருமறைப்புச் செய்யப்பட்ட பீப்பாய்களும்
தறித்து நாட்டப்பட்ட மரக்குற்றிகளாலும்
முள்ளுக்கம்பிச் சுருள்களாலும்
மாற்றீடு செய்யப்பட்டன.


சுற்றுச் சூழல் பாதுகாப்பு
உறுதிப்படுத்தப்பட்டது.
புன்னகையும் குதூகலமும் பிடுங்கி வீசப்பட்டு
அந்த இடத்தில்
அச்சமும் பீதியும் நடுகை செய்யப்பட்டன.
எல்லாவற்றுடனும்
தலைக்குமேல் தள்ளாடிவரும்
பீப்பாய்க்குண்டுகளுடன்
புனிதத் தலங்களை அபிஷேகித்த
பீக்குண்டுகளுடன் நாம் வாழ்ந்தோம்.
போர் முகம் கொடுக்கப்பட்ட பீப்பாய்களிற்கு
வேறோர் முகம் கொடுத்தோம்.
முற்றுகையிடப்பட்ட நாட்களின்
மூலப்பொருளாகி
வீடாக, வாசலாக, கடைகண்ணியாக
இன்னுமின்னும் பலவாக
உயிர்முகம் கொண்டெழுந்தன பீப்பாய்கள்.
பீப்பாய்களிடையே
புத்தரின் இரண்டாவது பரிநிர்வாணம்
நிகழ்ந்தது.
அரச மரங்களின் கீழ்
இராணுவ
முகாம்களினுள்
எழுந்தெழுந்து
ஆக்கிரமிப்பின்
சின்னமாகப்
பதிந்துபோன
புத்தரின்
சிலையுருக்கள்
ஆயிரம்
பீப்பாய்களிடை
நுண்ணியதாய்
எழுந்து
அச்சத்தின் மலையிருப்பை மெல்ல
உலுக்கிற்று.
உருமறைப்பு வண்ணங்கள் பூசுண்டு
போர் முகம் கொண்டிருந்த பீப்பாய்களிடையே
அதிகாரத்துவ கொலுவிருப்பை உறுதிசெய்ய
வீற்றிருக்க வைக்கப்பட்ட புத்தர்
சிலையுருக்கள்
இரண்டாவது பரிநிர்வாணத்தை அடைந்தன
ஆயிரங்கால் மண்டபத்தின் பெருமையை
ஆயிரத்தொரு சங்குகள் வைத்து
அபிஷேகித்த மகிமையை அவை கொண்டன.
தேனுவரவின் ஓவியங்களில்
பீப்பாய்களிடையே நிகழ்ந்தது
இரண்டாவது பரிநிர்வாணம்.

### வெற்றி நடனம்

வீடுகளைக்குதூகலத்தில் நிறைக்கும்
குழப்பத்தில் ஆழ்த்தி விடும்
அந்த இளசுகள்
எதிர்காலக் கனவுகளில் கற்பனைகளில்
உயிர்பூத்திருப்ப.
வான் நோக்கிப் பட்டம் போல் கிளம்பும்
உந்தலுடையன.
ஆயினும்
முச்சையறுத்து வாலறுந்து
முகங்குப்புற வீழ்த்தி முறிக்கும்
யதார்த்தம்.
எதிர்ப்பார்ப்புகளின் கதவுகள்
அடைபட்டுப்போக
ஒரேயொரு வாசல்
அவர்களுக்கு
திறந்திருக்கும்.
அரசியல்
பயங்கரவாதிகள்
சுயநலப் புத்திஜீவிகள்
கையேந்தும்
கலைஞர்கள்
தொடர்பூடக
முதலைகள்
எதையும் முதலாக்கும்
வியாபாரிகளென
பலர் திறந்த வாசலிலே
இளநெஞ்சங்களின்,
மாசுபடுத்தப்படாத
புத்திகளின்
படைப்பாற்றலிற்கான கற்பனைகள்
தகர்க்கப்படும்
ஆயுததாரிகளாக அவர்கள் கொலை
நிலைப்படுத்தப்படுவர்.
அவர்கள் கொல்லுவர் மரிப்பர்
பாலியல் பலாத்காரமும் பண்ணுவர்
ஆச்சரியப்படும்படி கணங்களில்
மனிதராயுமிருப்பர்
காயமுறுவர் ஊனமடைவர்,
எல்லாமும் வெற்றியாக
தவிர்க்க முடியா வேளைகளில்
வெற்றிகரப் பின்வாங்கலாக
தொடர்பூடகங்களில் பெருங்கதையாடல்கள்
நிகழ்த்தப்படும்.
ஆயினும் அவர்களின் கதை
எண்ணிக்கையுள் அடங்கிப்போகும்.
அரசியல் பயங்கரவாதிகள்
சுயநலப் புத்திஜீவிகள்
தொடர்பூடக முதலைகள் எதையும்
முதலாக்கும் வியாபாரிகள்
போர் நடத்தி வெற்றி நடனமிட....
அவர்களின் கதையெல்லாம்
எண்ணிக்கையுள் அடங்கிப்போகும்.

### எவ்வுலகின் குரலாக....

பச்சை கரும்பச்சை கறுப்பு
மஞ்சள் செம்மஞ்சள் சிவப்பு
நீலமென வண்ணங்கள்
ஒன்றுசேர்ந்து உருக்கொடுத்த
தூரிகையின் மெல்லதிர்வு
பேரதிர்வாய் நெஞ்சகத்தில் அதிர்கிறது.
வண்ணங்களில் உணர்வுகளைப் பேசுவதாய்



வண்ணங்களில் செய்திகளைச்
சொல்லுவதாய்
தூரிகையின் மெல்லதிர்வு
பேரதிர்வாய் நெஞ்சகத்தில் அதிர்கிறது.
பரீட்சார்த்தங்களின் பெயரால்
கண்டுபிடிப்புகளின் பெயரால்
உயிர்நீங்காதவனாய், அச்சுறுத்தாதனவாய்
எங்கும் எளிதாய் எவர் மத்தியிலும்
தூரிகையின் மெல்லதிர்வு
நெஞ்சகத்தில் பேரதிர்வைக் கிளர்த்துவன.
நவீனத்துள் தேங்கிற்றா?
பின்நவீனத்துள் பாய்ச்சலை நிகழ்த்திற்றா?
புதிய உத்திகளை, நுட்பங்களை தாங்கிற்றா?
கேள்விகளை முனைமழுக்கி
தூரிகையின் மெல்லதிர்வில்
பேரதிர்வை எதிரொலிக்கும் ஓவியங்கள்
எவ்வுலகின்குரலாக நிலையெடுக்கும்?

– ஜெய்சங்கர்

## பைசிக்கிள் தீவ்ஸ்








நூல் : விக்டோரியா டி சிகாவின்
'பைசிக்கிள் தீவ்ஸ்'
1948 - இத்தாலிய திரைக்கதை
ஆங்கிலத்தில் : சைமன் ஜெர்டோக்
மொழிப்படிவாக்கம் : அஜயன் பாலா
வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம்,
இரண்டாம் தளம்,
பிளாக் 31, 48, இராண அண்ணா நகர்,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை 600 078.
விலை : ரூபா 30/-
மின்னஞ்சல் :
(thamaraiselvi@intamm.com)

### பைசிக்கிள் தீவ்ஸ்

உலகப் புகழ்பெற்ற இயக்குநர் விக்டோரியா டி சிகாவின் பைசிக்கிள் தீவ்ஸ் (Bicycle Thieves) திரைப்படத்தின் கதை-வசனம் தமிழில் நூலாக வெளிவந்துள்ளது.

இத்தாலியில் 1948இல் வெளியான இத்திரைப்படம், இன்றளவும் உலகின் மிகச்சிறந்த படங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் திரைக்கதை வசனத்தின் தமிழாக்கம் தமிழுக்கு ஒரு புது வரவு.

கதாபாத்திரங்கள் பேசும் வசனங்கள் மட்டும் அல்லாமல், பின்னணி இசை, கேமராக் கோணங்கள் போன்ற திரையில் வரும் தொழிநுட்ப விஷயங்கள் யாவும் இந்நூலில் விவரிக்கப்படுகின்றன.

நம்மூர் விசு, ப. சேகர் படங்களில் கதாபாத்திரங்கள் பக்கம் பக்கமாக வசனம் பேசித் தீர்ப்பது போல் இல்லாமல், சினிமா என்ற காட்சி ஊடகத்தை முழுமையாகப் புரிந்து, குறைவான, அளவான வசனங்களுடன் வெளிவந்த படமாதலால் இத்தகைய சூழல் மற்றும் கெமரா நகர்வு வர்ணிப்பு இந்நூலுக்கு அவசியமாகிறது. இதனால் நூலைப் படிப்பவர்கள் காட்சியை மனக்கண்ணில் எளிதாகக் கற்பனை செய்து கொள்ள இயலும்.

'ஆங்கில மூல நூலைப் படித்து முடித்தவுடன் ப்ரூனோ, ரிசியுடன் (கதையின் முக்கியமான தந்தை - மகன் கதாபாத்திரங்கள்) சேர்ந்து நானும் அழுது கொண்டு செல்வதாக உணர்ந்தேன். சட்டெனத் தீர்மானித்து இம்மொழிபெயர்ப்பு நூலை எழுதத் துவங்கினேன்" எனக் கூறும் மொழி-பெயர்ப்பாளர் அஜயன் பாலா, அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை இந்த நூலைப்படிக்கும் நமக்கும் ஏற்படுத்துகிறார்.

"நீயெல்லாம் எங்கிட்ட மாட்டியிருக்-கணும். ஜென்மத்துக்கும் இந்த மாதிரி காரியத்தையே கனவுல கூட நெனச்சுப் பார்க்க மாட்டே.. ஏதோ... பொழைச்சிப் போ... அந்த ஆளா இருக்கவே உன்னை ஒண்ணும் பண்ணாம விட்டுட்டுப் போறார்" என்பது போல் நூல் முழுவதும் கதாபாத்திரங்களின் பேச்சு - மொழி பெயர்ப்பு என்பது போல் இல்லாமல், நம்மூர் பேச்சு வழக்கில் உள்ளது. அஜயன் பாலாவின் மொழிபெயர்ப்பு அருமை. நூல் வெளியீட்டு விழாவில், இயக்குநர் பாலுமகேந்திரா குறிப்பிட்டது போல் திரைப்-படத்தைப் பள்ளிகளில் ஒரு பாடமாக ஆக்கினால் அதற்கான ஒரு பாடநூல் இதோ கிடைத்துவிட்டது.

– ச. ராமசாமி.

நன்றி - நூலகத்திட்டம்




# பிள்ளை அழுத கண்ணீர் - நாடகம்

## விஞ்ஞானம் பரப்பலில் புதிய உத்தி! புதிய வரவு!!

விஞ்ஞானம் என்பது இயற்கையின் நிகழ்ச்சிகளிலும், நிபந்தனைகளிலும் ஒழுங்கமைக்கப்பட்ட அவதானங்களைச் செய்து, அதன் மூலம் உண்மைகளைக் கண்டுபிடித்துக் கொள்கைகளையும், விதிகளையும் உருவாக்குவதாகும். விஞ்ஞானம் என்பது சில கோட்பாடுகளையும், விதிகளையும் உடையது. அவைகளிலிருந்து தான் நமது வாழ்க்கை முறை மாற்றியமைக்கப்படுகின்றது. இவற்றை ஆராய்ந்து அறிவதன் மூலம் விஞ்ஞான மனப்பாங்கு வளரும். இந்த விஞ்ஞான மனப்பாங்கு நாட்டையும், உலகையும், மக்களையும் ஏன் உலகம் அனைத்தையுமே ஒன்றுபடுத்த வல்லது. விஞ்ஞான மனநிலை நாட்டையும், நாட்டு மக்களையும் ஒற்றுமைப்படுத்துவதுடன் மட்டுமல்லாது அந்நாட்டு மக்களினது சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும் பெருந்துணை செய்து, அந்நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்று அந்நாட்டு மக்களுக்கு ஒரு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

இந்த விஞ்ஞான மனநிலை வளரவும், அதற்காக மக்கள் மத்தியில் விஞ்ஞானத்தைப் பிரபல்யமாக்கவும் (Popularizing Science) அல்லது பரப்பவும் காலத்திற்குக் காலம் உலகில் பல சங்கங்கள் தோன்றி வந்துள்ளன. அதிலே முதற் சங்கம் நியுட்டன் காலத்தைய இயற்கை அறிவை வளர்ப்பதற்கான இலண்டன் றோயல் கழகமாகும். சுருக்கமாக இது றோயல் சொசைட்டி என அழைக்கப்படுகின்றது. இது போல இலங்கையில், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தைக் (Sri Lankan Association for the Advancement of Science) குறிப்பிடலாம். விஞ்ஞானத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காகப் பல உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. அசையும், அசையாத பொருட் காட்சிச் சாலைகளை உருவாக்கல், கருத்தரங்குகள், புல விஜயங்கள், விஞ்ஞானச் சிறப்புச் சொற்பொழிவுகள், சஞ்சிகை வெளியீடுகள், கல்விச் சுற்றுலா, விவசாயிகள், மீனவர்கள் போன்ற தொழிலாளர்கள் மத்தியில் தமது தொழில் பற்றிய அறிவை விருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பாடசாலைகளில் விஞ்ஞான தினங்கள், வினா விடைப் போட்டிகள், பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்தல், பயிற்சிப் பட்டறைகளை நடாத்தல் போன்றவற்றின் மூலம் விஞ்ஞானம் பிரபல்யமாக்கப்பட்டு வருகின்றது. இந்த உத்திகளில் விஞ்ஞானத்தைக் கலை, இலக்கியம் ஊடாகப் பிரபல்யமாக்குவது பெரிதும் கைகொடுக்கிற ஒன்றாக இருப்பதாக அறியப்படவில்லை. ஆனால், உண்மையில் கலை, இலக்கியங்கள், விஞ்ஞானப் பிரபல்யப்படுத்தலில் மிகவும் பெரும் பங்காற்றக் கூடிய சக்தியைக் கொண்டிருக்கின்றன. பிள்ளை அழுத கண்ணீர் என்கிற நாடகமும், மக்கள் மத்தியில் விஞ்ஞானம் பிரபல்யப்படுத்தலில் காத்திரமான பங்கை வகிக்கக் கூடியதெனக் கூறலாம்.

Antaneo Gramsciயின் குட்டிக் கதையைத் தழுவி எழுதப்பட்ட குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'பாலுக்கு பாலகன்' நாடகமும், அந்தக் குட்டிக் கதையை அடிப்படையாகக் கொண்டு சி. ஜெய்சங்கர் அவர்களால் எழுதி, இயக்கப்பட்டு இலங்கையின் தமிழ் மொழி பேசும் பிரதேசங்களின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்ட நாடகமான 'பிள்ளை அழுத கண்ணீரும் இத்தகையன. 'பிள்ளை அழுத கண்ணீர்', சிறுவர்களைக் கொண்டு முதன் முதலில் யாழ்ப்பாணம் சென்.பொஸ்கோவில் 1995ல் மேடையேற்றப்பட்டது. 1996ல் மட்டக்களப்பில், பெரியவர்களைக் கொண்டு பூவரசு கலை இலக்கிய அமைப்பு ஏற்பாடு செய்த நாடகப் பட்டறையிலும், 1997ல் சிறுவர்களையும், வளர்ந்த மாணவர்களையும் கொண்டு திருகோணமலையில் பல பாடசாலைகளிலும் மேடையேற்றப்பட்டது. அங்கு பெரும்பாலான மாணவர்களால் கண்டுகளிக்கப்பட்டு, அவர்களால் பல்வேறு இடங்களிலும், பாடசாலைகளிலும் மரங்களும் நடப்பட்டது. இது அந்த நாடகத்திற்கும், அந்நாடகம் சொல்ல வந்த கருத்திற்கும் கிடைத்த பாரிய வெற்றியே என்று கூறலாம். இதே ஆண்டு, பொகவந்தலாவையிலும், பாடசாலை மாணவர்களைக் கொண்டு இந்நாடகம் மீண்டும் அரங்கேற்றப்பட்டது. மட்டக்களப்பில், ஓசானம், வந்தாறுமூலை கனிஷ்ட வித்தியாலயம் உட்பட பல இடங்களிலும் ஆறு தடவைகளுக்கு மேல் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரு தடவைகள் இந்நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் வந்தாறுமூலை கனிஷ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் நடித்திருந்தார்கள்.



விஞ்ஞானம் பரப்பலில் நாடகம் அதீத சக்தி வாய்ந்தது என்று தமிழில் உணரப்பட்டிருந்தும், பரவலான தாக்கமான இயக்கமாக அது முன்னெடுக்கப்படவில்லை என்றே கூறலாம். ஆனால், 1990களுக்கு முன்பும், பின்பும் இந்த வகையான தனித்த, உதிரிகளான முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் நிலவியிருக்கின்றன. அதற்கு உதாரணமாக, ம. நிலாந்தனினால் எழுதப்பட்டு, சி. ஜெய்சங்கரினால் இயக்கப்பட்டு, யாழ்ப்பாணம், இந்து மகளிர் கல்லூரி, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போன்ற இடங்களிலும், ப. ரகுவரனினால் இயக்கப்பட்டு, யாழ்ப்பாணம், ஹாட்லிக் கல்லூரி போன்ற இடங்களிலும் மேடையேற்றப்பட்ட, தவமிருந்து பெற்ற அரிய வரமான விஞ்ஞானத்தை அழிவுக்குப் பயன்படுத்தலை விமர்சிக்கின்றதும் விஞ்ஞான விடயங்களையும், பஸ்மாசுரன் ஐதிகத்தையும் இணைத்தும் எழுதப்பட்டதுமான 'நவீன பஸ்மாசுரன்' போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். துரதிருஷ்டவசமாக நாட்டில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை காரணமாகவும், அறிய வேண்டும் என்ற ஆவலின்மை காரணமாகவும் இந்த யாழ்ப்பாணத்து முயற்சிகள் பெரிதும் அறியப்படாத ஒன்றாக இருந்துவிட்டன எனலாம்.

வளமானதொரு சமூகம் உருவாக்கப்படுதலில் சிறுவர்களுக்கும், சிறுவர் அரங்கிற்கும் மிக முக்கியமானதொரு பங்குண்டு. சிறுவர்களது நடத்தைகளை முற்றுமுழுதாகத் தீர்மானிப்பவர்களாகப் பெற்றோர்களே விளங்குகின்ற எமது சமூகத்தில், சிறுவர்களை சுய ஆளுமைகளுடன் வளர்த்தெடுக்கும் களமாகச் சிறுவர் அரங்கு திகழக் கூடியது எனலாம். சமூக அக்கறை கொண்ட அரங்கவியலாளர்களது காத்திரமான முயற்சிகளில் தான் சிறுவர் அரங்கு உயிர்கொண்டு இயங்கும், வளரும். இந்த இயக்கத்தில் சிறுவர் அரங்கவியலாளர், சிறுவர் உளவியலாளர், சிறுவர் கல்வியியலாளர், விஞ்ஞானிகள் எனப் பங்கு கொண்டு இயங்கும் சூழல் வாய்க்கும் போது, அதனை ஒரு தாக்கமான இயக்கமாக முன்னெடுத்துப் போவதுடன், அதனைச் சமூக முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யவும் வைக்கலாம். சிறுவர் அரங்கில் காணப்படுகின்ற அழகியல் அம்சங்களுடன் திணிக்க வந்த சூழல், சுகாதாரம் போன்ற விஞ்ஞானக் கருத்துக்களைத் தேனுடன் மருந்து கொடுப்பதுபோல் கொடுத்து விடலாம்.

பிள்ளை அழுத கண்ணீர், பார்வையாளர்களில் தாக்கத்தை ஏற்படுத்தியதற்குக் காரணம், அது வெளிப்படுத்திய குழந்தைப் பிள்ளைப் பேச்சு, குழந்தைத் தனம், விளையாட்டியல்பு போன்ற அழகியல் அம்சங்களாகும். அந்நாடகத்தில், நாடகக் கதாபாத்திரங்களாக உலவிய எலி, சிறுமி, ஆடக்கா, வயலம்மா, குளத்தாத்தா, கொக்கு 01, கொக்கு 02, தவளை, காகம், சூரியன், மலை மாமா, மலை மாமி, கொத்தனார் போன்ற பாத்திரங்கள் The Sun as a Source of Energy (சூரியனே முதற் சக்தி முதல்) என்று பேசின. சக்தி வட்டத்தையும், சக்திப் பாய்ச்சலையும் கூறின: சூரியன் - புல் - ஆடு - மனிதன் என்று உணவுச் சங்கிலித் தொடர்பையும், போசணை மட்டங்களையும் கூறின. மண்ணரிப்பையும் விளங்கப்படுத்தின.

நாடகம், பார்வையாளர்களுடன் நேரடித் தொடர்பாடலை வைத்துள்ள ஒரு ஊடகமாகும். எனவே கட்புல, செவிப்புலத் தொடர்புகளின் தாக்கம் அதிகமாகும். மற்றைய ஊடகங்கள் ஏற்படுத்தும் என்பது கண்கூடு. எனவே, சூழலியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய கருக்களைக் கொண்டு அரங்குகள் மூலம் விஞ்ஞானம் பரப்புவது மிகவும் தாக்கமான ஒன்றாகவே இருக்கும். இதற்கு திருகோணமலையில் பல்வேறு இடங்களிலும், பிள்ளை அழுத கண்ணீர் முடிய மாணவர்களால் நடப்பட்ட மரங்களே நல்ல சாட்சிகளாகும். விஞ்ஞானம் பரப்பலின் இறுதி இலக்கும் இது தான். பரம்பப்பட்ட அறிவு பிரயோகிக்கப்படல் வேண்டும். அந்தப் பிரயோகமும், அதனால் கிடைக்கும் நன்மைகளுமே விஞ்ஞானம் பரம்பியதன் வெற்றி. பிள்ளை அழுத கண்ணீர் போன்ற நாடகங்கள், மூன்றாம் நிலை அரங்குகள் (Third Theatre) நோக்கி திசைப்படுத்தப்படலினால் கிடைக்கும் நன்மைகளும், பெறுதிகளும் மகத்தானதாகவே இருக்கும் என்பதே எனது கருத்து. இது நல்ல பரிசோதனை முயற்சியாகவும் இருக்கும்.

பிள்ளை அழுத கண்ணீர் முடிந்து வரும்போது, "மரத்தை வெட்டினால் மழை இல்லை" என்று மனதில் ஒரு உணர்வு ஆழமாகப் புகுந்து கொண்டு, அந்த நாடகம் வெற்றி பெற்றுவிட்டதை பறைசாற்றி விடுகின்றது. எனவே இறுதியாக விஞ்ஞானம் பரப்பலில், பிள்ளை அழுத கண்ணீர் போன்ற நாடகங்கள் தமிழில் ஒரு புதிய வரவாகும் அல்லது உத்தியாகும் என்றால் அது மிகையாகாது.

ஏ.எம்.றியாஸ் அஹமட்

---

## தமிழ்இனி 2000
## நமது நினைவுகளுக்கும் கனவுகளுக்கும் இடையே ஒரு சந்திப்புப் புள்ளி

தமிழ் - இனி 2000 உலகத் தமிழ் இலக்கிய அரங்கு உலக வரைபடத்தின் பெரும் பகுதியில் சிதறிக் கிடக்கும் தமிழ் வாழ்க்கை, இந்த நூற்றாண்டில் எண்ணற்ற புதிய முகங்களை அடைந்து விட்டது. நவீன யுகத்தின் பண்பாட்டு, அரசியல், பொருளியல், வரலாற்றுக் கேள்விகளால் தமிழ்ச் சமூகம் பல அதிர்வுகளையும் உடைவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

புதியதொரு நூற்றாண்டு துவங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்து சென்ற நூற்றாண்டில் நம்முடைய பயணங்களை மதிப்பிட்டுக் கொள்வது புதிய திசைகளை அடைவதற்கான ஒரு ஆயத்தமாகும். அந்த நோக்கில் உலகின் பல்வேறு பிரதேசங்களில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளும், அறிஞர்களும் சந்திக்கும் மாபெரும் நிகழ்வு தமிழ்-இனி 2000. தேசியம், திராவிடம், மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம் எனக் கோட்பாட்டு ரீதியாகவும், தமிழகம், ஈழம், சிங்கப்பூர், மலேஷியா, புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் ஐரோப்பா, கனடா எனப் பிரதேச ரீதியாகவும் ஏராளமான அடுக்குகளும் உடுபாவுகளும் கொண்ட தமிழின் படைப்பியக்கத்தை விரிவான மதிப்பீடுகளுக்கு உள்ளாக்குவதற்காக உலகத் தமிழ் இலக்கிய அரங்காகத் தமிழ்-இனி 2000, வருகிற செப்டெம்பரில் மூன்று நாட்கள் சென்னையில் கூடுகிறது.

தமிழகம், ஈழம், சிங்கப்பூர், மலேஷியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நண்பர்கள் இதற்கான விரிவான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றனர். தமிழில் படைப்பியக்கச் செயல்பாட்டில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இந்த முயற்சியில் பங்கேற்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டியவை தொடர்பாக நண்பர்கள் தங்கள் எண்ணங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**தமிழ்இனி 2000**
**நமது நினைவுகளுக்கும் கனவுகளுக்கும்**
**இடையே ஒரு சந்திப்புப் புள்ளி**

தமிழ்-இனி 2000 திட்ட முன்வரைவைக் கீழே தருகிறோம்

**தமிழ்–இனி 2000 விவாதத் தளங்கள்**

***இலக்கிய வடிவங்கள்:***

நாவல்,
சிறுகதை
கவிதை
நாடகமும் அரங்கியலும்

**இயக்கமும் இலக்கியமும்**

தேசிய இலக்கியம்
திராவிட இலக்கியம்
மார்க்சிய இலக்கியம்
பெண்ணிய இலக்கியம்
தலித்திய (பஞ்சமர்) இலக்கியம்

**விமர்சனம்**

மார்க்சிய விமர்சனம்
நவீனத்துவ விமர்சனம்
தலித்திய விமர்சனம்
புதிய விமர்சனப் போக்குகள்
பெண்ணிய விமர்சனம்

**பார்வைகள்**

தமிழ் இலக்கியத்தில் புதிய போக்குகள்
இலக்கியமும் இணையமும்

**புலம் பெயர்ந்த தமிழர் இலக்கியம்**

தமிழியல்: நேற்றும் இன்றும் நாளையும்

**பொது:**

வெகுசன இலக்கியம்
மொழி பெயர்ப்புத் துறை
குழந்தை இலக்கியம்

நண்பர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளிகள், தமிழ்ப் பத்திகையாளர்களின் ஆலோசனைகளை வேண்டி இந்தத் திட்ட முன்வரைவை முன் வைக்கிறோம். இலங்கையில் ஆலோசனைகளுக்கும், தொடர்புகளுக்கும்

***ஆசிரியர்***

***சரிநிகர், 19/4, 1/1, நாவல வீதி, நுகேகொடை***

**தமிழ்–இனி 2000**
**அமைப்புக் குழு.**

நன்றி - நூலகத்திட்டம்



## இசையின் தத்துவமும் அழகியலும்!



**இளையராஜா : இசையின் தத்துவமும் அழகியலும்**
**ஆசிரியர்: பிரேம் ரமேஷ்**
**வெளியீடு : செம்புலம்**
**50; ஐந்தாவது தெரு**
**அச்சுதன் நகர்**
**ஈக்காட்டுத் தாங்கல்**
**சென்னை 97**
**தொலைபேசி : 2346473**
**விலை : இந்திய ரூபா 40**

புரிந்துணர்வின் ஒத்திசைவில் தலைப்பட்ட செவ்வி - ஜுகல்பந்தியும், சுர பேதங்களும்

"இசையெனப்படுவது இயம்புங் காலை ஒத்துணர் ஒலியின் நீட்சிய தாகும்" - ப. சுந்தரேசனாரின் இசைத் தமிழ் நூற்பா.

"இசையில்லாமல் எந்தச் செயலும் இருப்பதில்லை. ஒவ்வொன்றிலும் ஒரு தாளம், இசை இருக்கிறது" இளையராஜா.

இளையராஜா இசையின் தத்துவமும், அழகியலும் - பின் நவீனத்துவக் கலைஞர்களும், விமர்சகர்களுமான பிரேம் - ரமேஷ் இரட்டையரின் இந்நூலில் அரிதான சில அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை விவரிக்கும் முன்பாக ஒரு 'பிளாஷ்பேக்'.. என் ஞாபக அடுக்குகளைத் துழாவி இதனை எழுதுவதனால், இதில் சில பதங்கள் மாறிக் கிடக்கலாம். ஆனால், தொனி மாறாது. 'இலஸ்ரேட்டட் வீக்லியில் வெளியான சுனில் எடுத்த பேட்டி எனக் கருதுகிறேன். விஷயம் இது தான்.

"இசையமைப்பாளர்கள் எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?"

"மக்களை எக்ஸ்பிளாய்ட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்"

"சரி நீங்கள்..."

'நான் மேக்சிமம் எக்ஸ்பிளாய்ட் பண்ணுகிறேன்"

"திரைப் பாடல்கள் இப்படி என்றால் வேறு என்ன தான் உங்கள் சாதனை?"

"அதை எனது பிற முயற்சிகளில் இனங்காணுங்கள்"

இதனைப் படித்தது முதல் இளையராஜா பேட்டிகளைத் தொடர்ந்து வாசித்து வருகின்றேன்.

இன்னொரு முறை அவரைப் பேட்டி எடுக்கப்போய், ஓரிரு கேள்விகளை எகத்தாளமாகக் கேட்கப் போய் அதிரடிப் பதில்களுக்குத் தாக்குப் பிடிக்காமல் பேட்டி எடுக்க முடியாமல் திரும்பி விட்டார் பாலகுமாரன். அது முதலாக, விடுதலையாகி நிற்கும் இந்த ஞானியின் முன்னே தான் நொறுங்கிச் சிதிலமானது வரை சினிமா பற்றிய தன் வரலாற்று நூலில் விவரிப்பார் அவர்.

இளையராஜாவின் நூலைப் போலவே, இந்நூலும் நமக்கு வாய்த்த அருங்கொடுப்பினை ஆகும். இளையராஜா Unique ஆக வீற்றிருக்கும் இடத்தினை இது எடுத்துக் காட்டுகின்றது. அவரை இருட்டடிக்க முனைந்த உள்ளார்ந்த அரசியலை இது இனங்காட்டுகின்றது. இளையராஜாவை முன்னிறுத்தி இசையின் மற்றும் 'இளையராஜாவின் தத்துவமும் அழகியலும்' பற்றிப் பேசுவதாகவும் அவருடனான உரையாடலை நிகழ்த்துவதாகவும் ஆன இரு பகுதிகளாக உள்ளது.

இது பிரக்ஞைபூர்வ கனவு என்ற நிலையை, இசையில் சிந்திப்பதையும் ஏனைய பிற கலை வடிவங்களின் போதாமைகளையும் சாத்தியமான எல்லைகளை மீறி, மிக மர்மமாகத் தந்திரமாகக் கடந்து செல்லும் இசையின் அற்புத ஆற்றல் பற்றியும் பேசுகின்றது. எதிர்மறைப் பயன்பாடுகளின்றி இசைச் சுதந்திரத்தினை அவாவி நிற்க வேண்டிய ஒன்றாகும் என நியாயமான கவலைகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும் வலியுறுத்துகின்றது.

ஒரு பொதுப் புத்தி நோக்கியான பார்வையில் ஒரு தன்னகங்காரம் மிக்கவராக முன்னிறுத்தப்படும் இளையராஜா என்கிற மகத்தான கலைஞனின் பெருமிதம் குறித்தும், இசை உலகில் அவர் வகிக்கும் பாத்திரம் குறித்தும் வித்தியாசமான அணுகுமுறையில் இனம் காட்டுகிறது. அப்பனிப் பாறையின் இதர பரிமாணங்களை அவரில் நான் பார்க்கத் தவறிய பக்கங்களை இது திறந்து விடுகிறது. இளையராஜாவின் இசை, திரைப்படத்தின் போதாமையை வெளிப்படுத்திப் பிம்பங்களாக நாம் பார்க்கும் பொருள்களின் அர்த்தத்தைக் கலைத்துப் போட்டு விடுவதைச் சித்திரிக்கின்றது. இந்நூல் தங்கர்பச்சான் குறிப்பிடுவதைப் போல திரை இசைப் பாடல் ஒன்றைக் கூடச் சுட்டாமல், அவரது காட்சி ரூபமாகும் ஒலிப்படிமங்களின் இசைப் பின்புலம் பற்றியும், அது திரை ஆக்கத்தின் கலாபூர்வ வெற்றிக்குக் களனாவதைக் காட்டுகின்றது.

நேர்முகம் என்றும் பேட்டி என்றும் நான் குறிப்பிடுவதனைச் 'செவ்வி' என பாவிப்பர் எழுத்தவர். தமது உரையாடலுக்கு ஊடாக அக்கலைஞனின் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தினை அகழ்ந்து முன் வைக்கும் - சகல ஹிருதயனாக ஒத்துணரக் காணும் ஆபூர்வமான 'செவ்வி தலைப்படல்' இதில் நேர்ந்துள்ளது. இது nothing but wind இசைக் கோலத்தின் உள்ளார்ந்த செய்தி இவர்களால் உணரப்பட்டுள்ளது குறித்து இளையராஜா மகிழ்ந்து சுட்டுவதன் மூலம் இதனை உணரலாம்.

இதனை இப்போதைக்கு இங்கேயே நிறுத்தி இனி நூலின் சில மௌனங்களையும் கலைத்துப் போடலாமா? இந்நூலாசிரியர்கள் இப்படி ஒரு நூலைத் திடீரென எழுதப்புகுவானேன் என இதற்கு உள்நோக்கம் கற்பிக்க முயல்வாரும் உண்டு. ஆனால், அப்படிப்படவில்லை எனக்கு. ஏனெனில் வெகுகால முன்பாகவே இவர்களுடன், நானும் இளையராஜாவின் இசை குறித்து மனங்கலந்து உரையாடியதுண்டு. எனது கேள்விகள் வேறு திசையில் எழுபவை.

"என்ன தான் ஆனாலும் நமது நாட்டுப்புற இசை, நாட்டுச் சுங்கடிப்புடவை அது கர்நாடக இசை என்கிற காஞ்சிப்பட்டிற்கு ஒருக்காலும் ஈடாகாது" என்ற கரிசக்காட்டு நாய்னா கி. ரா. அவர்களே அப்புறம் ராஜாவிடம் தாளங்கள் வலியுறுத்தும் வர்ண மெட்டுக்களை மட்டும் எப்படி அவரின் படைப்புச் சிகரங்களாக முடியும் என விளக்கலாமா? இளையராஜா எதிர்காலத்தில் உலகக் கவனிப்பைப் பெறுவதன் மூலம், புதிய இசை அறிவுத் தலைமுறை இனி உருவாக ஆலோசனை முன் வைக்கும் நூலாசிரியர்களே எந்த அடிப்படை இளையராஜாவிடம் மேனிலையாக்கப் போக்காகச் செயல்பட்டு, எவருடைய கவனிப்பைப் பெற ராஜா கோபுர நிர்மாண கைங்கர்யங்களுக்குத் துணை போக உந்து சக்தியானது? இது குறித்துத் தாங்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

ஒரு நல்ல இசை, மனதை மெழுகாக உருக்கிட வேண்டும். அதற்குள் புகுந்து வரும் போது நாம் நாமாக இல்லாமல் போக வேண்டும். "இளையராஜா உங்கள் நூலுக்கு ஊடாகப் புகுந்து வந்த போதும், நாம் நாமாக இல்லாமல் போகின்றோம்... என்பதனாலேயே' உங்கள் மௌனங்கள் குறித்தான இக்கேள்விகள் என் முன் எழலாயின என முன்வைத்து...

**வே. மு. பொதிய வெற்பன்**
**நன்றி: ஆறாம் திணை**

## கலை என்பது ஒரு நதியைப் போன்றது!

திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் இன்று தலைசிறந்த பரத நாட்டிய நடன மணிகளில் ஒருவர். இவர் தனது 3வது வயதில் லண்டனில் நடனம் ஆட ஆரம்பித்தார். ஆனால், சம்பிரதாயமாக இவர் பரத நாட்டியம் ஆட ஆரம்பித்தது தன்னுடைய பத்தாவது வயதில் தான். மணிப்புரி, கதக் போன்ற நடனங்களும் கற்றுக் கொண்ட இவர் தன்னுடைய ஆழமான புரிதலை பரத நாட்டியத்தில் இணைக்கத் தீர்மானித்தார். எனவே டி.ஏ.ராஜலட்சுமி என்னும் நடன ஆசிரியரிடம் பரதம் பயின்றார். இவரது 11ஆவது வயதில் கல்கத்தாவில் அரங்கேற்றம் ஆகியது.







சித்ரா விஸ்வேஸ்வரனுடைய நடனப் பயணம் பிறகு வழுவூரார் பாணியில் ராமையாப் பிள்ளையிடம் தொடர்ந்தது. பள்ளி நேரம் தவிர மீதி எல்லா நேரமும் நடனத்திலேயே கழித்துள்ளார். இவரை வழி நடத்தியதில் இவரின் பெற்றோருடைய பங்களிப்பும் பெரியது. அப்பா தைரியத்தையும், அம்மா நட்டியம் மற்றும் ஆத்மாவையும் வளர்த்ததாகக் கூறுகிறார். அன்றிலிருந்து இன்று வரை தன்னுடைய நடனத்திற்காகவே வாழ் நாளைச் செலவிட்டு வருகிறார் என்றால் அது மிகையல்ல.

நடனம் செழுமைப்படவும் அறிவு விசாலப்படவும் படிப்பு மிகவும் அவசியம் என்கின்றார். படிப்பு என்பது பள்ளிப்படிப்பு சார்பானது மட்டுமல்ல, பல இலக்கியங்களை அனுபவித்துத்தேடி படிக்க வேண்டும் என்கிறார். இலக்கியப் படிப்பு என்பது நமது மனத்தையும் அறிவையும் ஒரு சேர வளமாக்கும். ஆனால், தற்போதைய நிலையில் புத்தகம் படிப்பது என்பது குறைந்து வருவது குறித்தும் வருத்தம் தெரிவிக்கிறார்.

சித்ரா விஸ்வேஸ்வரன் வசதியற்ற பல குழந்தைகளுக்கும் ஆர்வம் மிக்க சிறுவர்களுக்கும் இலவசமாக கற்பிக்கிறார். மேலும் தனது நாட்டிய நாடகத்தில் தன்னுடைய மாணவிகளையே ஆட வைக்கிறார். பலர் அப்படியல்ல. நாட்டிய நாடகத்தின்போது 'ரெடிமேட்' நடன மணிகளை உபயோகப்படுத்திக் கொள்வார்கள். மேலும் நடனம் பயிலும் மாணவர்களுக்கு மொழி, நாட்டியம் பற்றிய நூலறிவு மிக அவசியம் எனக்கருதி சமஸ்கிருதம், தெலுங்கு என நாட்டியப் பாடல்களின் பொருளை சொல்லிக் கொடுக்கிறார். நடனக் கோட்பாடுகள் பற்றிய படிப்புக்கும் இவரிடம் நிறைய இடமுண்டு. இன்னமும் அதிகம் சாதிக்க வேண்டும் என்று கூறும் சித்ரா விஸ்வேஸ்வரன் நடனம் என் தவம் உயிர் எல்லாமே என்கிறார்.

அவருடன் ஒரு நேர்காணல்

**உங்கள் பரத நாட்டியத்தின் முதல் அங்கேற்றத்தை எப்படி உணர்ந்தீர்கள்?**

"உண்மையில் எனக்கு எதுவும் புதிதாகத் தெரியவில்லை. ஏனெனில், எனக்கு மேடைப் பயம் அதிகம். அது நீண்ட நாட்கள் தொடர்ந்து இருந்தது. குரு சொல்லித் தருவதை கிளிப்பிள்ளை மாதிரி திரும்ப மேடையில் சென்று ஆடிவிட்டு வருவேன். எனக்கு எப்போதும் கலையைவிட கலைஞன் சிறியவன் என்ற எண்ணம் உண்டு. அதே எண்ணம் தான் இன்னமும் இருக்கிறது. என்னுடைய குரு எனக்கு அழகாகச் சொல்லிக் கொடுத்தார். அதை நான் அப்படியே திரும்பச் செய்தேன். அவ்வளவே".

**உங்கள் நிகழ்ச்சிகளை எண்ணிக்கை அல்லது அதன் வளர்ச்சியைக் கொண்டு கணக்கிடுகிறீர்களா?**

"எண்ணிக்கை என்பது வெறும் எண்கள் மட்டும் தான். கலை என்பது அமைதி, சந்தோஷம் ஆத்ம வளர்ச்சி எல்லாவற்றையும் அளிக்கின்றது. எனவே ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு பயிற்சியும் கூட என்னை விசாலப்படுத்தத் தான் என்பது எனது எண்ணம்."

**நீங்கள் கற்றுக் கொண்ட ஆசிரியரின் நடன முறையில் இருந்து பரதத்தை மாற்றி உள்ளீர்களா அல்லது அதை அப்படியே பின்பற்றுகிறீர்களா? மாற்றம் என்றால் எந்த முறையில்?**

"சதிர் என்பது கோயில்களில் ஒரு சிறிய சதுரத்திற்குள் ஆடப்படுவதாக இருந்தது. அதனால், அதற்குள் கைகால் வீசி ஆடுவது என்பது குறைவு. இன்று எனது மேடைகள் மிகவும் அகலமானவை. எனவே என்னுடைய அசைவுகள், விலாசமானவையாக அமைந்திருக்கும். தனி நடனமாக நான் ஆடும் போது அந்த அரங்கம் முழுவதையுமாக உபயோகித்து ஆடி எனது நாட்டியத்தால் நான் நிரப்ப வேண்டும். மேலும் கலை என்பது ஒரு நதியைப்போல. இன்னமும் சொன்னால் கங்கையைப் போல. அதிலிருந்து பல கிளைகள் பிரியும். அதில் பல கிளைகள் கூடும். ஆனாலும் அது ஓடிக் கொண்டே இருக்கும். அதுபோலத் தான் எல்லாக் கலையும்.

உடை விஷயத்தில் நான் சில மாற்றங்கள் செய்தேன். ஜரிகை அதிகம் இல்லாத நூல் எம்பிராய்டரி சேலைகளைக் கூட எடுத்துக் கொண்டேன். அலங்காரத்தில் நெற்றிச் சுட்டி மட்டும் வைத்துத்தான் நான் ஆடுவேன். தலையில் ஏராளமான ஆபரணங்களை அதிகமாக அணிந்து கொள்வதால் முகத்தை மறைத்து விடுகிறது. எனவே பாவம் தெளிவாக விளங்க நான் ஒற்றை நெற்றிச்சுட்டி மட்டும்போதும் என்று எண்ணினேன். சில நாட்டிய நாடகங்களுக்கு வெறும் பருத்தி உடைகள் மட்டும் கூட அணிந்திருக்கிறோம். அலங்காரம் அதிகமானால் பார்வையாளர்கள் கவனத்தை நடனத்தை விட நடனம் ஆடுபவரின் பால் ஈர்ப்பதாக எனக்குத் தோன்றும்."

**உங்கள் நடனத்தில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது?**

"அவை எல்லாமே காலத்தால் மாறுபடுகிறது. சிறு வயதில் ஜதி, தீர்மானம் அதன் கணக்கு அதைத் தளத்தில் முடிப்பது போன்றவை மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதன்பின் மனம் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டது. ஷேக்ஸ்பியரின் கவிதைகள் போல மேடையில் வெறுமனே நிற்பது என்பது கூட ஒரு நிலையைச் சொல்ல வேண்டும். உடல் முழுவதும் மொழியை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வந்தது. பொதுவாக வர்ணம் செய்வது எனக்குப் பிடித்தமானது. அதில் நிருத்தத்திற்கும் பாவத்திற்கும் என்று எல்லாவற்றிற்கும் இடம் இருக்கிறது. ஆடுபவரின் திறமையை ஒரு வர்ணத்தின் மூலம் முழுதாகக் கணக்கிடும்படி அமையும்".


**நாட்டிய நாடகம். தனி நபர் நடனம் இரண்டில் எது உயர்ந்ததென்று கருதுகின்றீர்கள்?**

"இரண்டும் இரண்டு வகையானவை. தனி நபர் நடனத்தில் எனக்கிசைந்த பக்க வாத்தியக்காரர்களால் மேடையில் கூட என்னுடைய மனோதர்மத்தை உபயோகித்து ஆடிவிட முடியும். ஆனால், நாட்டிய நாடகம் அநேகர் சம்பந்தப்பட்டது. அதிலும் ஒரு வகை மகிழ்ச்சி உள்ளது. சிரமம் அதிகம் உள்ளது. எல்லோரையும் ஒரு விசையில் கட்டிக் கொண்டு செல்லும் பாரம் என் மீது விழும். ஆனால், என்னுடைய மாணாக்கர்களின் எண்ணச்சுதந்திரத்தை நான் என்றும் தடை செய்ய மாட்டேன். நிற்கும் நிலை மற்றும் சிற்சில கோப்பு செயல்களில் மட்டுமே கட்டுப்பாடு உண்டு. நிற்பது நடப்பது சில தனியாகச் செய்யும் நடனம் ஆகியவற்றில் ஆடுபவருக்கு முழுச்சுதந்திரம் எப்போதும் உண்டு"

**நடனத்தின் வித்தியாசமான முயற்சிகள் பற்றி...?**

"'ஸ்நேகா' என்ற நாட்டிய நாடகத்தைச் சொல்லலாம். மேலும் பல நாட்டிய நாடகங்கள் இருந்தாலும் இதில் இன்றைய சமூகப் பிரச்சினை பற்றிக் கூறியுள்ளேன். கான்சர் நோயாளியைப் பற்றியது இது. இந்த நோயாளியின் கால் வெட்டி எடுக்கப்படுகிறது. லேசர் சிகிச்சை அளிக்கப்படுகிறது போன்ற எல்லாவற்றையும் நடனத்தின் மூலம் சொன்னேன். நாட்டியத்தின் முடிவை கான்சர் நோயாளியின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் விதமாக முடித்திருந்தேன். மேலும் லேசர் சிகிச்சை என்பதை மேடையில் காட்ட சக்தி, கதிர்கள் எனக்காட்டும் முத்திரைகளை இணைத்து அபிநயம் செய்தேன். எல்லோராலும் பாராட்டப்பட்டது. வெறும் பருத்தி ஆடைகளும் மிகக் குறைந்த அலங்காரமுமாக அந்த நிகழ்ச்சியை

⇨20



# நடிகர்களிடம் சமூகப் பிரக்ஞையை எதிர்பார்ப்பது தவறா?

மேர்வின் மகேசன், விஸ்வநாதன் ஆகிய இருவரும் "உதுறு கற சட்டண"(வட பகுதிப் போராட்டம்) எனும் தொலைக்காட்சி நாடகத்தில் பிரபல பாத்திரங்களை ஏற்று நடித்தார்கள். இதையிட்டு ஒரு பேட்டியும் தொலைக் காட்சியில் பின்னர் வெளியாகி இருந்தது. இதையிட்டு எமது கவலையையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு தொடர்பு சாதனத்ினூடாக, ஒரு நிகழ்ச்சியை வெளிப்படுத்துவதானாலும் சரி, அது சமூக நோக்குள்ள தாக இருக்க வேண்டியது முக்கிய அம்சமாகும். அத்தோடு, அவ்விடயத் திற்கு ஒரு இலக்கும், கருத்தும் இருக்க வேண்டியதும் அவசியம். இலக்கியம் என்றாலே இலக்கினை இயம்புவது எனப் பொருள்படும். அந்த நாடகத்தைத் தயாரித்தவருக்கு ஒரு இலக்கு இருந்தது புலனாகியது. அதாவது, தமிழர் போராட்டத்தையும், போராளிகளையும் மாசுபடுத்துவதன் மூலம், தமிழர் மீது இனவாதத்தையும், அடக்குமுறையையும் தொடர்ந்து பிரயோகித்துத் தமது இன நலனைப் பேணுவதும், தமிழரை அடிமைகளாக வைத்துக் கொள்வதுமாகும். இதனைப் பேணக் கூடிய விதத்தில், சிங்கள மக்களை மூளைச் சலவை செய்வதும், தமிழர்களை ஏமாளிகளாக்குவது-மாகும். இந்த நாடகத்தை எழுதிய கதாசிரியரும், தனது ஏழ்மையை நீக்கிக் கொள்ள, எந்த எழுத்-தாக்கத்தையும் செய்யும் விபச்-சாரனுக்கு ஒத்தவராக இருந்ததையும் கண்டோம். இந்த நாடகத்தை எழுதி-யதன் மூலம் அவர் சமாதானத்தைக் கொண்டு வருவார் என்பதற்கு எந்த ஆதாரமான கருத்தும் இல்லை. மாறாக, அவர் யதார்த்தத்தை மறை-த்து, இனவாத அரசின் கபடங்களை மூடி மறைக்கத் துணை போனதோடு, தனது இனவாதத்தை வெளிக் காட்டியும் உள்ளார்.

அவரிடம், தமிழ் மக்களாகிய நாம் கேட்கக் கூடிய கேள்வி என்னவெனில், தாங்கள் எழுதிய நாடக சம்பவமேதும், அதுவும் போராளிகள் பெண்களோடு பாலியல் ரீதியாக முறையீனமாக நடந்த சம்பவத்தை எங்காவது கேட்டுள்-ளாரா? அறிந்துள்ளாரா? அவ்வா-றெனில், எங்கு? எப்போது? நடை-பெற்றது என்பதை அவர் தெளிவு-படுத்த வேண்டும் என்பதேயாகும். ஆனால், இராணுவம் அவ்வாறு நடந்து கொண்ட பல சம்பவங்களை எமக்குக் கூறமுடியும். கிருஷாந்தி பாலியல் வல்லுறவு, கோணேஸ்வரி பாலியல் வல்லுறவு, பொன்னாலையில் ஆசி-ரியர் மீதான வல்லுறவு, மன்னாரில் ஜூடா கமலிட்டா மீது வல்லுறவு, புங்குடுதீவு சாரதாம்பாள் வல்லுறவு என நூற்றுக்கணக்கான சம்பவங்-களைப் பட்டியல் படுத்த முடியும். தேவையெனில், கடந்த 16 வருட காலப் பத்திரிகைகளை வாசித்தால் விளங்கும். இவற்றை எல்லாம் மறைத்து, இராணுவத்தை நல்ல பிள்ளைகளாகக் காட்டச் செய்யும் முயற்சியில் தமிழர் போராட்டத்தை மாசுபடுத்த வேண்டியதில்லை என்பதேயாகும்.

நடிக மணிகளுக்கு நாம் எழுதிக்கொள்வதாவது,

தாங்கள் இருவரும் தமிழர்கள் என்பதை நாம் அறிவோம். எஸ். விஸ்வநாதன் அவர்கள் 1983 கலவ-ரத்தின் போது, விரட்டப்பட்டு வந்து யாழ்ப்பாணத்தில், நல்லூரில் அகதியாக வாழ்ந்ததையும் அறி-வோம்.

தாங்கள் இந்த நாடகத்தின் மூலம் தமிழர்களுக்கு எடுத்தியம்-பியது என்ன? தமிழர் போராட்டம், ஒரு பயங்கரவாதம் என்பதையா? போராளிகள் காமப் பிசாசுகள் என்பதையா? இவற்றை ரூபவாஹி-னியும், வானொலியும் திருப்பித் திருப்பிச் சொல்வதன் மூலம் அவை உண்மைகளாகி விடுமா? அல்லது தமிழர்களோ அல்லது சிங்களச் சாமான்யரோ, இவற்றை உண்மை-யென ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகின்றீர்களா?

ஒரு சிங்கள, இனவாதி அவ்வாறு நடிப்பது வேறு விடயம். ஆனால், தமிழர்களாகிய தாங்கள் இருவரும் நடிப்பது வேறு. நீங்கள் கூறக் கூடும், விஸ்வநாதன் வேறு, நாடகப் பாத்திரம் வேறு என்று. அவ்வாறே, மேர்வின் மகேசன் வேறு, நாடகப் பாத்திரம் வேறு என்று. ஆனால், ஒரு நடிகனிடம் சமூகப் பிரக்ஞை இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறா?

மேர்வின் மகேசன் அவர்கள், யாழ்ப்பாணம், சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் எனப் பெருமைப்பட்டுக்கொண்டார்- பாவம்.

"ஈன்ற பொழுதின்
பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

-என்பது திருக்குறள்.

தங்கள், பாடசாலையின் அதிபரும், ஆசிரியரும் இன்று இதே தங்கள் இராணுவ நிலைமைகளின் கீழ் அல்லல்படும் போது அவர்கள் உங்கள் நாடகத்தின் மூலம், நடிப்பின் மூலம் பெருமைப்படுகிறார்கள் எனக் கொள்-வீர்களா? அவர்கள், தமது விடுதலைக் காகத் தாங்களே போராடும் போது, நீங்களோ நாடகம், என்ற பெயரில் அவர்களுக்கு எதிராக அல்லவா செயற்படுகிறீர்கள்? ஏனையவர்கள், இவ்வாறான பாத்திரங்களை ஏற்காமல் விடுவது நடிப்புத் திறமையீனம் அல்ல. அது மனச்-சாட்சிக்கு விரோதம் என்பதா-லல்லவா?

**இ. இளங்குமாரன், மல்லாவி.**

## கழுதைகளின் கதை !

186வது இதழில் அறபாத் அவர்களின் 'கழுதைகளின் விஜயம்' படித்தேன். கதை நன்றாக வந்திருக்கிறது.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன மூத்த கழுதை - சிங்கத்தின் முகத்தை இரவலாகப் பெற்று மேடையேறிய போது... ஊரே மகிழ்ச்சி ஆரவாரத்தில் திக்குமுக்காடியது.

'இன்னம் பத்தாண்டு காலத்தில் நிரந்தரச் சமாதானம்.. நாமே அதன் முக்கிய பங்காளிகள்" என்று அழகுக் கழுதை ஆரூடம் வேறு கூறியது.

இதையெல்லாம் பார்க்க அறபாத் கொடுத்து வைக்கவில்லை. எனக்கொரு வேதனை... எங்கள் எல்லோரையும் தான் (மாண்பு மிகு மக்கள்) அறபாத் கழுதைகளாக்கி விட்டார்.

**எஸ். எல். எம். ஹனீபா. ஓட்டமாவடி.**

*மணிகளை*

# பொறுக்க வேண்டியது வாசகர் கடமை

சரிநிகர் டிசெ. 21 - 12, 2000 இதழில், நான் முன்னர் எழுதியவற்றிற்கு, எதிராகச் சிவகணேசன் அவர்கள் மூன்று குறிப்புக்களை முன்வைத்துள்ளார். அதற்கு விளக்கம் தருவதற்கு முன் ஒரு முன்னுரை:-

அறிவுத் தளத்தில் இருந்து வாதா-டும் போது பல இகழ்ச்சிகரமான, நையாண்டி வார்த்தைகளைப் பயன்-படுத்தியுள்ளார் சிவகணேசன். எனது கருத்துக்களைத் தாக்குமுகமாக, என்னைத் தனிப்பட்ட முறையில் தாக்-கியுள்ளார். இப்படிப் பலர் தாக்குவதும், சரிநிகர் அதனைப் பிரசுரிப்பதும், வழக்கமாகிக் கொண்டு வருகின்றது. இதற்குக் கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்று விளக்கமும் இலேசாகக் கொடுத்து விடலாம். சுதந்திரம், உரிமை போன்ற தத்துவங்கள் மிகவும் மேலா-னவை. மனித நேயம் செழித்தோங்க, கொடூரங்களைக் கொடுமைகளைத் தட்டிக் கேட்க, மாற்றுக் கருத்தை முன்வைக்க, பல கருத்துக்களுக்குத் தளம் வைக்க என்று பல உன்னதக் கடமைகளை அடக்கித் தான், அந்தச் சுதந்திர உரிமை ஃகையாளப்பட வேண்டும். இந்த உரிமை, பண்புடனும், நல்லெண்ணத்துடனும் கையாளப்படவேண்டும் என்பது இதன் அடிப்படை நோக்கம். இவ்வுரிமைகளை வழங்கினால் அது காலக் கிரமத்தில் செம்மையுறும். அதைப் பிரயோகித்துப் பழக்கத்தில் கொண்டு வந்தால், அதை எப்படிப் பிரயோகிப்பது, எப்படிப் பிரயோகித்தால் அதனால் மானுடம் பயன்பெறும் என்பன போன்ற விடயங்களைத் தாங்களாகவே மக்கள் தெரிந்து கொள்வார்கள் என்ற ஒரு அடிப்படை எதிர்பார்ப்பு இந்தச் சுதந்திர உரிமைகளில் உண்டு. அந்தக் காலம் கிட்டும் வரை நாம் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். இந்த ரீதியில் என்னை நான் சமாதானப்படுத்தினாலும், சிவ-கணேசனின் வார்த்தைகளின் கொடூரம் என்னைத் தாக்கத் தான் செய்தது. "தன்னுடைய இருப்பிடத்தைக் கவசமாக, வலுவாகப் பயன்படுத்தி உதிர்க்கும், மணிமொழி... எனக்கு ஏன் கவசம் தேவை? என்னைத் தாக்க உருக் குலைக்கக் கொலை செய்ய யாரும் குறி வைக்கிறார்களா? கவசம் என்பது போர்க் காலக் கருத்தியலின் பாற்பட்ட ஒரு சொல். மணிமொழிகள் என்று அவர் கூறும் நையாண்டியும் என்னை இழிவுபடுத்தத் தான். இதில் அவருக்கு ஓர் சந்தோஷம் போலும்.

இயக்கம், நிறுவனம் என்று நான் பிரித்துக் கூறியவற்றையும், அதன் தொடர் நியாயங்களையும் அவர் திரித்துக் கூறியுள்ளார். நான் கூறியவற்றில் விளக்கம் போதாமையிருந்ததால் இந்த மயக்கம் என்றால் என் விளக்கத்தை விரிவுபடுத்துகிறேன்.

அண்மையில், இரு பெண் நிலைவாத ஆய்வறிவாளர் இடையில் ஒரு விவாதம் ஏற்பட்டது. அதில் ஒருவர், இலங்கையில் பெண்கள் இயக்கம் என்று ஒன்றுமில்லை என்று குறிப்பிட்டார். அதற்கு மற்றையவர் காரணம் கேட்க, முன்னையவர் வைத்த அக்காரணங்களை அப்படியே முன்வைக்கிறேன். பெண்கள் உரிமைச் சங்கங்கள் தோன்றிய காலந்தொட்டு அது இப்பெண்களைச் சார்ந்ததாகவும், சில உரிமைகளைக் கோரும் ஸ்தாபனங்களாகவும் இருந்து பின் அவை மறைய, ஏனைய பல ஸ்தாப-னங்கள், ஏனைய பல உரிமைகளை முன்வைத்துத் தங்களை இயக்கு-கிறார்களே ஒழிய, இலங்கைப் பெண்கள் அனைவரையுமோ அல்லது பெரும்-பான்மைப் பெண்களையோ உள்ளடக்கிக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, ஒரு பாரிய இயக்கமாக அது முனைப்-பெடுக்கவில்லை. இந்தச் சிறு சிறு குழுக்கள் ஒன்றிணையவில்லை. இந்தியாவில், தற்போதிருக்கும் பெண்கள் இயக்கத்தில் (அங்கே பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உண்டு.) ஒரு நிகழ்ச்சியையோ, கோரிக்கையையோ முன்வைத்துப் பல நூறு பெண்கள் இணைவார்கள். இதற்கு உதாரணமாகத் தான் நான் கிருஷாந்தி பாலியல் வல்லுறவு எதிர்ப்பியக்கத்தில், தமிழ்ப் பெண்களோ, இலங்கைப் பெண்-களோ சேரவில்லை என்பதையும் சொல்லியிருந்தேன். இதே போலத் தான், சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பைக் (Womens Coalition for Peace) கட்டி எழுப்புவதற்கும் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அந்த இயக்க மனோ நிலை, இயக்க உணர்ச்சி, ஒருமித்த அந்தச் செயற்பாடு இலங்கைப் பெண்களிடம், இன்னமும் தோன்றவில்லை என்பதனை ஒரு விமர்சனமாக நான் ஏற்றுக் கொள்-கிறேன். இதற்கு அவரவர்களின், அரசியல் கொள்கைகளும், நிலைப்பாடுகளும் ஒரு காரணமாக இருக்கலாம். அண்மையில், திருகோணமலையில் ஒன்று கூடிய பெண்நிலைவாதிகள் கூட, எப்பொழுதும் நாம் இப்படி ஒன்று கூடினோம், தீவிர விவாதங்களில் ஈடுபட்டோம், எப்படி எங்களது பிரச்சினைகளை உணர்ச்சி பூர்வமாய்ப் பங்கிட்டுக் கொண்டோம் என்று அங்கலாய்த்தோம். ஆனால், இயக்கபூர்வமாகச் செயற்படாத நாம், சிறு சிறு நிறுவனங்களில் இருந்து பல செயற்-திட்டங்களை நிறைவேற்றுகிறோம். இதைத் தான் நான் நிறுவனம், இயக்கம் என்று பிரித்துக் கூறினேன். இதை நான் ஓர் குறைபாடாக முன்வைத்தேனே-யன்றி, நிறுவனக் கவசம் தேடி அல்ல. தற்கால நிலைமையையே நான் விளக்கினேன். எனது வசதிக்காக, நான் இயக்கத்தையும், நிறுவனத்தையும் பிரிக்கிறேன் என்று சிவகணேசன் கூறுவது எனக்கு விளங்கவில்லை. எனக்கு என்ன வசதியீனமுண்டென்-றெண்ணி அவர், நிறுவனம் எனக்கு வசதி தந்துள்ளது என்று கூறுகிறார்? நிறுவனங்களில் இருந்து நான் பிரிந்தாலும், எனது வசதிகளும், பிழைப்புக்கும் ஏதும் பங்கம் வந்துவிடாதே. ஒரு வேளை அவை கூடலாம், பெருகலாம்.

அடுத்ததாக, அவரது முகமூடிக் கதை. முகமூடி அணிவதற்கு எனது கொள்கை முகம் அப்படி ஒன்றும் விகார-மானதல்ல. நான் கூறிய சந்தர்ப்பமும், கொள்கைகளும் வேறு. அவர் விளங்கிக் கொண்ட முறை வேறு. விடயங்களைத் திரித்துக் கூறிய சிவகணேசனுக்கு ஏன் இப்படி ஒரு திருப்தி? போர்க் காலங்களில் ஏற்படும் சந்தர்ப்பம் வேறு, ஏனைய கால நிகழ்ச் சந்தர்ப்பங்கள் வேறு. கடந்து செல்ல முடியாத, துப்பாக்கிச் சூட்டுக்குள் அகப்பட்ட எம் நிறுவனப் பெண், தான் தொடர்ந்து செல்ல முடியாமல், திரும்பி வர வேண்டிய "சந்தர்ப்பம்" நிகழ்ந்தது. மனோநிலை பாதிக்கப்பட்ட பெண்க-ளுக்குச் (போரினாலும், வேறு பல அல்லல்களினாலும்) சிகிச்சையளிக்க மனோதத்துவம் தெரிந்த (Clinical Psycholo-gists) இல்லாத சந்தர்ப்பங்களில், ஆலோ-சனை (Counsellors) கூறி, அவர்களைத் திடப்படுத்துவோரை நாம் அணுகுவோம். இப்படியான பல இடுக்கண்களை உள்ளடக்கிய சந்தர்ப்பங்களில், நாம் சந்தர்ப்பம் கருதி ஒரு தேவை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத் தேர்வுகளுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இவை எங்களது சக்திகளுக்கு அப்பாற்பட்டன. இதைத்தான் நான் "சந்தர்ப்பம் கருதி" என்று கூறினேன். இந்த நெருக்கடிச் சந்தர்ப்பங்களால், எங்களது சக்தி விரயமாகிறது. பல செயற்திட்டங்கள் தாமதமாக நிறைவேறு-கின்றன. இதைத் தான் விளக்க முற்பட்டேன்.

எனது குறும்பார்வை, அதிகாரத்துள் உள்ள அதிகாரத்துக்கு ஆலவட்டம் பிடிக்கிற எனது மோகத்தைக் காட்டு-கிறதா? முதலாவதாக, எனது குறும்-பார்வை பற்றி Front line, India Today, Commualism Combat, Economic and Political Weekly என்று பல பத்திரிகைகளை ஒன்றாக்கிச் சில சான்றுகளைக் காட்டு-வதால் மட்டும், அவை ஒரே கருத்-தியலைப் பிரதிபலிக்கிறது என்று ஒருவர் கூறுவதாக, ஒரு கருத்தை வைப்பதும் ஒரு குறும்பார்வையே. எம் கொள்கைக்கு ஏற்புடைத்து இல்லாத பத்திரிகைகளில் கூடச் சில அருமையான கட்டுரைகள் வரலாம். சில நல்ல பத்திரிகைகள் கூடப் பத்திரிகைச் சுதந்திரம் பேணுவதாகக் கூறிச் சில அபத்தங்களைச் சில சமயங்களில் பிரசுரிக்கலாம். EPW கூடப் பல வாதப், பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. சில விடயங்களை Frontline, India Today இன் மூலமும் நாம் அறியலாம். அதை மேற்கோள் காட்டலாம். அதற்காக, அப்பத்திரிகைகளில் ஒட்டுமொத்தமான கொள்கைகள் அத்தனையையும், நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பதல்ல. விடயங்களைப் பொறுக்கி எடுக்க வேண்டியது, வாசகர்களின் திறமையைப் பொறுத்ததேயன்றிப் பத்திரிகை ஆசிரிய-ருடைய கொள்கையைப் பொறுத்ததல்ல. குப்பைகளைத் தள்ளிச் சில மணிகளையும் பொறுக்க முடியும். இதோ ஓர் உதாரணம்.

இந்துத்துவ எதிர்ப்பிற்கு, ஓர் உதாரணமாக Frontline இலேயே ஒரு பகுதி விஸ் கொன்சின் பல்கலைக்கழகத் தென்னாசிய வரலாற்றுத் துறையைச் சேர்ந்த (South Asian History of the University of Wisconsin in Madison) சந்திரா மல்லம்பள்ளி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

பாபர் மஸ்ஜிட் இடிக்கப்பட்ட மாதங்களைத் தொடர்ந்து வெளியிடப்-பட்ட, Frontline இதழ்களில், இந்துத் தத்துவதைப் பற்றிய அதி உன்னத விமர்சனங்கள், மார்க்சிச எழுத்தா-ளர்களால் முன்வைக்கப்பட்டன.

01. Marxist writers such as Sumit Sarkar, Aijaz Ahmad and others were unwavering in their appeal to India's Secular Foundations and in their opposition to 'Hindu Facism'.

02. The issues of Frontline magazine published in the months following the Babri Masjid demolition contain excellent analysis of Hindutva by Marxist writers.

(South Asia Research Vol.19 - No 2, Autumn 1999.)

இந்திய அதிகாரத்திற்கு ஆலவட்டம் பிடிக்கிற பத்திரிகைகளை நான் ஏன் மோகிக்க வேண்டும். இந்த "மோகம்", எனக்கு ஏதேனும் அரசியல் இலாபம் பெற்றுத் தருமோ? வாக்குச் சுதந்திரம் உண்டே ! எந்த வார்த்தைகளையும் பிரயோகிக்கலாம்.

ரூபவாஹினி பற்றி அவர் குறிப்பிடும் "அவல நகைச்சுவை" பற்றியது அடுத்தது. திரும்பவும் கூறுகிறேன், தீவிரமாகச் செயற்பட்டேன். எந்த விடயத்திலும் சமரசம் செய்யாமல், செயற்பட்டேன். அந்த மட்டத்தில் திருப்தியுற்றேன். - எனது தீவிர செயற்பாட்டு முயற்சியில் - ஆனால், அதன் பலன் நிகழ்ச்சிகளில் தெரியவில்லை என்பது சிவகணேசனின் மதிப்பும், கூற்றும் என்றால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இறுதியில், அவர் கூறிய பிழைப்பு வாதம் பற்றியது எனக்குப் பொருந்தாது. (ஏனெனில், பெண்நிலைவாதத்தையும், செயற்பாட்டுவாதத்தையும் வைத்துத் தான் பிழைப்பு நடாத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எனக்கில்லை) ஆகையால் நான் கவனத்தில் எடுக்கவில்லை. இது ஒரு சுவையான நகைச்சுவையாக எனக்கும், வேறு பலருக்கும் தோன்றலாம்.

***பிற்குறிப்பு:***

சிவகணேசனின் இந்தக் குறிப்புக்-களை வாசித்தோர் பலர், என்னைத் தொலைபேசி மூலமும், நேரிலும் கண்டு 'துக்கம்' விசாரித்து விசனப்பட்டார்கள். இதற்கு நீங்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை, சொல்லத் தேவை-யில்லை, படுவிகாரமானது. குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுச் "சும்மா" இருங்கோ என்றும், வேறு சிலர் - இதற்குக் கட்டாயம் மறுப்புத் தெரிவிக்க வேண்டும். எப்படி உங்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கியுள்ளார். இப்படிப் பல தேற்றல்கள். சும்மா இருக்கும் பக்குவம் எனக்கிருந்-தாலும், வாசகர் பலருக்கு சிவகணேசனின் சில கருத்துக்கள் பிழையான அறிவு மயக்கங்களைத் தந்துவிடக் கூடாதே என்பதற்காகவும், சிவகணேசன் எழுதிய சில கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகவும் இதை நான் எழுதுகிறேன்.

***செல்வி திருச்சந்திரன்***
***கொழும்பு 03.***

## தவறு

இதழ் 186, பக்கம் 13ல் வெளி-யான "கைலாசபதி : முழுமையும் பகுதி-யும்." என்ற சிவசேகரம் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை, கைலாசபதியின் நினைவு நாளை ஒட்டிக் 'கைலாசபதி பன்முகப் பார்வைகள்' என்ற நூலி-லிருந்து மீள்பிரசுரம் செய்யப்பட்டது. இக்குறிப்பு விடுபட்டமைக்காக வருந்துகின்றோம்.

**ஆ-ர்.**

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## ஒரே வழி!

இருபதாம நூற்றாண்டின் கடைசிப்படியில் நின்று கொண்டிருக்கும் மனித குலம், தனது கடந்த கால வரலாற்றுச் சாதனைகள் குறித்துப் பெருமிதமும், வரப்போகும் புதிய நூற்றாண்டில் சாதிக்க உள்ளவை குறித்த பரபரப்பும் கொண்டதாக இந்தப் புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாபெரும் கைத்தொழில் புரட்சியையும் இயந்திரங்களின் பிரமாண்டமான வளர்ச்சியையும் கண்ட மனித குலம் இன்று இலத்திரனியல் துறையில் வியத்தகு சாதனைகளுடன் புதிய நூற்றாண்டின் புகுவாயிலில் வந்து நிற்கிறது.

இந்த நியாயமான பெருமிதத்தை உலகம் பூராவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் நாம், இலங்கை வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்காலம் குறித்த அச்சத்துடனும் நம்பிக்கையீனத்துடனும் புதிய ஆண்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். புத்தாயிரமாம் ஆண்டு தொடங்குவதற்கு பன்னிரண்டே நாட்கள் இருக்கையில் கொழும்பில் நடைபெற்ற தற்கொலைக்கொலையாளி ஒருவரின் குண்டுத் தாக்குதல் அரசு தரப்பில் சகல பாதுகாப்புக்களையும் மீறி பலத்த உயிரிழப்புக்களை ஏற்படுத்தியது. ஜனாதிபதியும் நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான சந்திரிகா பண்டாரநாயக்காவினுடைய ஒரு கண்ணில் பார்வையையும் அத்தாக்குதல் பறித்துச் சென்றது.

மோசடிகள் நிறைந்த, வன்முறைகளும் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் வேண்டியளவு பாவிக்கப்பட்ட ஒரு ஜனாதிபதித் தேர்தலின் முடிவுடன் கடந்த வருடம் நிறைவு பெற்றது. புதிய வருடப்பிறப்பிற்கான நள்ளிரவுப் பூசையை நடாத்தத் தயாராகிக் கொண்டிருந்த போது இந்த வருடத்திற்கான முதலாவது படுகொலை வவுனியா அந்தோனியார் தேவாலயத்தின் முன் நிகழ்ந்தது. அதுவும், அந்தப் பலியும் தொடர்பூடகவியலாளர் அன்ரனி மரியதாஸ் அவர்களது பலியாக அமைந்தது. பிறக்கப் போகும் ஆண்டு தொடர்பூடகவியலாளர்களுக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் ஒரு அச்சுறுத்தலாக அமையப் போகின்றது என்பதற்கான ஒரு சமிக்ஞையாக இந்த அநியாயமான மிகுந்த கண்டனத்திற்குரிய படுகொலை நடந்து முடிந்தது. பெருந்திரளான மக்கள் நள்ளிரவுப் பூசையில் துதிபாடி புத்தாண்டை வரவேற்க தயாராகிக் கொண்டிருந்த வேளையில் கருத்துச் சுதந்திரத்தைச் சகிக்காத கொலையாளிகளின் துப்பாக்கிக் குண்டுகள் மரியதாஸின் உடலைத் துளைத்தெடுத்தன.

புத்தாண்டைக் கொண்டாடத் தொடங்கிய ஆரவாரங்கள் அடங்கு முன்பாகவே மேன்மை தங்கிய ஜனாதிபதியின் ஊடகவியலாளர் மீதான தாக்குதல் ஒலி, ஒளி அலைகளினூடாகக் காற்றில் மிதந்து வந்தது. கருத்துச் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் பாரிய அச்சுறுத்தலைத் தருவதாகவும் தவறான வழியில் வன்முறையாளர்களைத் தூண்டிவிடக்கூடிய தன்மையைக் கொண்டதாகவும் அமைந்த ஒரு உரை அவரது குரலில் நாடு பூராவும் ஒலித்தது.

இந்த உரை நிகழ்த்தப்பட்ட இரண்டே நாட்களில் கொழும்பில் பிரதமர் அலுவலகம் முன்பாக மீண்டும் ஒரு தற்கொலைக் கொலையாளியின் தாக்குதல். இந்தக் குண்டுவெடிப்புத் தகவல்கள் செய்தியாகிக் கொண்டிருக்கையில் குமார் பொன்னம்பலம் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியும் சேர்ந்து வெளியாகியது.

இந்தக் கொலையைச் செய்தவர்கள் தாமே என உரிமை கோரும் ஒரு அமைப்பின் உரிமை கோரல் தொலைமடல் செய்தியாளர்களுக்கு வந்து சேர்கிறது.

கொழும்பு முழுவதும் கல்கிசை, தெகிவளைப் பிரதேசமும் திடீர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுச் சுற்றி வளைக்கப்படுகிறது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்படுகின்றனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்த தமிழ்ச்சிறைக் கைதிகளின் மீது சிறைக்காவலர் அடுத்தடுத்து இரண்டு நாட்கள் தாக்குதல் நடாத்தினார்கள். பல கைதிகள் படுகாயமடைகின்றனர். ஜேசுதாசன், சிறீகுமார் ஆகிய கைதிகள் கொல்லப்படுகின்றார்கள். காயமுற்ற கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் கையில் விலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள். ஆண்டு முடியும் தறுவாயில் தேசத்தை உலுக்கும் இன்னொரு சம்பவமும் நடந்தது. புங்குடுதீவைச் சேர்ந்த சாரதாம்பாள் என்ற ஒரு குழந்தையின் தாயான இளம் பெண் கடற்படையினரால் பலதடவை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மொத்தத்தில் இந்தப் புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கத்தை ஒட்டி நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தும் பாலியல் வல்லுறவு, ஜனநாயக மறுப்பு, அதிகார துஷ்பிரயோகம், கருத்துச் சுதந்திர மறுப்பு, இனவெறி போன்ற அனைத்து மக்கள் விரோத செயற்பாடுகளும் இணைந்த ஒரு கூட்டுக் கலவையாகவே வெளிப்பட்டிருக்கின்றன. இந்நாட்டு மக்களது எதிர்காலம் அதன் இளம் சந்ததியின் படைப்பாற்றல் மிக்க உழைப்புச் சக்திக்கு ஏற்படப் போகும் கெதி, இங்கு வாழும் ஒடுக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் இனங்களின் அரசியல் விடுதலைப்போராட்டத்தின் எதிர்காலம், பெண்களின் சமத்துவமானதும் அச்சமற்றதுமான உயிர்வாழ்தலுக்கான உரிமை என்ற அனைத்திற்கும் ஒரு அச்சுறுத்தலாகவே எமது நாட்டின் புத்தாயிரமாம் ஆண்டு அமையப் போகின்றது என்ற சமிக்ஞையைக் காட்டுவது போல இவையனைத்தும் நடந்து முடிந்திருக்கின்றன.

புலிகள், அரசாங்கம் உட்பட்ட அனைத்து அரசியல் சக்திகளும் இந்த நாட்டு மக்களுடைய நிம்மதியான எதிர்காலத்திற்கு - இந்தப் புத்தாயிரம் ஆண்டிலும் நம்பிக்கை தரக்கூடியவர்களாக இருக்க மாட்டார்களா என்ற எதிர்பார்ப்பிற்கு - எந்த நேர்ப்படியான பதிலையும் தருவதாக இச்சம்பவங்கள் இருக்கவில்லை.

மக்கள், ஜனநாயக அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும் தம் எதிர்கால சந்ததியை ஆற்றலுள்ள ஒரு சந்ததியாக புதிய நூற்றாண்டில் நடைபோட வைக்கவும் விரும்புகிற மக்கள் அனைவரின் முன்னாலும் உள்ள ஒரே பணி, ஒரே செயல் இதுதான்.

யாரையும் நம்பியிராது தாமே தமது உரிமைகட்காகப் போராடத் தயாராகுதல். ஆம், அது ஒன்று மட்டும் தான் நம்பிக்கை தர உள்ள ஒரே வழி!

# வென்றது வென்றது வென்றது எப்படி?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகள், உலகம் முழுவதையும் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தியுள்ளன. யாழ் மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா வெற்றியீட்டி-யதென்பது, அனைத்துத் தரப்பின-ராலும் ஜீரணிக்கப்பட முடியாத ஒன்றாகவே கருதப்படுகின்றது. வடக்குக் கிழக்கின் ஏனைய பகுதிகளில் ரணில் வெற்றியீட்ட, யாழ்ப்பாணத்தில் மட்டும் சந்திரிக்கா வெற்றியீட்டியுள்ளார்.

யாழ் குடாநாட்டில் தேர்தல் பிரச்சார கூட்டமெதுவும் நடைபெற-வில்லை. சுவரொட்டிகள் ஒட்டும், கிழிக்கும் வேலைகள் மட்டும் நடைபெற்றன. ஈ.பி.டி.பியும், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் சந்திரிக்காவுக்கு ஆதரவாகவும், ரெலோ ரணிலுக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் செய்தன. யாழ் குடாநாட்டில் சந்திரிகா வெற்றி-யீட்டியதைப் பார்த்தால், ஈ.பி.டி.பி-யினரின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து யாழ் மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்துள்ளார்களா அல்லது தமிழ்க் கட்சிகள் கூறுவது போல் சந்திரிக்கா தான் இனப் பிரச்சினை-யைத் தீர்க்கக் கூடிய ஒரேயொருவர் என யாழ் மக்களும் நம்புகிறார்களா என்ற கேள்வி எம்முன் எழுகிறது.

யாழ்ப்பாணத்தில் ரணில் தான் வெற்றியீட்டுவார் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டபோதும் சந்திரி-காவே வெற்றியீட்டியுள்ளார். எனவே சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்தை யாழ் மக்களும் ஆதரிக்-கிறார்களா அல்லது தமிழ் மக்களுக்கு பிரச்சினை எதுவுமில்லை புலிப் பயங்கரவாதம் தான் உள்ளது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று யாழ் மக்களும் சொல்கிறார்களா? இவை கேள்விகள்.

கூறப்பட்ட எவையுமே காரணங்களல்ல. யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்டவற்றில் 80 வீதமான வாக்குகள் கள்ள வாக்குகளே என்பதை இந்தத் தேர்தல் முடிவுகளைக் கொண்டு சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

யாழ் மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புக் குழு (C.M.E.V) அவதானித்த விடயங்களிலிருந்து உதாரணத்திற்கு சிலவற்றை மட்டும் இங்கே கூறலாம். தேர்தலுக்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்திலுள்ள பிரதானமான ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் சாராயம் பெட்டி பெட்டியாக வந்து இறங்கி விட்டது. தீவுப் பகுதியிலும் வலிகாமம் வடக்கிலும் வாக்காளர் அட்டைகள் பணம் கொடுத்து வாங்கப்-பட்டுள்ளன. இறந்தவர்களினதும் வெளிநாடு சென்றோரினதும் வாக்காளர் அட்டைகளைச் சேகரித்துச் சென்று கொடுத்து வேலை வாய்ப்பு கேட்டுள்ளனர் சில இளைஞர்கள். வலிகாமம் வடக்கில் கடமையில் ஈடுபட்டிருந்த தேர்தல் அதிகாரிகளிடம், நண்பகல் 12 மணி வரை வாக்களிக்காதோரின் விபரங்களை தெரியப்படுத்துமாறு கட்சி-யொன்றினால் கேட்கப்பட்டிருந்தது.

மல்லாகம் மகா வித்தியாலயத்-திற்கு வாக்காளர் அட்டையின்றி பெயரையும், வாக்காளர் இடாப்பு இலக்கத்தையும் எழுதிக் கொண்டு சில பெண்கள் வந்தனர். தேர்தல் கண்காணிப்புக் குழுவினரும் பொலி-ஸாரும் திகைத்தனர். இந்த பாமர மக்களுக்கு எப்படி வாக்காளர் இடாப்பு இலக்கம் தெரிந்தது என தலையைப் பிய்க்காத குறையாக அவர்கள் கொண்டு வந்த துண்டுகளை வாங்கிக் கொண்டு, அவர்களிடம் பெயரைக் கேட்ட போது அவர்கள் சொன்ன பெயர்களும் கொண்டு வந்த துண்டி-லிருந்த பெயர்களும் மாறுபட்டிருந்தன. இவர்கள் அனைவரும் திருப்பியனுப்-பப்பட்டனர். மல்லாகம் மகா வித்தி-யாலயத்திற்கு மாலை 3 மணியளவில் மினி பஸ்ஸில் வந்திறங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்றிடம் அடையாள அட்டையைக் கேட்டபோது அவர்கள் தம்மிடம் அடையாள அட்டை இல்லையென்று சொன்னார்கள். அங்கு நின்ற தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் அடையாள அட்டை இல்லாமல் இளைஞர்களாகிய நீங்கள் எப்படி நடமாடுகிறீர்கள் என்றனர். அங்கு நின்ற பொலிஸார் தமக்கு இன்று இவர்களிடம் அடையாள அட்டை பரிசீலனை செய்வதற்கு அதிகார-மில்லை என்றனர். பின்னர் இவர்கள் அனைவரும் வாக்களிக்க அனுமதிக்-கப்பட்டனர். தெல்லிப்பளை புனர்-வாழ்வு நிலையத்தில் மூன்றாம் முறையாக வாக்களிக்க வந்த ஒரு பெண்மணியிடம் உங்கள் கணவரின் பெயர் என்ன என்று தேர்தல் அதிகாரிகள் கேட்ட போது அவர், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் நான் போகிறேன் என்று அழுதவாறு சென்று விட்டார்.

யாழ் சென் ஜேம்ஸ் பாடசாலை-யில் முகவராகச் செயற்பட்ட இளை-ஞருக்கு சுமார் 16 வயதிருக்கும். இவருக்கு கையொப்பமிடக் கூட தெரியாது. முகவராக கடமையாற்றிய படிவத்தை தேர்தல் அதிகாரிகளே நிரப்பி விட்டு இவரிடம் கைநாட்டு வாங்கிக் கொண்டனர். இவர் தனக்கு 300 ரூபா பணமும் கசிப்பும் கிடைக்கும் அதற்காகத் தான் வந்துள்ளேன் எனக் கூறினாராம்.

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

சரி, யாழ்ப்பாணத்தில் சந்திரிகா எப்படி வென்றார்?

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | யாழ்ப்பாணத்தில் கிடைத்த வாக்கு வீதம் | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| ஹரிஸ்சந்திர விஜேதுங்க | 815 | 2.2% | 15 |
| நந்தன குணதிலக | 413 | 0.1 | 20 |
| ஆரியவன்ச திசாநாயக்க | 384 | 9.5 | 01 |
| கமால் கருணாதாச | 486 | 4.2 | 12 |
| அல்விஸ் வீரக்கொடி | 402 | 10 | 01 |
| ரெனிசன் எதிரிசூரிய | 820 | 3.8 | - |
| ரஜீவ விஜேசிங்க | 1368 | 5.45 | 07 |
| ஹட்சன் சமரசிங்க | 551 | 7.6 | 03 |
| மஹிமான் ரஞ்சித் | 1862 | 0.8 | - |
| மொத்தம் | 7101 | 6.5 | |

**ஆரியவன்ஸ திசநாயக்காவுக்கும் அல்விஸ் வீரக்கொடிக்கும் யாழ்.மாவட்டத்தில் தான் அதிகூடிய வாக்குகள் போடப்பட்டிருந்தன.**

யாழ் மாவட்டத்தில் சந்திரிகா, ரணில், வாசு, அப்துல் ரசூல் தவிர்ந்த ஏனையோருக்கு கிடைத்த வாக்கு-களைக் கொண்டு நாம் யாழ் மாவட்டத் தேர்தல் எவ்வாறு நடைபெற்றது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகள் யாழ்ப்பாணத்தில் கிடைத்த வீதம் நிலை

சந்திரிகா, ரணில், வாசு, அப்துல் ரசூல் தவிர்ந்த ஏனையோர் யாழ் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 6.5 வீதமான வாக்கு-களைப் பெற்றுள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால் ஆரியவன்ச திசாநாயக்க, அல்விஸ் வீரக்கொடி போன்றோர் ஏனைய மாவட்டங்களை விட யாழ் மாவட்டத்-திலேயே அதிகப்படியான வாக்குக-ளைப் பெற்றிருப்பது தான். இவர்கள் தமது சொந்தத் தொகுதிகளில் பெற்ற வாக்குகளை விட கூடுதலான வாக்கு-களை யாழ் மாவட்டத்தில் பெற்றுள்-ளனர்.

இந்த வேட்பாளர்கள் கறுப்பா, சிவப்பா என்றே வாக்களித்தவர்கள் அறிவார்களா?

ஹரிஸ்சந்திர விஜேதுங்க போன்ற தீவிர இனவாதிகளுக்கு வாக்களித்-ததன் மூலம் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. ஏனையோர் அனை-வரும் வந்தேறு குடிகள். இவர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்பதை வாக்களித்-தவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? அல்லது எதிரிகளையும் மன்னிப்போம் என்ற மனப்பான்மையில் இவர்கள் வாக்களித்துள்ளனரா?

ஆனால் உண்மையில் மேலே

- எழுவான்

## கலை ...

அமைத்திருந்தோம்".

நடனம் ஆடுபவருக்கு உடல் தான் ஆயுதம். வயதாகும் போதே அதற்கேற்ற முறையில் நடன மணிகள் தங்கள் நடனத்தை அமைத்துக் கொள்வது அவசியமா அல்லது எப்போதும் போலவே ஆடி வரலாமா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

"வயது என்பது நிச்சயம் சில அசைவுகளைக் கட்டுப்படுத்தும் தான். ஏனெனில், 20 வயதில் துள்ளும் உடல் நிலை 50 வயதில் வர முடியாது. பிரயாசை பார்வையாளருக்கு அசதியை ஏற்படுத்தும். எனவே தன் நிலை பற்றி அறிந்து அதற்கேற்றாற் போல வேடமிட்டு மேடை ஏறலாம். நான் தசாவதாரத்தில் வெறும் அவதாரமாக மட்டும் தான் வேடம் ஏற்றேன்."

பெண்களின் கலை பல நேரங்களில் பல காரணங்களால் தடைப்படுவது பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

இது முற்றிலும் சரிதான். எனக்கு நாதப்பிரம்மம் கணவராக அமைந்தார். எனவே என்னுடைய தவம் கலையவில்லை. வாழ்க்கையின் தடைகளை அன்பினால் வெல்லலாம் என்பது என் கருத்து. எதிராளிக்குத் தன் நிலையை எடுத்துரைப்பது, அல்லது அவரின் பெற்றோருக்குப் புரிய வைப்பது என்று பல வழிகளிலும் முயன்று கலையைப் பெண்கள் தொடர வேண்டும் என்பது எனது ஆசை"

சந்திப்பு: க்ருஷாங்கினி

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 11.01.2000